www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 11 | டிசம்பர் 2004 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 75

# புலிகளின் அவசர அழைப்பை ஜனாதிபதி ஏற்க வேண்டும்!



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை மீள யுத்தத்தைத் தொடங்கப் போவதற்கான அறிவித்தலாகக் கொள்ளப்பட்ட வேண்டும் என்பதுடன் அவ்வாறு புலிகள் இயக்கத்தினால் யுத்தம் தொடங்கப்பட்டால் அதனை நியாயமானதென சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் அவ் இயக்கம் கொண்டுள்ளது என்று முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணதிலக்கா கூறியுள்ளார். இவர் இப்போது சமாதானம் பற்றி உச்சரித்தாலும் காலஞ்சென்ற லலித் அத்துலத்முதலி பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது விமானத்திலிருந்து தமிழ்ப்பகுதிகள் மீது பல வகைக் குண்டுகளை பொழிந்தமைக்கு பொறுப்பாக இருந்தவர் என்பது நினைவுபடுத்தப்பட்ட வேண்டியதாகும். அத்தகைய ஒருவரே மா வீரர் தின உரைக்கு வியாக்கியானம் கூறி உள்ளார்.

த. வி. பு. இயக்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்திற்கான யோசனைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்காமல் அரசாங்கம் தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டிருந்தால் போராட்டத்தை மீள ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய 'உள்ளக' சுயநிர்ணய உரிமை தொடர்பாக கருத்தொருமைப்பாடு எதுவுமில்லாத இவ்வேளையில் நிரந்தர தீர்வு பற்றிய பேச்சுவார்த்தை என்ற பொறிக்குள் அகப்பட முடியாது. அதேவேளை தமிழ் தேசிய இனத்திற்கு வழங்கப்படவேண்டிய உரிமைகளை பற்றி தெற்கின் பிரதான அரசியல் கட்சிகள் தங்களது கொள்கை நிலையில் எதனையும் கொண்டிருக்க வில்லை என்பதனையும் மாவீரர் தினஉரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுவே பிரபாகரனின் உரையின் மிகவும் முக்கியமான பகுதியாகக் கொள்ளப்பட வேண்டும்.



அத்துடன் மாவீரர் தின உரை என்பது ஒட்டு மொத்தமாக பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும் படி அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்ட அவசரமானதும் அவசியமானதுமான அழைப்பாகும் என்று கொள்ளப்பட வேண்டும். ஐ. சு. ம முன்னணி அரசாங்கமோ, ஜனாதிபதி சந்திரிகாவோ புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி திடமான முடிவெதனையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. ஆக்கபூர்வமான முடிவுவெதனையும் மேற்கொள்ளாமல் இருப்பதையே தந்திரோபயமாகக் கொண்டே அரசாங்கம் காலத்தைப் போக்கி வருகிறது.

## ஐக்கிய தேசிய கட்சி ஒதுங்கியிருக்க முடியாது

பழமைவாத தமிழ்த் தேசிய வாதிகள் குறிப்பாகத்தமிழர் கூட்டணிக்கும் தமிழ் காங்கிரசிற்கும் ஐ. தே. கட்சி மீது எப்போதும் ஒரு குளிர்ச்சி மிக்க மெதுவான அணுகுமுறை இருந்த போதும் இவ்வருட மாவீரர் தின உரையில் ஐ. தே. கட்சியினுடைய அரசியல் தந்திரோபாய அணுகுமுறைகள் தோலுரித்துக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடியதாகும். அதேபோன்று சுதந்திரக்கட்சியினுடைய, ஜே. வி. பியினுடைய பேரினவாத நிலைப்பாட்டையும் அவ்வுரை எடுத்துக்காட்டத்தவறவில்லை. ஜே. வி. பியினுடைய குழப்பமான போலி இடதுசாரி அடையாளம் பற்றியும் விமர்சிக்கப்பட்டுள்ளது. இவை பற்றி நேர்மையான இடதுசாரிகள் மாக்சிச லெனினிசப் பொதுவுடமைவாதிகள் ஏற்கனவே விளக்கமாகக் கூறியுள்ளனர்.

தந்திரோபாய ரீதியாக தமிழர் பிரச்சினையில் சமாதனத்திற்கான அணுகுமுறையைக் கொண்டதாக ஐ. தே. கட்சி காட்டிக் கொண்ட போதும் அதன் உண்மைத் தன்மை எல்லோரும் அறிந்த விடயமே. ஐ. ம. சு. மு. அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் ஆதரவளிப்பதாக

தொடாச்சி 12ம் பக்கம்

# இ. தொ. கா வின் இழுபறி தொடர்கிறது

## அமைச்சர் பதவியா? மேல் கொத்மலைத் திட்டமா?

மேல் கொத்மலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இ. தொ. கா தலைமை நேரத்திற்கு நேரம் வித்தியாசமான கருத்துக்களை தெரிவித்து வருவதால் அரசாங்கம் செய்வதறியாது இருப்பதாக தெரிகிறது. அதாவது முன்பு அத்திட்டத்தை எதிர்த்து வந்த இ. தொ. கா. ஐ. ம. சு. மு. அரசாங்கத்துடன் இணைந்து ஒரு முழு அமைச்சையும் ஒரு பிரதியமைச்சையும் பெற்றுக் கொண்ட பின்னர் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சம்மதம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகின. இ. தொ. கா தரப்பில் கருத்து தெரிவித்த ஆர். யோகராஜன் மேல் கொத்மலை திட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்த இ. தொ. கா. இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் யொக்ஸ் போர்ட் மாற்றுத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்தால் இணக்கம் தெரிவிக்கும் என்று கூறிவந்தார்.

மேல் கொத்மலைத்திட்டத்திற்கான நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டு விட்டதாக செய்திகள் வெளிவருகின்ற அதேவேளை இ. தொ. கா. இன்னும் பூரணமாக இணக்கம் தெரிவிக்கவில்லை என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

இ. தொ. க விற்கு இன்னொரு அமைச்சு பதவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதாவது சிவில் விமான சேவைகள் போக்குவரத்து பொது சேவைகள் வீடமைப்பு ஆகியவற்றை வழங்கும் படி இ. தொ. கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தொடர்ந்து கேட்டு வருவதாகவும் அதில் சிவில் விமான போக்குவரத்து மட்டும் வழங்கப்படலாம் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சு பதவியில் மட்டும் ஆறுமுகன் தொண்டமான்

தொடர்சிசி 12ம் பக்கம்

# யசீர் அரபாத்திற்கு புரட்சிகர அஞ்சலி



பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரும் ஜனாதிபதியுமான யசீர் அரபாத்தின் மறைவு தாயகத்தை மீட்டெடுத்து நிலை நிறுத்தப் போராடி வரும் பாலஸ்தீன மக்களுக்கும் அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கும் பேரிழப்பாகும். அவரது இழப்பை ஈடு செய்வதென்பது பலஸ்தீன விடுதலைப் போராட்ட இயக்கங்களின் விட்டுக் கொடுக்காத உறுதி மிக்க கொள்கையாலும் ஐக்கியத்தினாலும் மக்களது போராட்ட திட சங்கற்பத்தாலுமே சாத்தியமாக்கக் கூடியதாகும். அதேவேளை அவரது மறைவு உலகின் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் மக்களின் விடுதலைப் போராட்டப் பயணத்திற்கும் இழப்பாகவே கொள்ள முடியும். பலஸ்தீன மக்களின் விடுதலை லட்சியத்தைச் சுமந்து நின்று அதற்குத் தலைமை தாங்கிப் போராட்ட வாழ்வு வாழ்ந்து வந்த யசீர் அரபாத்தின் மறைவுக்கு புதிய ஜனநாயக கட்சி தனது புரட்சிகர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

யசீர் அரபாத்தின் மறைவு குறித்து புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் இப்படி குறிப்பிட்டுள்ளது. மேலும் அச் செய்தியில் யசீர் அரபாத்தின் துப்பாக்கி ஏந்திய விடுதலைப் போராட்ட வாழ்வும் தலைமைத்துவமும் நாடு பறிக்கப்பட்டு நாதியற்ற அகதி வாழ்வு வாழ்ந்து வரும் பல லட்சம் பலஸ்தீன மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விடுதலை லட்சியத்தின் அடையாளச் சின்னமாகவும் திகழ்ந்து வரச் செய்தது. அத்தகைய நிலையில் யசீர் அரபாத்தின் மறைவு ஒரு பெரும் இடைவெளியை ஏற்படுத்திவிட்டது. யசீர் அரபாத் பலஸ்தீன மக்களுக்கு மட்டுமன்றி ஏகாதிபத்தியத்திற்கும் ஆளும் அதிகார வெறி கொண்ட சக்திகளுக்கும் எதிராகப் போராடி வரும் கோடிக்கணக்கான உலக மக்களுக்கு நம்பிக்கை தரும் ஒரு போராட்டத் தலைவராக இருந்தும் வந்தார். அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தாலும் அதன் எடு பிடி நாடான இஸ்ரேலிய சியோனிசவாத ஆளும் வர்க்க சக்திகளாலும் எதிர்த்து வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலையில் தளராத போராட்ட நிலைப்பாட்டை முன்னெடுத்தும் வந்தார். அமெரிக்க இஸ்ரேலியக் கூட்டுச் சதியாலும் வெறித்தனமான ஆக்கிரமிப்பாலும் பலஸ்தீன மக்கள் நாளாந்தம் கொன்று குதறப்பட்டு வரும் சூழலிலும் பலஸ்தீன மக்கள் தமது விடுதலைப் போராட்டத்தில் இறுதி வெற்றியைப் பெற்றே தீருவார்கள். அப்போது யசீர் அரபாத் போராடி.வந்த இலட்சியக் கனவு நிறைவே றவே செய்யும் எனவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருமலையில் இனவெறியைத் தூண்டி

## அரசியல் லாபம் பெற முயற்சி

திருகோணமலையில் தமிழ் சிங்கள மக்களிடையே மோதல்களை உருவாக்கும் இனவெறிச் சம்பவங்களை உருவாக்குவதில் பேரினவாத ஜே.வி. பி யினர் முன்னின்று வருகின்றனர். சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களிடையே ஐக்கியம் சமத்துவம் புரிந்துணர்வு என்று போலித்தனமாகப் பேசிக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாத வெறியைக் கிளப்பி விடுவதில் ஜே.வி.பி முன்னின்று வருவது பகிரங்கமானதாகும். இதில் எவ்வித இரகசியமும் இல்லை என்பதை ஜே.வி.பி யின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டி வருகின்றன.

அண்மையில் திருமலையில் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்புவதற்கு முயற்சி எடுத்து நின்றது. சிங்கள மக்களிடையே பொய்யான தகவல்களை விதைத்து இனவெறி ஊட்டி இனவாத ஊர்வலம் ஒன்றை மாவீர தினத்தன்று நடாத்தியது. அது பொலிசாரால் இடைநடுவில் தடுத்து நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் சிலர் தாக்கப்பட்டு வீடுகளும் அடித்து நொருக்கப்பட்டு ஏரியூட்டப்பட்டன. பதிலுக்கு சிங்கள மக்களும் தாக்கப்பட்டனர். கிரனேற் வீச்சு, துப்பாக்கி சூடுகளும் இடம் பெற்றன. இதில சிங்களவரான மினிவேன் சாரதியும் வேறொருவரும் கொல்லப்பட்டனர். அதே வேளை சில தமிழர்கள் தாக்கப்பட்டு படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பல தமிழ்க் குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி அச்சத்துடன் இருந்து வருகின்றனர். ஒரு நாள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டி ருந்த போதிலும் பதற்றம் தணியவில்லை. பின்னால் இருந்து தூண்டி வரும் சக்திகள் தமது கேடு கெட்ட இன வெறிக் கரங்களால் வேலை செய்து கொண்டே இருக்கின்றன.

தொடர்ச்சி 12ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பகல் வேஷம் போடும்
## மலையகத் தலைமைகள்

அரசியல் என்பது சாக்கடைக்கு சமமானது என்று வர்ணிக்கப்படுவதில் உண்மை உண்டென்றால் அது முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலுக்கு உரிய ஒன்றாகவே இருக்க முடியும். மலைய கத்தின் அரசியல் தொழிற்சங்க தலைமைகளை எடுத்து நோக்கினால் இது வெளிப்படையாகவே விளங்கக் கூடியதாகும். பொருளாதார அரசியல் பண்பாட்டு கல்வி ரீதியில் இன்னும் பின் தங்கிய நிலையிலேயே மலையகத் தமிழர் சமூகம் இருந்து வருகின்றது என்று கூற வந்தால் சில மெத்தப்படித் கனவான்களுக்கு பொத்தொன்று கோபம் வந்து விடும். இப்படி பின் தங்கியவர்கள் என்று குறிப்பிடலாமா? என்று சினந்து கொள்கிறார்கள். இவ்வாறானவர்கள் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்தார்கள் என்பது உண்மை தான். ஆனால் இவர்களை அளவு நாடாவாகக் கொண்டு பத்துலட்சம் மலையக மக்களின் இருப்பையும் வாழ்வையும் அளந்து விடமுடியாது.

ஒரே ஒரு அளவு கோல் போதுமானதாகும். மலையகத்தின் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் இன்றும் வலிமையுடன் இருக்கின்றமைக்கான காரணம் மலையக மக்கள் மத்தியில் விழிப்புணர்வுக்கான சிந்தனைகள் வெளிவரவில்லை என்பதேயாகும். இதற்குரிய பொருளாதார சமூகக் காரணங்கள் பின்புலமாகவும் இறுக்கமாகவும் இருந்து வருகின்றமையாகும். அதனை மலையகத் தலைமைகள் நன்கு பயன்படுத்தி வருகின்றன என்பதே உண்மையாகும்.

இ. தொ. கா. வும் அதன் தலைவவர் ஆறுமுகன் தொண்டமானும் 'ஐயா' வழியில் அரசியல் நடாத்தி அவர் இரண்டு பேரினவாதக் கட்சிகளின் ஆட்சிகளில் அங்கம் பெற்று மலையக மக்களுக்கு உரிய எதையும் பெறாது தனக்கும் தம்மவர்களுக்குரியதையும் பெற்று வந்துள்ளார். அதுவே இன்று வரை தொடர்கிறது. இதற்கு சற்றும் குறைந்தவர் அல்லத் தான் என்பதை ம.ம.முன்னனி யின் சந்திரசேகரன் நிருபித்து வந்துள்ளார். அவரும் பேரினவாத கட்சிகளின் இரண்டு அரசாங்கங்களிலும் அங்கம் பெற்று சீமானாகிக் கொண்ட தலைவர். ஆனால் அறிக்கைகள் பிரகடனங்கள் விடும் போது மலையக மக்களின் சார்பாகக் கனல் பறக்கும் வசனங்கள் பேசிக் கொள்வார். வாக்கு வங்கியை தக்க வைத்துக் கொள்ள எப்படிப் பேச வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டவர் சந்திரசேகரன். தனித்துவ அரசியல், மாற்று அரசியல் என்றெல்லாம் முழங்கிக் கொண்டே ஐ. தே. கட்சி அரசியலுக்கு ஆலவட்டம் பிடித்து நிற்பார்.

ஆறுமுகன் சந்திரசேகரன் ஆகியோர் என்தான் சொன்னாலும் யானைச் சின்னத்தையும் ஐ. தேசியக் கட்சித் தேர்தல் பட்டியலையும் விட்டுச் செல்ல மாட்டாத வீரர்களாவர். மற்றொரு மலையக அரசியல் மணியாகக் காட்டிக் கொள்பவர் புத்திரசிகாமணி. இரவில் கூட கோட்டுச் சூட்டுடன் நித்திரை கொள்வர். அவர் தேவைப்ப டும் போது ஐ. தே. கட்சியாக நிற்பார். பின்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தாவுவார். அதன் பின் "தீபாவளிக்காகத்" தியாகம் செய்து மீண்டும் ஐ. தே. கட்சிக்கு செல்வார். இவர்களைப் போன்று சதாசிவம், சென்னன் வேலாயுதம் என்ற பெயர்கள் எல்லாம் மலையக மக்களை "அப்படியே இருங்கள்" நாங்கள் எங்களை உங்களின் பெயரால் வளப்படுத்திக் கொள்கிறோம் என்றவாறே அரசியல் பகல் வேஷம் போட்டு மலையகத் தலைமைளாக இருந்து வருகின்றார்கள்.

இத்தகைய பகல் வேஷ முகமூடிகளை மலையக மக்கள் அரசியல் விழிப்புணர்வின் மூலம் அடையாளம் கண்டு கிழித் தெறிய முன்வராத வரை அவர்களின் அரசியல் மோசடிகளும் தகடுதத்தங்களும் நீடிக்கவே செய்யும். அவர்களுக்கு பாதபூசை செய்யும் புத்திஜீவிகள் கூட்டமொன்று தம் பணியைத் தொடரவே செய்யும். மலையகத் தமிழ் சமூகம் தனது தனித்துவத்தை நிலைநிறுத்தி ஒரு தேசிய இனம் என்பதை வலியுறுத்தி வழி நடக்க இத்தகைய ஏமாற்றுமப் பகல் வேஷம் போடும் மலையகத் தலைமைகளை நிராகரித்து சரியான நீண்டதூர அரசியல் மார்க்கத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்கான அர்ப்பணிப்புடன் செயல்படும் புதிய தலைமுறை இளைஞர் யுவதிகள் அணி வகுக்க வேண்டும்.

மணிமாறன் மஸ்கெலியா

# அச்சுவேலியில் இப்படி நடந்தது!

அச்சுவேலி மத்திய கல்லூரி வலி கிழக்கில் ஒரு முக்கியமான பாடசாலையாகும். கணவன் அதிபராகவும் மனைவி ஆரம்பபிரிவு பொறுப்பாசிரியையாகவும் கடமை புரியும் இக் கல்லூரியில் அவ்வப் போது சாதிய வக் ' கிர செயற்பாடு தொழிற்படத் தவறுவ தில்லை. அண்மைய உதாரணம் ஒன்று புதிய பூமிக்கு கிடைத்துள்ளது. அதே பாடசாலையில் மற்றொரு தம்பதியினர் ஆசிரியர்களாக உள்ளனர். அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த அவர்கள் தமது ஏக புத்திரிக்கு பூப்புனித நீராட்டு விழா நடாத்திய போது தமது சக ஆசிரிய குழாமிற்கு அழைப்பிதழ் கொடுத்தனர். அழைப்பிதழை ஏற்றுக் கொண்ட ஆசிரிய குழாத்தினர் அவ் விழாவிற்கு முதல் நாள் ஆரம்பபிரிவில் கடமையாற்றும் சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரை விழா நடாத்திய ஆசிரிய தம்பதியினர் வீட்டுக்கு அனுப்பி நாங்கள் நாளைக்கு வருகின்றோம் எங்களுக்கு நீங்கள் வீட்டில் செய்த சிற்றூண்டிகள் வழங்க வேண்டாம் சோடாவும் பிஸ்கட்டும் வாங்கி வைத்திருங்கள் எனக் கூறி விட்டு அடுத்த நாள் விழாவுக்குச் சென்றனர்.

இவ்வாறு சென்ற ஆசிரிய குழாத்தினருக்கு வீட்டில் தயாரித்த குளிர் பானமும், சிற்றூண்டிகளும் உபசரிப்புடன் வழங்கப்பட்டன. இதனை கண்ணுற்ற ஆசிரியர் குழாத்திற்கு முகங்கள் ஒடிக் கறுத்துக் கொண்டன. ஒருவரை ஒருவர் பார்த்து நெளியவும் செய்தனர். சிலர் அவற்றைத் தொடவே இல்லை. ஓரிருவர் பலகாரத்தை கையில் வைத்திருந்து விட்டு பலரும் பார்க்க வெளியில் வீசி எறிந்து விட்டுத்திரும்பினர்.

எப்படி இருக்கிறது ஆசிரியர்களின் மானோபாவம். சாதியும் தீண்டாமையும் இப்போது எங்கே இருக்கிறது எனக் கேட்பவர்கள் இச்சம்பவம் பற்றி என்ன சொல்வார்கள். " கல்வியும் பொருளாதாரமும் இருந்தால் சாதியம் தானாக மறைந்து விடும்" என்று கூறுவோருக்கு இவ் அச்சுவேலி ஆசிரியர் குழாமின் சாதிய வக்கிரச் செயல் சமர்ப்பணம்.

# அதிசயம் ஆனாலும் இது உண்மை.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் கோப்பாய் கோட்டத்தில் ஒரு பாடசாலையில் அதிசயம் ஒன்று நடைபெற்றுள்ளது. இதனால் யாழ் கல்வி சமூகத்தில் அதிர்ச்சியும் ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தின் வைத்தியசாலையில் நிரந்தர எழுது வினைஞராக கடமையாற்றிய பெண்மணி ஒருவருக்கு தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

பத்துவருடகால சேவை செய்தவர்களுக்கே சேவை மூப்பு அடிப்படையில் பதிவுகளின்படி நேர்முகப் பரீட்சை வைத்து உரிய ஆவணங்கள் உட்பட அதிபர் அதிகாரிகளின் சிபார்சுகளின் படியே தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதனால் ஏழு எட்டு ஒன்பது வருடங்களாக சேவை புரிந்து வந்த தொண்டர் ஆசிரியர்கள் நிய மனம் பெற வில்லை. அப்படி இருக்க வைத்தியசாலையில் எழுது வினைஞராகப் பணி புரிந்த ஒரு நிரந்த உத் தியோகத்தரான பெண்மணிக்கு எந்த அடிப்படையில் நியமனம் கிடைத்தது என்பது ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாக உள்ளது.

இவ்வாறு நியமனம் பெற்றவரின் கணவர் கோப்பாய் கோட்ட கல்வி அதிகாரியின் உதவியாளர் என்றும் நியமனத்திற்கான பதிவுகள் பேணப் பட்ட பாடசாலை கோப்பாய் நாவலர் பாடசாலை என்றும் ஆசிரி யர்கள் மத்தியில் பேசப்படுகிறது. இது பற்றி வடக்கு கிழக்கு ஆளுனரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு விசாரனை நடைபெறுவதாகவும் அறிய முடிகிறது. "அகப்பை பிடிப்பவர் நம்மராக இருந்தால் அடிப்பந்தி என்ன தலைப்பந்தி என்ன?" என்பது உண்மையேயாகும். நீதி நியாயம் உண்மை மனச்சாட்சி யாவும் புதைந்து கிடக்கும் ஒரு சமூகத்தில் இத்தகைய அதிசயம் மட்டுமன்றி இன்னும் எத்தனையோ. வெளிவராது அமுக்கப்பட்டு வருகின்றன.


புதிய பூமி

## 2005 சந்தா சேருங்கள்

சந்தாதாரர்கள் 2005ம் ஆண்டிற்கான ரூபா 200 அனுப்பி தமது சந்தாக்களைப் புதிப்பிக்குமாறும் புதிய சந்தா அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

வங்கி மூலம் அனுப்புவோர் கணக்கு இல:- 0672-21-2002634-6 சோ.தேவராஜா இலங்கை வங்கி கொழும்பு-11 சுப்பர் மார்க்கட்கிளைக்கு அனுப்பவும்.

தபால்மூலம் காசோலையாக அனுப்புவோர் நிர்வாகி புதிய பூமி எனக்குறிப்பிட்டு புறக்கோட்டை (Petta) தபால் நிலையத்திற்கு அனுப்பிவைக்கவும்.


**புதிய பூமிக்கு**

விடயதானங்கள் அனுப்புங்கள்
உங்கள் கருத்துக்களையும் தெரிவியுங்கள்

ஆசிரியர் குழு


**நிர்வாகி**
புதிய பூமி
47, 3வது மாடி
கொ.ம.ச.க.தொகுதி
கொழும்பு-11


# நாலு நடக்கும் உலக'லே

நற்குணன்

## குற்றமும் தண்டனையும்

நீதிபதி ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து மரணதண்டனை மீண்டும் உடனடியாக நடைமுறைக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. மரண தண்டனை தேவையா என்ற விவாதம் ஒருபுறமிக்க, உண்மையான குற்றவாளிகள் பெரும்பாலும் அகப்பட்டாத சூழ்நிலையில், அற்பத் தொகைகட்காகப் படு கொலைகளை நடத்த ஆயத்தமாகவுள்ள பாதாள உலக அடியாட்கள் உள்ள ஒரு நாட்டில் மரண தண்டனை பெரும் மாற்றத்தைக் கொண்டு வருமா? குறைந்த சம்பளமொன்றுக்ககாவும் இறந்தால் இலட்ச ரூபா இழப்பீட்டுக்காகவும் தாம் விரும்பாத ஒரு போரில் ஆயுதமேந்துமாறு எத்தனையோ பேரை வறுமை தூண்டுகிறது. எனவேபெரிய கூலிக்காகத் தூக்குக் கயிற்றில் தொங்க ஆள் பிடிப்பது இயலாத காரியமல்ல இந்தக் கொலைகட்குப் பின்னால் உள்ள பெரிய புள்ளிகள் என்றாவது அகப்பட்டதுண்டா? இலங்கையில் மரண தண்டனையை ஒழிக்க முதலிற் சட்டமியற்றப்பட்டது எஸ். டபிள்யூ ஆர்,டி. பண்டரநாயக்க ஆட்சியிலேயே தான். ஆயினும் அவரது கொலையையடுத்து அது மீள நடைமுறைக்குக் கொண்டுவரபட்டது.

இம் மாதிரி விடயங்களில் கணப்பித்தம் கணச்சித்தம் என்கிற மாதிரி திடீர் முடிவுகளை எடுப்பது ஒரு நிதானமான அரசாங்கத்திற்கு அடையாழமல்ல.

## காங்கிரஸ் நிறைவேற்றிய வாக்குறுதி.

சென்ற தேர்தல் பொடா சட்டத்தைத் நீக்குவதாக காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய மக்கள் முற்போக்குக் கூட்டனி வாக்களித்தது. அதன்படியே பொடா சட்டம் நீக்கப்பட்டது. என்றாலும் முன்பு பொடா சட்டப்படி பிடிக்கப்பட்டவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள் தொடரும். அது தவறாகப் பயன்படுத்தப்பட்டமையே என்ற கருத்தை வலியுறுத்தி ஏற்கெனவே உள்ள சட்டவிரோத நடவடிக்கைத் தடைச் சட்டத்தை (யூஏ.பி.ஏ) வலுப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொடாவின் கீழ் இருந்த சாட்சியம் தொடர்பான சில கட்டுப்பாடுகள் யூஏ.பி.ஏயில் இல்லாததால் தொலைபேசியை ஒட்டுக் கேட்டுப் பெறுகிற சாட்சியம் போன்றவை இப்போது நீதிமன்ற வழக்குகளில் ஏற்புடையனவாகும். அதுபோக, பொடாவின் கீழ்த் தடை செய்யப்பட்ட 32 இயக்கங்களும் யூஏ.பி.ஏ யின் கீழும் தடைசெய்யப்பட்டுள்ளன.

அரச அடக்கு முறைச் சட்டங்கள் ஒழிவதில்லை உருமாற்றம் பெறுகின்றன. அவ்வளவுதான்!

## மின் பொறியியலாளர்களின் தேசப்பற்று!

இலங்கை மின்சார சபைப் பொறியிலாளர்கள் நுரைசோலை, மேல் கொத்மலை திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தச் சம்மதியாவிட்டால் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக மிரட்டியுள்ளார்கள். இதே தேசப்பற்று இலங்கை மின்சார சபையில் நடந்த பயங்கர ஊழல்களிற் சுருட்டப்பட்ட பணத்தை மீளப்பெறுவது தொடர்பாகவும் குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று கோருமளவுக்கு ஏன் அவர்களை உந்தவில்லை? அரசாங்கம் அயல்நாட்டுத் தனியார் நிறுவனங்கட்கு மலிவு விலையில் மின்சாரம் வழங்குவதைக் கண்டித்து அவர்கள் ஏன் வேலை நிறுத்தம் செய்யமுன்வரவில்லை?

## காகிதப் புலி!

கருணாவை எதிர்த்துக் கட்டுரைகளை எழுதியதற்காக மெச்சப்படுகிற ஒரு போர் விவகார எழுத்தாளர், தான் மட்டக்களப்பில் போய் நின்று களநிலவரங்களை ஆராய்ந்து மக்களைக் கண்டு பேசியது போல ஓரிரு மாதங்கள் முன்பு ஒரு பெரிய நாளேட்டின் ஞாயிறு இதழில் தான் எழுதுகிற கட்டுரை ஒன்றில் எழுதியிருந்தார். இவர் ஏதோ கருணாவின் அடியாட்களை எல்லாம் விரட்டி அடித்து விட்டு மட்டக்களப்பில் வெற்றிக் கொடி ஏற்றி விட்டுத்தான் வந்திருக்கிறார் என்ற நினைப்பில் ஒரு நண்பர் மட்டக்களப்பிலிருந்து வந்த ஒருவரைக் கேட்டபோது அவர் "ஓ அவனா? எப்ப வந்தான், எங்க நிண்டான், எப்ப போனான் எண்டு யாருக்குந் தெரியாமல் சுவடே இல்லாம ஓடிப் போயிற்றான். இப்ப கொழுப்பில் நிண்டல்லா வீரங் கதைக்கிறான்" என்று சொல்லிச் சிரித்தார்.

மட்டக்களப்பில் கருணாவுக்குச் செல்வாக்கு அதிகமில்லை. ஆனால் இந்த மாதிரிப் புலுடா மன்னர்கள் கருணாவுக்கு எதிராகக் கிளம்பினால், கருணாவுக்கு ஒரு சிறிய அனுதாப அலை எழும் இடமுண்டு.

## சங்கர சம்போ, இந்த சாமியார் மீது வம்போ!

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் ஜகத்குரு ஜெயேந்திர ஸரஸ்வதி அவர்கள் அடியாட்களை வைத்துக் கொலை ஒன்றைச் செய்வித்தாகச் சந்தேகத்தின் பேரில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரைச் சிறைப் பிடித்ததை எதிர்த்து இந்து வெறியர்களின் நிறுவனமான விஷ்வ ஹிந்து பரிஷத் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளது. இந்தியக் குற்றவியல் சட்டப்படி கொலை ஒரு பாரிய குற்றம், அதற்குத் தூண்டுதலாக இருந்தாலும் அவர் மரண தண்டனைக்கு உட்படலாம். எனவே காஞ்சி காமகோடி பீடாதி சட்டப்படி முறையாக விசாரிக்கப்பட வேண்டும் என்பதற்கும் மேலாக எந்த நியாயமான கோரிக்கைக்கும் இடமிருக்க இயலாது.

பொலிஸ் விசாரனையின் போது சித்திரவதைக்கோ தடியடிக்கோ அவர் ஆளாக மாட்டார். ஏனெனில் அவர் ஒரு தலித்தோ கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரரோ அல்ல. அப்படியானால் இந்துத்துவவாதிகளின் கவலைதான் என்ன?

மனுதர்மத்தின் படி, பிராமணன் கொலை செய்தால் அவன் நாடுகடத்தப் படலாமே ஒழிய மரண தண்டனைக்குள்ளாகக் கூடாது. இந்த விதமான இந்து தருமம் கடைப்பிடிக்கப்படுவதையா விஷ்வ ஹிந்து பரிஷத் வேண்டுகிறது? ஓமென்று தான் நினைக்கிறேன்.

## தேடி வந்த செல்வம்

கனடாவிலிருந்து வெளிவருகிற மாக்ஸிய விரோத 'இலக்கிய' ஏடான காலம் சஞ்சிகை வெங்கட் சாமி நாதனுக்கு ற்றொரான்ற்றோ பல்கலைக் கழகத்தின் பேரில் ஒரு பரிசை வழங்குவித்ததில் முக்கியமான பணியை ஆற்றியது. இலக்கிய உலகில் நொபெல் பரிசுக்கு அடுத்த முக்கியம் வாய்ந்த அந்த மாபெரிய பரிசை வென்ற மாபெரிய இலக்கிய வாதியான வெங்கட்சாமி நாதனின் நேர் காணல் தமிழின் அதி உன்னத இலக்கிய சஞ்சிகையான காலத்தில் வந்தது. அதில் வெங்கட் சாமிநாதன் தான் என்றுமே மாக்ஸிய விரோதியாக இருந்ததில்லை என்றும் ஒரு வெடிகுண்டைப் போட்டிருத்தார். அதனால் யார் அதிர்ச்சியடைந்தாலும் காலம் ஆசிரியர் செல்வம் அதிரவில்லை.

சில மாதங்கள் முன்பு இலங்கை வந்தபோது வெங்கட் சாமிநாதன் சொன்னது உண்மையில்னல என்று அவருக்கு விளங்கப்படுத்தப்பட்டபோது அதை நம்புவது. காலம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரான செல்கரலத்துக்குக் கடினமாக இருந்ததாம் வெங்கட்சாமிநாதன் தான் என்றுமே மாக்ஸிய விரோதி அல்ல என்பது பெரிய புலுடாவா? அல்லது வெங்கட் சாமிநாதன் சொன்னது உண்மை என்று நினைத்ததாகச் செல்வம் சொன்னது பெரிய புலுடாவா?

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# விமர்சனங்கள் கொலைகளுக்குப்பின்

## நீதித்துறை என்ன செய்யப் போகிறது?

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய கொலையுடன் நீதித்துறை மேலும் அச்சுறுத்தப்படு வதை விளங்கிக் கொள்ள முடியும். வர்க்க சமூகத்தில் நீதித்துறையின் வரையறைகளை மிகவும் தெளி வாகவே புரிந்து கொள்ள முடியும். அவர் அவரது வீட்டில் வைத்து சுட் டுக் கொல்லப்பட்டார். குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாதாள உலக கோஷ்டியினரால் அவர் சுடப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளதுடன் சில சந்தே கநபர்களை கைது செய்து நீதிம ன்றத்திலும் ஆஜராக்கியுள்ளனர்.

ஏற்கனவே நீதித்துறையின் சீர் கேடுகள் பற்றி முன்னாள் உயர் நீதி மன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் அவர் ஓய்வு பெறும் தினத்தன்று ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி சந்திரிகா நீதித்துறையும், பொலிஸ்சேவையும் மாசடைந் துள்ளதாக தெரிவித்திருந்தார். இல ங்கையில் நீதித்துறையும் பொலி ஸ்சேவையுமே மோசடி நிறைந்த நிறு வனங்களாக இருப்பதாக சர்வதேச மன்னிப்பு சபை அதன் வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

அவ்வாறு கூறப்படும் மோசடி நடவடி க்கைகளுக்கு எதிர்ப்பு நடவடி க்கையாகவே மேல் நீதிமன்ற நீதிபதி கொல்லப்பட்டிருக்கலாம் என்று எண்ணிவிடலாகாது.

ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதி யாக இருந்தபோது பல முறை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அழுத் தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு ள்ளனர். அவர்களது வீடுகள் மீது கல்லெறியப்பட்டது. 1972 இற்கு பிறகு நீதித்துறை பல கட்டுப்பா டுளுக்குள்ளாகி வந்துள்ளதை அவ தானிக்க முடியும். 1972 இல் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் புதிதாக நிய மிக்கப்பட்டனர். அதேபோன்று 1978 இற்கு பிறகு (அரசியலமைப்பு மாற்றம் செய்யப்பட்டதும்) உயர்நீமன்ற நீதி யரசர்கள் புதிதாக நியமிக்கப்பட் டனர். நீதியரசர்களின் நியமனங்க ளில் சில புதிய முறைகள் கடைப்பிடி க்கப்பட்டன. அவை நீதித்துறையின் சுதந்திரம் பற்றிய சந்தேகங்களை எழுப்பின. நீதித்துறையில் பதவி உய ர்வுகள் வழங்கப்படும் போது கூட புதிய புதிய நடைமுறைகள் கடை ப்பிடிக்கப்பட்டன. இவ்வாறு பல வித த்திலும் தலையீடுகள் குறுக்கீடுகள் செய்யப்பட்டதால் நீதித்துறை பற்றிய பல சந்தேகங்கள் எழுந்தன. பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு எதிராக குற்றவியல் பிரேரணையை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்க ப்பட்டன.

இதன் இன்னொரு வளர்சியாகவே நீதியரசர் விக்னேஸ்வரன் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரின் குற்றச்சா ட்டுகளும் சர்வதேச மன்னிப்புச் சபை யின் அறிக்கையும் அமைகின்றன. அரசியல்வாதிகளின் தலையீடுகளை நீதித்துறை ஏற்காதபோது அரசியல் ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுவதுண்டு. அப்படிப்பட்ட அரசி யல் வாதிகளின் அனுசரனையுடன் இயங்கும் பாதாள உலக குற்றவா ளிகளுக்கு நீதித்துறை இணங்கிப் போகாதபோது , அரசியல் வாதிக ளினாலும் கைவிடப்பட்ட நிலையில் பாதாள உலக குற்றவாளிகள் நீதித் துறைக்கு எதிராக திரும்பிய உதார ணங்களை இதுவரை வேறு நாடுக ளில் தான் காண முடிந்தது. ஆனால் தற்போது மேல் நீதிமன்ற நீதிபதியின் கொலையுடன் அதனை இலங்கை யிலும் கண்டோம். அரச யந்திரம் சாதாரணமாக ஜனநாயக அடிப்பை டகளுடன் இயங்காது அராஜகமாக இயங்கும் போது குற்றவாளிகளை யும் வசதியாக அரவணைத்துக் கொள்கிறது. அந்த அரவணைப்பின் வளர்ச்சி அரசியலில் மட்டுமல்ல நீதி த்துறையிலும் பிரதிபலிக்கிறது.

இவ்விடத்தில் நீதிதேடி நீதிமன்ற ங்களுக்கு சென்ற பாதிக்கப்ப ட்டவர்கள் பலர் அச்சுறுத்தப்பட்ட தாக்கப்பட்ட கொல்லப்பட்ட சம்பவ ங்களையும் நினைவு கூர்வது நல் லது. அண்மையில் கூட சித்திர வதைக்குட்பட்ட ஒருவர் நீர் கொழு ம்பு மேல் நீதிமன்ற த்தில் சாட்சியம் கொடுக்கும் நாளை எதிர்பார்த் திருந்த நிலையில் சுடப்பட்டு பின் னர் அவர் இறந்து விட்டார். அத னால் அவ்வழக்கில் குற்றவா ளிக ளாக இருக்கும் பொலிஸ் அலுவ லர் கள் குற்றங்களிலிருந்து விடுதலை யாவதற்கு இடமுண்டு.

இதேபோன்று சில சட்டத்தரணிகள் கொல்லப்பட்டுள்ளனர், பலர் தாக் கப்பட்டுள்ளனர், பலர் காயமடை ந்துள்ளனர். மக்கள் பாதிக்கப்பட்ட போதும் சட்டத்தரணிகள் பாதிக்க ப்பட்டபோதும் அவற்றை பொருட் டாக கொள்ளவில்லை. தற்போது நீதிபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நீதித்துறை என்ன செய்யப் போகி றது? நீதித்துறை தாக்கப்பட்டு விட்டது என்பதற்காக எல்லா குற்ற வியல் வழக்குகளிலும் சந்தேக நபர் களாக இருப்பவர்களையும் சந்தே கமாக நடத்தமுடியாது. குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதியே என்ற ஊகம் தொட ர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டும்! நீதித்துறை 'சுயேட்சையாக' இயங்க வேண்டுமானால் நீதிபதிகள், சட்ட த்தரணிகள் பொலிசார் தனித்தனித் தீவுகளாக இயங்கக் கூடாது. மாறாக மக்கள் நலனையும் பாதிக் கப்பட்டவர்களின் நலனையும் அடிப் படையாக் கொண்டு மேற்படி மூன்று துறைகளும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். ஆகக்குறை ந்தது நீதிபதிகளும் சட்டத்தரணிகளு மாவது மக்களுடன் தொடர்புடைய வர்களாக புரிந்துணர்வுடன் செயற் பட வேண்டும்.

இந்த சமூகவியல் அடிப்படையை புரி ந்து கொள்ளாது நீதிபதியின் கொலைவழக்குச் சந்தேக நபர்க ளுக்கு சட்டத்தரணிகள் ஆஜரா காமல் விடுவது, நீதிபதிகள் கடுமை யாக நடந்து கொள்வது தூக்குத் தண்டணையை மீள அமுல் செய் வது நீதிபதிகளுக்கு பொலிஸ் பாது காப்பை பலப்படுத்துவது அவர்க ளுக்கு காப்புறுதி வழங்குவது போன் றன அர்த்தமுள்ள நடவடிக்கைக ளாகாது. இன்றைய முதலாளித்துவ நீதி நிர்வாகத்துறைகளில் முற்று முழுதான மக்கள் சார்பான நீதி நியாயத்தை எதிர்பார்க்க இயலாது. எனினும் மக்களின் நலன்கள் பாதிக் கப்படுவதை மௌனமாக இருந்து ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

—நமது விசேட நிருபர்—

# மலையகத் தலைவர்கள்

## பாராளுமன்றம் போவது ஏன்?

மலையக அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது இ.தொ.கா உறு ப்பினர்களோ ம.ம.மு உறுப்பினர் களோ பாராளுமன்றத்தில் இருக்க வில்லை. மலையக அபிவிருத்தி அமைச்சின் நிதி மலையகத்தமிழ் மக்களுக்கு தேவை இல்லையென்று நினைத்துவிட்டார்களோ என் னவோ அவர்கள் அப்போது பாரா ளுமன்ற சபையில் இருக்கவில்லை. பத்திரிகைகளில் அறிக்கை தொலை க்காட்சிகளில் பேட்டி தேர்தல் வந்தால் பணம் சாராயம் தேர்தல் முடிந்தவுடன் வெற்றி. பிறகு பத விகள் பட்டங்கள் வசதிகள் சொகு சுகள் டாம்பீகங்கள் இவையே பாரா ளுமன்ற அரசியல் வாதிகளின் லட்ச ணங்களாகி விட்டன.

எந்த மக்களின் வாக்குகளினால் பாராளுமன்றத்திற்கு தெரிவானோ ர்களோ அவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பாராளுமன்றத்தில் பேச ப்படும் போது சபையில் பிரசன்னமாக இருக்கவும் அம்மக்கள் சார்பாக கருத்துக்களை தெரிவிக்கவும் விரு ப்பதவர்களே பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நிலைமை அப்படி இருக்கும்போது மலையக வாக்காளர்களும் விதிவில க்கான வர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாவிட்டா லும் பாராளுமன்றத்தில் நடக்கும் விடயங்கள் பற்றிய அறிவு அவர்க ளுக்கு இருக்குமா என்பதே பிரச் சினை தான்.

### அரச ஊழியர்களின் நயவஞ்சக

# தொழிற்சங்கத் தலைமை

அரச ஊழியர்களின் தொழிற்சங்க ங்களின் தலைமைகள் மிகவும் பலவீனமானதாகவே இருக்கின்றன அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள வுயர்வு கோரி நடத்தப்பட்ட போராட் டங்கள் வெறும் சம்பிரதாய பூர்வமா கவே நடத்தப்பட்டன.

ஐக்கியப்பட்ட போராட்டமாக முன் னெடுக்கப்பட்ட வேண்டும் என்று அத்தலைமைகள் கூறியபோதும் இடதுசாரி அரசியல் கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்கு வெளிப்படையாகவே மறுப்பு தெரிவி த்துள்ளனர்.

அவ்வூழியர்கள் நடத்திய பகிஷ்கரி ப்புகளிலும் ஆர்ப்பாட்டங்களும் கல ந்து கொண்டு ஆதரவை தெரி விக்க முன்வந்த இடதுசாரி அரசியல் கட்சித்தலைவர்கள் தடுத்து நிறுத்த ப்பட்டுள்ளனர்.

அத்துடன் அரச ஊழியர்களின் சம் பளத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து இடதுசாரி கட்சிகள் நடத்தவிருந்த கூட்டங்களையும் நடத்த வேண்டாம் என்று அத்தொழிற்சங்கத் தலை மைகள் கேட்டுக் கொண்டுள்ளன. காரணம் அரசியல் கலப்பில்லாத தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ள னர். 70 சதவீத சம்பள உயர்வைக் கேட்டனர். அரசாங்கமோ அதன்வ ரவு செலவு திட்டத்தில் 30 சதவீத சம்பளஉயர்வை வழங்குவதாக கூறி அதனையும் 4 கட்டங்களாக வழங்கு வதென்று அறிவித்துள்ளது. அதற்கு எதிர்ப்பெதனையும் தெரிவிக்காது தொழிற்சங்கத் தலைமைகள் நிசப்த மாய் இருக்கின்றன.

இது சுத்தமான தொழிற்சங்கவாத மல்ல. அதைவிட மிகவும் அற்பமான சந்தர்ப்பவாதமும் காட்டிக்கொடுப்பு மாகும்.

### ஐ.தே.கட்சியின்

# சுயரூபம் அம்பலம்!

## ஜயவிக்கிரமபெரேரா கூறுகிறார்

பல தமிழர்களுக்கு ஐ.தே.கட்சி மீது ஒரு கண்மூடித்தனமான காதல். ஐ.தே.கசுட்சியும் சுதந்திரக்கட்சியும் ஒன்றுக்கொன்று குறைவான கட் சியில்ல என்பது அவர்களுக்கு சொன்னாலும் புரிவதில்லை, பட்டா லும் தெளிவேற்படுவதில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் பிளவை ஏற்படுத்திய பெருமை ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்ஹவையே சாரும் என்று பாரா ளுமன்றத்தில் பேசினார் குருநாகல் மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி ஜயவிக் கிரம பெரேரா. அவர் வடமேல் மாகா ணசபை முதலமைச்சர் பதவிக ளையும், மத்திய அமைச்சர் பதவிக ளையும் வகித்தவர். ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்களின் ஒருவ ராவார்.

சமாதான பேச்சுக்களை தொடக்கி புலிகள் இயக்க உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கெல்லாம் கூட்டிச் சென்றதால் தான் அவ்வியக்கத்தி லிருந்து கருணா விலகினார். அவர் விலகி அவ்வியக்கத்திற்குள் பிளவை ஏற்படுத்திய பெருமை ரணில் விக் கிரம சிங்காவையே சாரும் என்று அவர்குறிப்பிட்டுள்ளார். அப்படியென் றால் புலிகள் இயக்கத்திற்குள் பிள வை ஏற்படுத்தும் நோக்கில் ஐ.தே.க யின் ரணில் தலைமை செயற்பட்டு ள்ளதாகவே கொள்ள வேண்டும். அப்படியில்லை என்று ரணில் கூறு வாராக இருந்தால் அப்பேச்சை பேசி யதற்காக ஜயவிக்கிரம பேரேரா மீது ரணில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பாரா?

அது மட்டுமல்ல பிரபாகரனின் மாவீ ரர் தின பேச்சிற்கு ஐ.ம.சு.மு. அர சாங்கம் பொறுப்பான பதிலை கூற வேண்டும். என்று ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார் ஆனால் ஜயவிக்கிரமபெ ரேராவோ மாவீரர் தின உரையை 'டைம் பாம்' (காலம் குறித்து வெடி க்கும் குண்டு) என்று கூறுகிறார். இதற்காகவும் அவர் மீது ஐ.தே.கட்சி நடவடிக்கை எடுக்குமா?

மேற்படி இரண்டு பேச்சுகளையும் ஜயவிக்கிரம பெரேரா பாராளுமன் றத்திலேயே பேசியுள்ளார் அவை ஹன்சார்ட்டில் பதிவாகியிருக்கும். அது மட்டுமன்றி ஐ.தே.கட்சியின் இன்னொரு சிரேஷ்ட தலைவர்க ளில் ஒருவரான மஹிந்த சமரசிங்ஹ தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பிக் களை கட்டுப்படுத்தும் வகையில் பாராளுமன்ற நிலையியல் கட்டளை கள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று ஹெல உறுமயவும் ஜே.வி. பியும் விடுத்த கோரிக்கைக்கு ஆதர வளித்துப் பேசியுள்ளார்.

இவை ஐதே.கட்சி தமிழ் மக்களுக்கு ஆதரவானது என்ற தமிழ் மேட்டு க்குடி கனவான்களின் வெறும் கூட்டுக்கதை என்பதற்கு புதிய உதாரணங்களாகும்.

# சவால்களுக்கு முகம் கொடுக்க

# முன்னோடிகளில் இருந்து படிப்பினைபெறுவோம்!

தோழர் மணியம்- கே.ஏ.சுப்பிரமணி யம் மறைவுற்று இவ்வருட நவம்பர் 27ம் நாள் பதினைந்து வருடங்களா கின்றன. அவரது நினைவு மக்கள் மக்கள் மத்தியிலும் மாக்சிச லெனி னிச வாதிகளிடையேயும் பசுமைய டையதாகவே இருந்து வரு கின் றது. அந்தளவுக்கு தோழர் மணியம் இலங்கையின் பொதுவுடமை இய க்கப் பரப்பிலே உறுதியா கக்கால் பதித்து நின்று மக்களின் விடு தலை க்காகப் போராடி மறைந்தவர். மாக் சிச லெனினிச மாஒசேதுங் சிந்த னையின் தத்துவார்த்த அரசி யல் நிலைப்பாட்டிலும் அதன் புரட்சிகரப் போராட்டங்களிலும் முன்னி ன்று போராடி முன்னோடியாக நின் றவர். அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்து உறுதி அர்ப்பணிப்பு தியாகம் என்ப வற்றின் ஊடாக வழிநடத்து முன்னு தாரணம் காட்டிச் சென்றவர் தோ ழர் மணியம்.

இன்றைய தேசியச் சூழலும் சர்வ தேச நிலைமைகளும் தொழில ளார்கள் விவசாயிகள் இதர உழை க்கும் மக்கள், தேசிய இனங்கள் பெண்கள் உட்பட அனைத்து மக்க ளுக்கும் பாதகமான வற்றையே ஏற் படுத்தி வருகின்றன உலகமயமா தல் என்பதின் ஊடே தாராளமயம் தனியார்மயம் என்பனவற்றால் மக்க ளின் அன்றாட வாழ்வு வேகமாக நச்சுப்படுத்தப்பட்டு சீரழிக்கப்பட்டும் வருகின்றன. இத்தகைய சூழலுக்கு வழிவகை ஏற்படுத்தும் முகமாகவே கடந்த மூன்றுதசாப்தங்களில் மாக் சிசம் சோஷலிசம் என்பன திட்ட மிட்டு பலவீனப்படுத்தப்பட்டு தற்கா லிகப் பின்னடைவுக்கு ஆளாக்கப்ப ட்டது. ஏகாதிபத்தியத்தின் திட்டமி ட்ட சூழ்ச்சிகளும் திட்டங்களும்



நடைமுறையாக்கப்பட்டு மக்கள் மத்தியில் நம்பி க்கையீனங்கள் வளர்க்கப்பட்டன. சில பொதுவுட மைக் கட்சிகளின் தலைமைகளும் சோஷலிசத்தை நடைமுறைப்ப டுத்திய நாடுகளின் தலைமைகளும் வழிதவறி மாக்சிச- லெனினிசத் திற்கு துரோகமிழைத்துக் கொண் டன. அவற்றின் பாரிய விளைவு களை ஒவ்வொரு நாடு களினதும் பொதுவுடமை இயக்க ளும் புரட்சி கர போராட்ட சக்திகளும் பின்ன டைவுகளாக சவால்களாக எதிர் கொள்ள நேரிட்டது. இருப்பினும் யாவற்றுக்கும் முகம் கொடுத்து மாக்சிச லெனிசவாதிகளும் புரட்சி கர சக்திகளும் மாக்சிச திடசங்கற்ப த்துடன் புரட்சிகர இலட்சியங்களை முன்னெடுத்து வருகின்ற போக்கு சகல நாடுகளிலும் வேகம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது.

இத்தகைய சூழலிலே தான் பொது வுடமை இலட்சியத்தைத் தமது உயிர் மூச்சாகக் கொண்டு நமது முன்னே உறுதிமிக்க புரட்சிகரத் தடங்களைப் பதித்துச் சென்ற முன் னோடித் தோழர்களை நினைவு கூடர்ந்து அத்தகையோரின் வாழ்வு சிந்தனை செயல் என்பனவற்றிலி ருந்து அனுபவங்களையும் படிப்பினை களையும் பெறுவது அவசியமாகும் அத்தகையவர்களில் ஒருவரே தோழர் மணியம் ஆவார். அவரது 15வருட நினைவாக விரிவான நூல் ஒன்று வெளிவர இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியுடன் தோழர் மணியத்தின் நினைவுகளைப் பயன் உள்ள வழிகளில் நினைவு கூர்வோம்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வதற்கான காணிகள் வழங்கப்பட வேண்டும்!

## ஐ. தே.க- சிறிலங்கா.சு.க- ஜே.வி.பி தயாரா? குடைபிடிக்கும் மலையகத்தலைமைகள் கேட்பார்களா?

தோட்டத் தொழிலளார் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 20 பேர்ச்சஸ் காணி வழங்க வேண்டும் என்ற தீர்மான த்தை நிறைவேற்றுவதற்காக மத்திய மாகாணசபையில் ம.ம. முன்னணி உறுப்பினர் இராஜரட்ணம் கொண்டு வந்த பிரேரணைக்கு ஐ.தே .கட்சி உறுப்பினர்களோ ஐ.ம.சு. முன்னணி உறுப்பினர்களோ ஆதரவளிக்க முன் வரவில்லை. அதனால் அத்தீர்மானத்தை நிறைவேற்ற முடியாதிருக்கிறது.

மாகாணசபை அதிகாரங்களுக்குள் காணி உள்ளடக்கப்படவில்லை. அது மத்திய அரசாங்கத்தின் கீழ்வருகின்றது. மலையகத் தமிழ் மக்கள் தொடர்பாகவோ தோட்டத்தொழிலாளர்கள் தொடர்பாகவோ அவர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் என்று இரண்டு பெரிய கட்சிகளும் வாயளவில் ஏற்றுக்கொண்டாலும் நடைமுறையில் காணி பகிர்ந்தளிப்பு குடியேற்றம் என்பன பெரும்பான்மை இன மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கின்றன.

ஐ.தே.மு அரசாங்க காலத்தில் ராஜித சேனரத்தன காணி அமைச்சராக இருந்தபோது தோட்டத்தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 20 பேர்ச்சஸ் காணி வழங்கவேண்டும் என்பது அன்றை அமைச்சரவை அங்கீகரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அமைச்சரவை தீர்மானமொன்று அமைச்சரவையாலோ பாராளுமன்றத்தாலோ இர த்து செய்யப்படும் வரை வலிதில் இருக்கும் தோட்டத்தீர்மானம் இரத்து செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பேரினவாதிகள் இடமளிக்கப்போவதில்லை. இலங்கையை உருவாக்குவதில் மட்டுமன்றி இன்று கூட இலங்கை யின் தேசிய பொருளாதாரத்தில் பாரிய பங்களிப்பை செய்துவரும் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர். 200 வருடங்களுக்கு மேல் வரலாறு கொண்ட அவர்கள் தொடர்ந்து புறக் கணிக்கப்பட்டும் பிற்படுத்தப்பட்டும். வருகின்றனர் தொழிலாளர் வர்க்கம் என்ற ரீதியிலும் இனரீதியாகவும் பலவித மான அடக்குமுறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

தோட்டத்தொழிலாளர்கள் வாழும் குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலைமையில் (பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்ட லயன் அறைகளிலேயே அதிக மானோர் வாழ்கின்றனர்) இருக்கின்றன. அவர்களுக்கு ஒரு துண்டு நிலம் கூட இதுவரை சொந்தமாக இல்லை. அவர்களது வாழ்க்கை நிலையும் ஏனைய மக்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் மோசமான நிலைமையிலேயே இருக்கிறது. பிற்படுத்தப்பட்டிருக்கும் அவர்களின் வாழிடவசதிக்காக போராடுவது முக்கிய தேவையாகிறது. அதற்கு அடிப்படையாக அவர்களுக்கு கென காணிகள் வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டும்.

பேரினவாத, முதலாளித்துவ கட்சிகள தோட்டத்தொழிலாளர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளக்போவதில்லை. மாகாணசபையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் என்ற வெற்றுத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்காததிலிருந்து ஐ.தே .கட்சியும் ஐ.ம.சு.முன்னணியும் வெறும் வாக்குகளை பெறுவதற்காகவே நீலிக்கண்ணீர் வடிக்கும் என்பது மேலும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இருந்தும் மலையகத்தலைவர்கள் எனப்படுவோர் அக்கட்சிகளுக்கு சாமரை விசுவதும் மேடைகட்டி கொடுப்பதும் வாக்குகளை சேகரித்து கொடுப்பதையும் கைவிடப்போவதில்லை. ஏனெனில் அவர்களின் அடிமைத்தனம் ஒருபுறமிருக்க முதலாளிவர்க்க நிலைப்பாடுமே காரணமாக இருக்கிறது.

தோட்டக்காணிகளின் பூரணமான கட்டுப்பாடு அரசிடமே இருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படக் கூடிய அளவிற்கு தோட்டங்கள் தோறும் பயிர்ச்செய்யப்படாத காணிகள் இருக்கின்றன. பெருந்தோட்ட செய்கையை பாதிக்காமலே காணிகளை வழங்கமுடியும். பெருந்தோட்டச் செய்கையை அழிக்கும் வகையிலான பேரினவாத குடியேற்றங்கள் ஏற்கனவே செய்யப்பட்டன. தோட்டக்கம்பெனிகளும் லாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு பெருந்தோட்டக் செய்கையை அழித்தே வருகின்றன.

இந்நிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிவழங்கப்படுவதால் பெருந்தோட்டக்செய்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்கினால் அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தன்மையை இழ ந்து விடுவர்கள் என்பதாலும் காணி வேண்டும் என்பது ஒரு சிறு முதலாளி த்துவ வர்க்க கோரிக்கையாகும் என்பதாலும் அதனை முற்போக்கான கோரிக்கையாக கொள்ள முடியாது என்று சில புத்திஜீவிகள் எழுதிவருகின்றனர் தோட்டத்தொழிலாளர்களுக்கு காணி வேண்டும் என்பது அவர்களது வாழிடத்தை அமைத்துக்கொள்வதற்கான கோரிக்கை ஆகும்.

அது தனிச்சொத்துடைமையாகாது நவகாலனித்துவ முறையில் தொழிலாளர்வர்க்கத்தை இருப்பற்ற நாடோடிகளாக்குவது என்பது முதலாளித்துவ தந்திரோபாயமாக இருக்கும்போது தொழிலாளர்வர்க்க நடவடிக்கையாக இருக்கவேண்டும். •

— அழகேசன் —

# ஜே.வி.பி யின் தொழிற்சங்கமும் இன்னொரு அடிமை வியாபாரமும்

அட்டனில் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஜே.வி.பியின் அகில இலங்கை தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் 5வது மாநாட்டில் வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளும் பிரச்சினைகளைக்கான தீர்வும் பற்றி பேசாமல் புலிகள் இயக்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனைகளுக்கு எதிராகவே அச்சங்கத்தின் தலைவரும் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் பேசியுள்ளார். தோட்டத் தொழிலாளர்களை வைத்துக் கொண்டு பெரிய கங்காணிமார்கள் அடிமைவியாபாரம் செய்தது ஒரு வரலாறு. பின்னர் தோட்டத் தொழிற் சங்கத் தலைவர்கள் அவ்வடிமை வியாபாரத்தை புதிய வழியில் தொடர்ந்தனர். அவர்களது அரசியல் இருப்பிற்கான பேரம்பேச்சுக்குச் செல்வதற்கு தொழிற்சங்க அங்கத்துவப் பலத்தையும் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குப்பலத்தையும் பாவித்தனர். அந்த தொழிற் சங்கத்தலைவர்களின் தவறுகள் இயலாமைகள் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் அவர்கள் மீது வெறுப்படைந்திருந்தனர்.

பாராளுமன்றத்தில் ஆசனங்கள் சில வற்றை வென்றெடுத்த ஜே.வி.பி. அப்பலத்தை கொண்டு பல பாசாங்குகளை தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இராமலிங்கம் சந்திரசேகரின் உதவியுடன் அதன் தொழிற்சங்கத்திற்கு தொழிலாளர்களை திரட்டியது. அத்தொழிலாளர்களை அட்டன் நகரிலுள்ள ஒரு மண்டபத்திற்கு கொண்டு வந்து அவர்களின் கண்களை கட்டி விட்டு காட்டுக்குள் விட்டது போன்று விட்டுவிட்டு வடக்குகிழக்கில் இடைக் கால நிர்வாகம் அமைவதற்கு எதிராக தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. ஜே.வி.பி தமிழ்த் தொழிலாளர்களைக் கொண்டு சிங்கள பேரினவாத தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இது இன்னொரு வகையில் தோட்டத் தொழிலாளர்களை கொண்டு நடத்தும் அடிமை வியாபாரமாகும்.

தோட்டத்தொழிலாளர்கள் எல்லோரும் ஜே.வி.பியில் இணைந்துவிட்டால் அவர்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்று இராமலிங்கம் சந்திரசேகரன் பேசிவருகிறார். இந்த வரவு செலவுத்திட்டத்தில் தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு பெற்றுத்தருவதாக முன்பு கூறினார். வரவு செலவுத்திட்டத்தில் தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு பெற்றுக் கொடுக்க முடியாது என்பது அவருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் அவருக்கு அவ்வளவிற்கு அரசியல் தெரியும்.

தொழிற்சங்கத்திற்கு குறைவான சந்தாப்பணம் அறவிடுவது அல்லது சந்தாப்பணம் இல்லாமல் தொழிற்சங்கம் நடத்துவது என்பதெல்லாம் ஏமா ற்றுவித்தைகள். தொழிலாளர்கள் அவ ர்களின் தொழிற்சங்கத்தை உயிர் ப்புடன் வைத்திருக்க வேண்டுமானால் சந்தாப்பணம் செலுத்துவது அவசியம்.

சலுகைகளுக்காக தொழிற்சங்க அங்கத்துவத்தை பெற்றால் தொழிற்சங்க தலைமை சோரும் போது பேசாமலே இருக்க வேண்டிவரும்.

தோட்டத்தொழிலாளர்கள் மத்தியிலுள்ள சீரழிந்த சிலர் எப்போதும் தொழிற்சங்கமொன்றின் தோட்டக்க மிட்டி தலைவராக இருக்க விரும்புவார்கள். காரணம் தோட்டநிர்வாகத்திட மிருந்து சில சலுகைகளை பெறுவதற்காகும். அவ்வாறான சிலரை கொண்டே ஜே.வி.பி தோட்டங்களில் தொழிற்சங்கங்களை அமைத்திருக்கிறது. அதன் மூலம் அதனது இனவாத நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அதற்கு பரந்தளவில் எதிர்ப்பு காட்டப்பட்டும் வருகிறது.

# புத்திரசிகாமணியின் புதிய கண்டுப்பிடிப்பு

இப்போது இ.தொ.கா. வின் தலைவர்களில் ஒருவராக இருக்கும் வி.புத்திர சிகாமணி எம்.பி புதிய கண்டுப்பிடிப்பொன்றை செய்துள்ளார். அதாவது மலையகத் தமிழர்கள் மிகவும் பின்தங்கி இருப்பதால் மலையகச்சிறார்கள் வீடுகளில் வேலைக்கமர்த்தப்படுவதை தவிர்க்க முடியாது என்று கூறுகிறார். மலையகச்சிறார்கள் வீட்டு வேலைக் கமர்த்தப்படுவதற்கு மாற்றுத் திட்டமெதுவும் இல்லையா என்று ஒரு ஊடகவியலாளர் புத்திரசிகாமணி மிகவும் பொறுப்புவாய்ந்த தலைவரென நினைத்துக் கொண்டு கேட்டுவிட்டார். அதற்கு அவர் மேற்படி ஒரு கண்டுப்பிடிப்பையே செய்துவிட்டார்.

அவரும் அவரது சகாக்களும் மாகாணசபைகளிலும் பாராளுமன்றங்களிலும் தொடர்ந்தும் ஆடம்பரமாக அமர் ந்து இருப்பதற்கு மலையகச் சிறார்கள் தொடர்ந்து வீடுகளில் வேலைசெய்ப வர்களாகவும் மலையகச்சமூகம் பின்தங்கியதாக இருக்க வேண்டியது அவசியம். எனவே அவைக்குள் மாற்றுக்களை புத்திரசிகாமணி போன்றவர்களால் சிந்திக்கவே முடியாது.

மலையகச்சமூகம் அதன் தலைவிதியை தீர்மானிப்பதற்கு தானே கிளர்ந்தெழாவிட்டால் விடிவே கிடையாது, புத்திரசிகாமணிகளின் கண்டுப்பிடிப்புகளும் இருந்து கொண்டே இருக்கும்.

# மலையகப் பெண் தொழிலாளர்கள் கீழ்த்தரமாக நடாத்தப்படுகின்றனர்

நுவரெலியா கந்தப்பொளை போன்ற நகரங்களில் அதிகாலையில் பெண்கள் கியூவரிசையில் நிற்கிறார்கள். அங்குள்ள மரக்கறித் தோட்ட உரிமையாளர்கள் வந்து அவர்களுக்கு வேண்டியவர்களை வேலைக்காக தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்படாத பெண்கள் வீட்டிற்கு திரும்புகின்றனர். 20,30 கிலோ மீற்றர் தூரத்திலிருந்தும் பெண்கள் அதிகாலையிலேயே அந்நகரங்களுக்கு சென்று கியூவரிசையில் நிற்கின்றனர். வேலைக்கிடைக்காதவர்கள் வெறும் கையுடன் வீட்டிற்கு திரும்புகின்றனர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு தூர இடங்களுக்கு கொண்டு செல்லப்படுவர். பின்நேரம் 7 மணியளவில் காலையில் கியூவில் நின்ற இடத்தில் விடப்படுவர். அங்கிருந்து அவர்கள் அவர்களது வீடுகளுக்கு இரவில் செல்லவேண்டி இருக்கிறது. மீண்டும் அடுத்த நாள் காலையில் அங்கு வந்து கியூவில் நிற்க வேண்டும்.

இளமை, வடிவு திடகாத்திரம் என்பனவற்றை அடிப்படைகளாக கொண்டே பெண்களை மரக்கறித் தோட்ட உரிமையாளர்கள் வேலைக்கு எடுக்கின்றனர். மறுநாளும் அதே மரக்கறி தோட்ட உரிமையாளரிடம் வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதம் இல்லை. ஒவ்வொரு நாளும் கியூவரிசைக்கு வந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் மட்டுமே வேலையை பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பெருந்தோட்டங்களுக்கு வெளியில் சென்று வேலை செய்து தொழிலாளர்கள் அதிகம் சம்பாதிக்கின்றனர் என்று மலையகத் தொழிற் சங்கத் தலைவர்களும் சில படித்தவர்களும் கூறிவருகின்றனர். அவ்வாறு தோட்டங்களுக்கு வெளியில் சென்று தொழில் செய்யும் போது தொழிலாளர்கள் நடத்தப்படுகின்ற விதம் பற்றியும் அவர் கள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றியும் அவர்களுக்கு கவலை இல்லை. பெண்கள் கிராமங்களிலும் மரக்கறி தோட்டங்களிலும் கடைகளிலும் மிகவும் மோசமாக சுரண்டப்படுகின்றனர்.

பெண்கள் பல விதமாக அடக்கு முறைகளுக்கும் பாலியல் ஒடுக்கு முறைகளுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். மேற்படி மரக்கறி தோட்டங்களுக்கு தெரிவு செய்யும் முறை அடிமைகாலத்து முறையாகும். தொழில் தேடி செல்லும் பெண்கள் எப்படியாவது தொழில் கிடைத்துவிட்டால் போதும் என்ற நிலையில் எவ்வளவு கீழ்த்தரமாக இருந்தாலும் சகித்துக் கொள்கின்றனர். இது இன்னொரு புதிய வடிவிலான அடிமைத்தனமாகும்.

# நெறி தவறும் புத்த பிக்குகளை எந்தக் கட்சியில் இணைத்துப் பார்ப்பது?

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தினசார தேரர் வழமையான இன வாதநச்சை கக்க முயன்றார். அண் மையில் சுட்டுக் கொல்லப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அம்பேபிட்டியாவின் கொலையுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சம்மந்தப்படுத்தும் கருத்துக்களைக் கூறினார். பிரபாகரனு க்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்தமையையும், வத்தளை தமிழ் பெண் ஒருவருக்கு போதைப் பொருள் வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டமையும் ரத்தின சார தேரர் சுட்டிக்காட்டி மொட்டத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட முனைந்தார். அப்படியானால் நாட்டில் கொள்ளை, பாலியல் வல்லுறவு, கொலை முயற்சிகள் மற்றும் சட்டவிரோத செயல்களில் பௌத்த பிக்குமார் சிலர் ஈடுபட்டு வருகிறார்ள். அதற்காக சிறைகளிலும் வழக்குகளிலும் இருந்து வருகிறார்கள். அத்தகையோரை ஹெல உறுமயவின் உறுப்பினர்கள் என்றோ ஆதரவாளர்கள் என்றோ கூறலாமா? ஏனெனில் ஹெல உறுமய சுத்த பௌத்த துறவிகளின் கட்சி அல்லவா? கௌதம புத்தரையே அவமானப்படுத்தும் அளவுக்கு ஹெல உறுமயப் பிக்குமார் இனவாத நிலை அடைந்திருப்பதை எப்படி புத்த பெருமான் மன்னிப்பாரோ தெரியாது. இத் தனை பேரினவாதக் ஒடுக்கு முறைகள் இடம் பெற்றும் கண்திறவாத புத்தரைக் காட்டி எந்தப் புல்லுருவியும் தமது நிலைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம் அல்லவா? தர்மராஜ்சியம் வேண்டாம் சாதாரண பௌத்த தர்மத்தைக் கடைப்பிடித் தாலே போதுமானதாகும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

புதிய பூமி

Puthiya Poomi

சுற்று 11 டிசம்பர் 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 75

எஸ்.47,3ம மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,பாக்ஸ்:011-2473757

ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## வரவு செலவுத் திட்டம் அரிசி இல்லாத சமையல்

முதலாளித்துவ நாடுகளில் முதலாளி வர்க்கத்திற்கும், அதிகாரத்துவ முதலாளி வர்க்கத்திற்கும் சலுகைகளை உறுதி செய்யாமலும் மக்கள் மீது சுமைகளை சுமத்தாமலும் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதில்லை. வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே அதில் துண்டுவிடும் தொகையை பூர்த்தி செய்யும் நோக்கில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளையும் அத்தியாவசிய சேவைகளின் கட்டணங்களையும் உயர்த்துவது முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களின் திறமை. பின்பு வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் போது பேரளவில் 'சில சம்பள உயர்வுகளை' வழங்குவதும் அவர்களின் தந்திராலோசனையாகும்.

ஐ.க.சு.முன்னணி அரசாங்கம் அதனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தை கடந்த மாதம் சமர்ப்பித்துள்ளது. அவ் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு வழிகாட்டல்களையோ திட்டயோசனைகளையோ உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வழங்கவில்லை. வழமையாக அந்த இரண்டு நிறுவனங்களின் விருப்பத்திற்கு ஏற்பவே வரவு செலவு திட்டம் ஆக்கப்படும். அவற்றின் விருப்பத்தின் அடிப்படையிலேயே முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகமயமாதல் பின்தங்கிய உலகநாடுகளில் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த மாதம் இலங்கையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் உள் நாட்டிலேயே ஆக்கப்பட்டது என்று பெருமை பாராட்டப்படுகிறது. அந்தளவிற்கு இலங்கை சுதந்திரமடைந்து விட்டதா என்று ஆச்சரியப்படத் தேவை இல்லை. அந்நிறுவனங்களில் வழிகாட்டல்படி இலங்கையில் ஏகாதிபத்திய உலகமயமாதல் சரியாக முன்னெடுக்கப்படுவதற்கு ஏற்ற தகுதியை இலங்கையின் ஆளும் வர்க்கம் கொண்டிருக்கவில்லை. சமாதான நடவடிக்கைகளை சரியாக முன்னெடுக்க வில்லை என்பதாலும் அந்நிறுவனங்கள் இலங்கையை கைவிட்டு விட்டன. அதனால் வேறு வழியின்றியே வரவு செலவு திட்டம் ஆக்கப்பட்டது. வேறு வழியின்றி வரவு செலவு திட்டத்தை ஆக்கிவிட்டு அத்திட்டம் அந்நிறு வனங்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் என்றும் கூறப்படுகிறது. அதனால் ஏகாதிபத்திய பிடியிலிருந்து இலங்கை பொருளாதாரத்தை விடுவிக்கும் வரவு செலவு திட்டத்தையே நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம சமர்ப்பித்தார் என்று வியப்படையத் தேவை இல்லை.

முழுக்கமுழுக்க ஏழைக்களுக்குமானதும் பொருளாதார வளர்ச்சிக்குமான வரவு செலவுத்திட்டம் என்று நிதியமச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ ஜயசுந்தர தெரிவித்துள்ளார். 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் வாழ்க்கைக் செலவு குறைந்துவிடும் என்று நிதியமைச்சர் வாக்குறுதி அளித்துள்ளார். ஜே.வி.பி யினரோ இதனை தேசிய பொருளாதாரத்தை கட்டிவளர்ப்பதற்கான வரவு செலவு திட்டமென புகழ்ந்துள்ளதுடன் தாங்கள் அரசாங்கத்தில் இணைந்து ள்ளதால் செய்யப்பட்ட சாதனையாகவே இத்திட்டத்தை கூறுகின்றனர்.

உண்மையில் ஏழைகளுக்காகவே சமர்ப்பிக்கப்பட்ட திட்டமென்றால் பொருளா தார அபிவிருத்தியை நோக்கிய திட்டமென்றால் அதற்கான வளங்கள் எவை, தேவைப்படும் பணம் எப்படி கிடைக்கும். நிர்வாக பொறி முறை என்ன? என் பது பற்றி யெல்லாம் கதைக்காமல் இருக்கமுடியுமா? அவை பற்றியெல்லாம் வரவு செலவுதிட்டத்தில் எதுவுமே சொல்லப்பட வில்லை.

அரச ஊழியர்களுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ள 2500 ரூபா சம்பள உயர்வும் ஒரேயடியாக வழங்கப்படமாட்டது. பல கட்டங்களாக வழங்கப்படவுள்ளது. அவ்வுயர்வு போதாது என்பது ஒரு புறமிருக்க அதை வழங்குவதிலும் சீரா னமுறை கடைப்பிடிக்கப்படமாட்டாது. இது தெளிவில்லாதபோது அரசு ஊழிய ர்களின் தற்போதைய 8 மணித்தியாலய வேலை நேரம் 9 மணித்தியலயமாக அதிகரிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

வற்வரி (பெறுமதி கூட்டப்பட்வரி) அறவிடுவதிலும் நாண்கு வித்தியாசமான முறைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதனால் பலவிதமான நடைமுறை சிக்கல்கள் ஏற்படவுள்ளன. அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு அவற்றுக்கு 5 வீத வரி அறவிடப்படவுள்ளது. 12 பொருட்க ளுக்கு 18வீத வரி அறவிடப்படவுள்ளது. இது மக்களை ஏமாற்றுவதற்கான வரி அறவீட்டு முறைகளாகும். மக்கள் பாவிக்கும் அதிகமான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்ளாக இருக்கும் போதும் அவற்றுக்கு மாற றீடாக உள்நாட்டு பொருட்கள் இல்லாதபோதும் இறக்குமதி மீதான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவும் ஆகப் பெரும்பாலான மக்களை பாதிக்கும். பல பொருட்கள் இன்று எல்லா மக்களிடையேயும் பாவனைக்கு வந்து அவை ஏறக்குறைய அத்தியாவசிய பொருட்களாகிவிட்டன. அவற்றுக்கு கூடிய வரியை அறவிடுவது என்பது பெரும்பாலான மக்களை கஷ்டங்களுக்கு உள்ளாக் குவதாகும். பொருளாதாரத் திட்டங்கள் சாதாரண மக்களின் உயிர்வாழ்விற்கு மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கை தரம் உயர்வதற்கும் உத்தரவாதம் அளி க்கப்பட வேண்டும். இதனை ஐ.தே.கட்சி எதிர்ப்தற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. ஐ.ம.சு.மு அரசாங்கம் உலகவங்கி சர்வதேச நாணயநிதியம் என்பவற்றுடன் ஒத்துப் போகும் தகுதியை கொண்டிருக்கவில்லை என்பதே அவர்களின் கவலை.

யுத்தத்தினால் அழிந்த வடக்கு கிழக்கை புணரமைப்பது பற்றி எவ்வித கவன ங்களும் செய்யப்படவில்லை. மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருக்கும் தோட்டப்புறங்களை அபிவிருத்தி செய்ய ஆககுறைந்தது தோட்ட உள்ள சுகட்டமைப்பு அமைச்சிற்கு கூட போதிய நிதி ஒதுக்கப்படவும் இல்லை. அதற் குரிய திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. கிராமப்புறங்களில் குளங்களை புனரமைத்தால் மட்டும் போதாது. அதன் மூலம் பயிர்ச்செய்கையை மேற் கொள்ள வளங்களும் திட்டங்களும் வேண்டும்.

பாதுகாப்பிற்கு கூடுதலாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடனும் பாகி ஸ்தானுடனும் இராணுவ உடன்படிக்கைகள் செய்யப்படவிருக்கின்றன. இவை யுத்தமொன்றை எதிர்நோக்கி செய்யப்படும் நடவடிக்கைகளாகவே தெரி கின்றன. பாதுகாப்பு செலவீனம் 52.08 பில்லியனிலிருந்து 56.29 பில்லியன் ரூபாய்களாக அதிகரித்துள்ளது. கிராமப்புற உற்பத்திகள் ஊக்குவிக்க ப்படுவதற்காக பல சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவை நடைமுறையில் சாத்தியமாகப் போவதில்லை. ஏனெனில் வரிச்சுமை அதிகரிக்கப்போகிறது. அந்த சலுகைகள் வெறும் வார்த்தை ஜாலங்களாகவே இருக்கப் போகிறன. இவை பொருளாதார பின்னடைவுகளை மூடி மறைத்து ஏற்படப்போகிற வறு மையை மறைக்கும் முயற்சியாகும்.

எல்லவற்றையும் திறந்து வைத்துக் கொண்டு வீட்டுக்குள் வளங்களே இல்லா தபோது வரவு செலவு திட்டத்தை மட்டும் வீட்டுத் தயாரிப்பாக வைத்திருப்பது என்பது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது வெகுவிரைவில் அம்பலமாகும். வீட்டில் அரிசியே இல்லாத போது வீட்டுச் சமையல் எப்படி சாத்தியமாகும்? நிலைமைகளை அவதானிக்கிறபோது ஜே.வி.பியினரால் மீள வெட்டப்படும் குளங்கள் பயிர்ச்செய்கைக்காகவன்றி பொருளாதார சுமையால் பாதிக்கப்ப டவுள்ள விவசாயிகளும் சாதாரணமக்களும் உயிர்களை மாய்த்துக் கொள்வ தற்கே பயன்படப்போகின்றன என்றே அச்சம் கொள்ளவைக்கிறது.

ஆசிரியர் குழு

# தேசிய இன விடுதலைப் போராட்டமும் புலிகள் இயக்கத் தலைமைத்துவமும்

**-வெகுஜனன்-**

கடந்த நவம்பர் 26ம், 27ம் திகதிகளில் வடக்கு கிழக்கிலும் புலம்பெயர்ந்தோர் வாழ்ந்து வரும் சில நாடுகளிலும் புலி கள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஐம்பதாவது வயதை வாழ்த்தியும் மாவீரர் தினத்தை முன் னிட்டும் நிகழ்வுகள் இடம் பெற்றன. புலிகள் இயக்கம் முன்னெடுத்த போராட்டத்தில் தியாகிகளாகிப் போன பதினேளாயிரத்து ஐந்நூறுக்கு மேற் பட்ட போராளிகளின் கல்லறைகள் மீது ஈகைச் சுடரேற்றி அவர்களது நினைவுகள் மீட்கப்பட்டன. இது அவசி யமானதேயாகும். அதேவேளை தமிழ் மக்களின் விடுதலைக்கென வெவ் வேறு இயக்கங்களில் இணைந்து ஆயுதம் ஏந்தி தமது இளம் உயிர் களை அர்ப்பணம் செய்த ஆயிரக் கணக்கான போராளிகள் யுத்தத்தால் இறந்த பல்லாயிரம் மக்கள் கௌர விக்கப்படாமையும் அதற்குரிய சந்தர் ப்பம் வழங்கப்படாமையும் வருத்தத் திற்குரியதாகும். இந் நிலை மாற்ற ப்படுவதன் மூலம் விடுதலைப் போரா ட்டம் மேலும் மக்கள் மயமாக்கப்பட்டு பல மடைய முடியும்.

கடந்த நூற்றாண்டில் இலங்கையில் வளர்ச்சி பெற்று வந்த இன முரண் பாடும் அதன்பால் எழுந்த இன ஒடு க்குமுறையும் அதற்கெதிரான போரா ட்டங்களும் விரிவான தளத்தில் நோக் குதற் குரியனவாகும். குறிப்பாக அத் தகைய பேரினவாத ஒடுக்கு முறை க்குள் உள்ளடங்கி நிற்கும் வர்க்க சக்திகளின் செயற்பாடு பற்றியும் அவற்றின் இருப்பு பற்றியும் ஆழ்ந்து ஆராயப்பட வேண்டியவையாகும். அவ ற்றைப் புறந்தள்ளி விட்டு தேசிய இனப் பிரச்சினையையும் அதன் மீதான விடு தலைப் போராட்டத்தையும் எடுத்து நோக்க முற்பட்டால் வெறும் தேசிய வாத அல்லது குறுந் தேசியவாத எல் லைகளுக்குள் மட்டும் நின்றே யாவ ற்றையும் காணவேண்டி இருக்கும்.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இன முரண்பாடு என்பது ராணுவ ஒடுக்கு முறையாக வளர்க்கப்பட்டு பேரினவாத யுத்தமாகத் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. இத்தகைய திணிப்பு யுத்தத்திற்கு மூன்று அடிப் படைகள் இருந்தன. ஒன்று, தமிழ்த் தேசிய இனத்தை ஒரு தனித்துவ இனமாக ஏற்காது அவர்களது தாய கப் பிரதேசத்தை அங்கீகரிக்காது மொழி பண்பாட்டு கல்வி அம்சங்களில் புறக்கணிப்புச் செய்து ஒரு சிறுபான் மை சமூகமாக நடாத்தி அவர்களது எத்தகைய நியாயபூர்வக் கோரிக்கை களையும் ஏற்காது விடுவது. இரண் டாது, மேற்படி நிலைப்பாட்டின் மூல மான இன முரண்பாட்டு விரிசலைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தின் மூலம் தமது பொருளதார வர்க்க நலன்களைப் பேணியவதுடன் அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் ஆதிக்க நலன்களுக்கு துணை போவது. மூன்றாவது. யுத்த த்தின் ஊடாக தமிழ்மக்கள் மத்தியில் புரட்சிகர சக்திகளாக வளர்ந்து வரக் கூடிய இளைய தலைமுறையினரை அழிப்பது. அதேவேளை தமது அரசுய ந்திரத்தின் பிரதான பகுதியான ஆயுத ப்படைகளை விஸ்தரித்து நவீனப்ப டுத்தி ஆயுதங்களையும் தளபாடங் களையும் பெற்று சக்திமிக்க பேரின வாத ஆளும்வர்க்க ராணுவமாக மாற் றிக் கொள்வது.

மேற் கூறியவற்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வந்த பேரினவாத யுத்தத்தை வழி நடாத்தியதில் ஐ. தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமது ஆளும் வர்க்க பேரின வாதப் பாத்திரத்தை ஒருவருக்கொ ருவர் சளைக்காது உரியவாறு பய ன்படுத்தி வந்திருக்கின்றனர். இவ ற்றின் அடிப்படையிலேயே மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் யுத்த மாக்கப்பட்டுள்ள தேசிய இனப் பிரச்சி னை இலங்கையின் இன்றைய பிர தான முரண்பாட்டைக் கொண்ட பிரச்சினையாக எழுந்து நிற்கின்றது எனச் சுட்டிக்காட்டுகின்றோம். இது அடிப்படையில் தமிழ்த்தேசிய இன த்தின் ஒடுக்கு முறைப் பிரச்சினை யாகும். இவ் இன ஒடுக்கு முறை யினை ஏற்றுக் கொள்ளாத எவரும் தமிழ் மக்கள் சார்பாகப் பேசுவதற்கு தகுதியற்றவர்களாவர். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையைக் கண்டு கொள்ள மறுக்கும் உயர்வர்க்க தமி ழ்க் கனவான்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கால் கழுவி அருகே நின்று தமது வர்க்க நோக்கங்களை ஈடே ற்றிக்கொள்கின்றனர். அவ்வாறே புலி கள் இயக்கத்தைத் திட்டியவாறு சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வால் பிடித்து சலுகைகளுக்காக அலைந்து கொண்டிருப்பவர்களும் இனமுரண்பாட்டினதும் அதன் வழியான பேரினவாத ஒடுக்கு முறை களையும் காணத் தவறியவர்களே ஆவர்.

தேசிய இனப்பிரச்சினை ராணுவ ஒடு க்கு முறையுடன் கூடிய யுத்தமாகத் திணிக்கப் பட்ட வேளையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துமாறு நிர் ப்பந்திக்கப்பட்டனர். அத்தகைய சூழ லை இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகள் தமது நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டமை விரிவாக நோக்கப்பட வேண்டிய மற்றொரு அம்சமாகும். இத்தகைய நிலைமை களுக்கு ஊடாகவே தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கம் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையில் தனித்துவ மான பண்புகளுடன். ஒரு வீறுமிக்க விடுதலைப் போராட்ட இயக்கமாக வளர்ச்சி பெற்றுக் கொண்டது. மிக வும் ஒருங்கிணைக்கப்பட்ட ராணுவக் கட்டமைப்பை அதற்குரிய விஷேச அம் சங்களுடன் நிலைநிறுத்திக் கொண் டது புலிகள் இயக்கம். அடிப்படையில் தமிழ்த் தேசியவாதத்தை முன்னிறுத் திக் கொண்ட அவ்வியக்கம் சிறு முதலாளித்துவ குணாம்சங்களையே கொண்டிருந்தது. அத்தகைய ஒரு இயக்கத்திடம் பாட்டாளி வர்க்க நிலை ப்பாட்டையோ மாக்சிச லெனினிசக் கோட்பாட்டின் அடிப்படையிலான நடைமுறைகளையோ யாரும் எதிர் பார்க்க முடியாது. இவ் விடத்திலே நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசிய காங்கிரசும் அரபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலை இயக்கமும் எவ்வாறு முன்சென்றன என்பதை புலிகள் இயக்கம் காண்பது அவசியமாகும்.

சர்வதேச ரீதியாக மாக்சிசம் சோஷ லிசம் வர்க்கப் போராட்டத்தை முன் னெடுத்த புரட்சிகர பொதுவுடமை கட் சிகள் என்பன ஒரு தற்காலிகப் பின்ன டைவையும் தோல்விகளையும் தழுவிக் கொண்ட சூழலிலேயே மூன்றாம் உலக நாடுகளில் தேசிய வாத சக் திகள் முன்தள்ளப்பட்டன. ஒரு புறத் தில் அவை ஏகாதிபத்திய சக்திகளால் உற்சாகப்படுத்தப்பட்டாலும் மறுபுறத் தில் அத் தேசியவாத சக்திகள் அரங் கில் பிரவேசிப்பதற்கான தேவையும் அவசியமும் ஏற்படவே செய்தன. இல ங்கையில் பேரினவாத ஒடுக்கு முறை யை எதிர் கொள்ளும் ஒரு அவசியத் தேவையில் இருந்து புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங்களில் இருந்து வேறுபட்டதாகத் தன்னைத் தகவமை த்து நிலை நிறுத்திக் கொண்டது. அதே வேளை ஏனைய இயக்கங்கள் இலங்கையின் ஆளும் வர்க்கத்திடமும் இந்திய பிராந்திய மேலாதிக்க சக் திகளிடமும் சரணடைந்து கொண் டன. அதன் மூலம் அவை தம்மைத் தாமே சீரழித்தும் கொண்டன.

கடந்த 26ம் திகதி புலிகள் இயக்கத் தின் தலைவர் வே.பிரகாரனுக்கு அக வை ஐம்பதாயிற்று. ஏறத்தாள முப்பது வருடங்களைப் பிரபாகரன் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் ஊடாக வழிநடந்து வந்துள்ளார். அதன் தலைப்பாத்திரத்தை ஆரம்பம் முதலே வகித்தும் வந்துள்ளார். அவ ரது தலைமைத்துவம் பற்றிய ஒரு சரி யான மதிப்பீடு அவசியமானதாகும். அதனை விரிவாக நோக்க வேறொரு முறை முற்படுவோம். ஆனால் சுருங் கக் கூறின் வரலாறு எப்பொழுதும் தனது பொருளாதார சமூக அரசியல தேவைகளை நிறைவு செய்வதற்கு ஆற்றல் ஆளுமை மிக்க தலைவர் களை உருவாக்கி வந்துள்ளமை யைக் காணலாம். அந்தவகையில் பிரபாகரன் இலங்கையின் பேரினவாத ஒடுக்கு முறை யுத்தத்தின் காரண மாக தமிழ் மக்களின் அபிலாஷை களை முன்னெடுத்துச் செல்வதற்கு வரலாற்றினால் உருவாக்கப்பட்ட ஒரு போராளித் தலைவராவர். அத்த கைய ஒருவர் வரலாற்றினால் விதிக்க ப்பட்ட அல்லது எதிர் பார்க்கப்பட்ட வரலா ற்றுத் தேவையை எவ்வாறு நிறைவு செய்து கொள்கிறார் என்பது அவரது ஆற்றல் ஆளுமை மட்டுமன்றி தேசிய சர்வதேசிய நிலைமைகளின் புறநிலை யதார்த்தத்தையும் அதன் எல்லை களையும் பற்றிய தூரநோக்குடன் செயல்படுவதிலும் தங்கியுள்ளது. ஒரு தலைவன் தனது தலைமைப் பாத் திரத்தில் நின்று நேற்றுவரை ஆற்றி நின்றவழிகாட்டல்கள் சரியான சுயவி மர்சனத்தின் மூலம் மீள் நோக்கிற்கு உட்படுத்தப்படும் போதே இன்று எடுக்கக் கூடிய முடிவுகளும் நடை முறைகளும் நாளை எத்தகைய விளைவுகளைக் கொண்டு வரும் என்பதில் தூரநோக்குடன் இருப்பதில் தான் வரலாறு இறுதிவரை தனது தேவைக்குரியவராக அத்தலைவரை ஏற்றுக்கொள்ளும்.

புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபா கரன் பற்றி அவரது அகவை ஐம்பதின் போது ஊடகங்களில் வாழ்த்துரை கூறி எழுதிய கட்டுரைகளில் ஒரு நிதானமான மதிப்பீடும் கணிப்பும் மிகக் குறைவாகவே காணப்பட்டன.தமிழ்ப் பழமைவா தத்திற்குரிய வெறும் புகழ்ச் சியும் துதிபாடலுமே மேலோங்கி நின் றன. அவற்றை பிரபாகரனே ஏற்றுக் கொள்வாரோ தெரியவில்லை. அதே வேளை கடந்த கால் நூற்றாண்டின் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்கொண்டு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்ததில் பிரபாகரனின் தலைமைப் பாத்திரத்தை எவ்வகை யிலும் நிராகரிக்கவோ கொச்சைப்படுத் தவோ முடியாது. அதேவேளை புலி கள் இயக்கமும் அதன் தலைவர் பிரபா கரனும் இழைத்த தவறுகள் வரலாற்று அனுபவங்கள் பட்டறிவுகள் மூலம் மாற்றியமைக்கப்பட வேண்டியவை களுமாகும் சில சக்திகள் தங்களது இயலாமை அல்லது தங்களுக்கு புலிகள் இயக்கத்தால் ஏற்பட்ட பாதி ப்புக்கள் என்பனவற்றை அளவு கோலாகக் கொண்டு அவ் இயக்க த்தையும் அதன் தலைமை யையும் மிகக் கடுமையாக எதிர்த்து வருகின் றனர். அத்த கையோரை எதிர்ப்பதில் புலிகள் இயக்கமும் கடுமையாகவே நடந்தும் கொள்கின்ற போக்கையே காணமுடிகின்றது. இவ் விருபோக்கு களுமே பிரதான எதிரியான பேரின வாத ஆளும் வர்க்க சக்திகளுக்கே உதவிசெய்யக் கூடியவைகளாக எழுந்து நிற்பதையே காணமுடிகின் றது.

அகவை ஐம்பதை அடைந்து நிற்கும் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அவரது தலைமையிலான புலிகள் இயக்கமும் கடந்த காலத்தின் சாதகமான அம்சங் களைப் இறுகப் பற்றி நிற்பதும் பாதக மான அம்சங்களாகி தமிழ்த் தேசிய இனத்தை உரியவாறு ஐக்கியப்படுத்த தடைக்கற்களாக உள்ள அம்சங்களை யும் அடையாளம் கானுதல் வேண்டும். அதே வேளை முஸ்லீம் மக்களையும் சிங்கள மக்களையும் நேச சக்திகளா கக் கொள்ளும் நடைமுறைகளை மேலும் விரிவுபடுத்தல் வேண்டும். தேசியவாத எல்லைகளுக்குள் நின்று முற்போக் கான மக்கள் சார்பான பல்வேறு முய ற்சிகளை முன்னெடுக்க முடியும். அவை விரிவு பெற்று எல்லை களைக் கடந்து தமிழர் பழமை வாத- நிலவுடமை- முதலாளித்துவ கருத்தி யல்கள் , ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்கம் என்பனவற்றுக்கான எதிர்ப்பாகி சுயநிர்ணய உரிமைக்கான மக்கள் போராட்டமாகவும் உலக விடுதலை இயக்கங்களுடன் கைகோ ர்த்துச் செல்லும் போராட்டமாகவும் மாற்றம் பெறல் வேண்டும். அதனையே வரலாற்றின் போக்குகள் வேண்டி நிற்கின்றன.

# தேசியத்தை வலுப்படுத்துவது பற்றி

-இமயவரம்பன்-

வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள் பிரதானமாக மூன்று தேசிய இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்த போதும் மலையகத்தமிழருடன் பறங்கியர், பழங்குடிகள் (வேடர்) ஆகிய பழைய சமூகப் பிரிவினர் கணிசமான எண்ணிக்கையில் அங்கு வாழுகின்றனர். தமிழரும், முஸ்லிம்களும், சிங்களவரிற் சிறிய தொரு பகுதியினரும் சிறு தொகையினராக உள்ள பழைய சமூகப்பிரிவினரும் இப் பிரதேசத்துடன் நீண்ட கால வரலாற்றுத் தொடர்புடையோரும் பல தலை முறைகளாக அங்கு வாழ்ந்து வந்தோருமாவர்.

## புற முரண்பாடுகளைச் சரியாகக் கையாளுவது எப்படி?

சிங்களவரின் பெருவாரியானோர் அங்கு, குறிப்பாகக் கிழக்கில், பேரினவாத யூ .என்.பி ஆட்சியில் போது, கொலனிய ஆட்சியின் முடிவுக் காலத்தையொட்டி உருவான தொடக்கக்காலக் குடியேற்றத் திட்டங்களின் போதும் பின்னர் மகாவலித் திட்டத்தின் பல்வேறு காலகட்டங்களிலும் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டவர்களாவர். அவர்களை விட, அரசியல் நோக்கங்கட்காகப் பேரினவாத விஷமிகளால் கொண்டுவரப்பட்ட குடியேறிகளும் உள்ளனர். இக் குடியேற்றங்களில் ஆயுதப்படைகள் ஒரு முக்கிய பங்கை வழங்கியது.

பல்வேறு முகாந்திரங்களில் சிங்களவர்களைப் பெருதொகையாகக் குடியேற்றியதன் நோக்கம் தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட இப் பிரதேசத்தின் இன அடையாளத்தை மாற்றி அதன் நிலவியற் தொடர்ச்சியைஇடையறுப்பது என்பது உண்மையே. எவ்வாறாயினும், இப் பகுதியில் உள்ள சிங்களவரிற் கணிசமானவர்களது முன்னோர் இப் பகுதியில் வாழும் தமிழரது முன்னோரை ஒத்தளவு காலம் இப்பகுதியில் இருந்து வந்தவர்களாவர். குடியேறிய சிங்களவரின் பெரும் பகுதியினர் பல தசாப்தங்கள் முன்பு குடியேறி வடக்கு-கிழக்கைத் தமது தாயகமாக ஏற்றுக் கொண்டவர்களாவர்.

நாட்டில் பொதுப்பட வர்க்க அரசியலுக்குப் பதிலாகத் தேசியவாத அரசியல் ஆதிக்கஞ் செலுத்துவதுடன் சிங்களவரிடையிலான பிரதான அரசியற் கட்சிகள் பேரினவாதப் பண்புடையனவாய் இருக்கிற சூழ்நிலையில், வடக்கு கிழக்கிலுள்ள சிங்களவரிடையே ஒரு புறம் தமிழர் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியுமான அச்சமும் ஐயங்களும் மறு புறம் பேரினவாதச் சித்தாந்தமும் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்றன. தென்னிலங்கை வாழ் சிங்களவரை விட அதிகமாக அவர்கள் போராற் பாதிப்புற்றவர்கள் என்பதால் அவர்கள் அமைதியை விழைகின்றனர். எனினும், பேரினவாதப் பிரசாரமும், தமிழ்த் தேசியவாத ஆட்சி உருவாகுமெனின், தாம் விரட்டப்படாத விடத்து அடிமைப்படுத்தப்படுவோம் என்ற மனப் பயமும் பெரும்பாலவர்களது சிந்தனை மீது ஆதிக்கஞ் செய்கின்றது. எனவே அவர்கள் ஆயுதப்படையினரைத் தமது இயல்பான நேச சக்தியாகக் காணுகின்றனர். மேற் குறிப்பிட்டவாறான அச்சங்களை மாய்ப்பது எளிதல்ல. எனினும், நிலைமைகளை முன்னேற்றுவதற்குத் தமிழ்த் தலைமைகளோ முஸ்லிம் தலைமைகளோ சொல்லத்தக்கதாக எதையுஞ் செய்யவில்லை.

வடக்கு கிழக்கில் நிலவும் ஆயுதப் போராட்டச் சூழலில், சிங்கள மக்களைத் தமிழ்த் தேசிய இன விடுதலையின் தரப்பிற்கு வென்றெடுப்பது யதார்த்தமான ஆலோசனையாகாது. எனினும், தமிழ் மக்களது விடுதலைக்கான போராட்டம் சிங்களவரது ஒரு மிரட்டலல்ல என்பதையும் உண்மையில் நீண்டகால இடைப்பட்ட காலக் கண்ணோட்டங்களில் அவர்கட்கு நன்மையானதாய் அமையலாம் என்பதையும் நடைமுறை வழியே எடுத்துக் காட்டுவதன் மூலம், அவர்களிற் பெரும்பாலோரை நடுநிலைப்படுத்த இயலும்.

தென்னிலங்கை வாழ் சிங்கள மக்கள் பற்றித் தமிழரது பார்வை புற நிலையாகப் பேரினவாத ஒடுக்கு முறையாலும் அகநிலையாகத் தமிழ்த் தேசியவாதம் தேசிய இனப்பிரச்சனையை விளக்கத் தெரிந்தெடுத்த விதத்தாலும் பண்படுத்தப்பட்டுள்ளது. எனினும் ஒரு புறம் நிலவுடைமை- முதலாளி வர்க்கப் பேரினவாத ஒடுக்கு முறையாளர்கட்கும் மறுபுறம் தமிழர்களைப் பகையான சமூகமாகவும் பயங்கரவாதிகளாகவும் பார்க்குமாறு பண்படுத்தப்பட்டுள்ள பரந்துபட்ட சிங்கள மக்கட்குமிடையிலான வேறுபாட்டை அறிந்திருப்பது முக்கியாமானது.

அமைதிப் போச்சுவார்த்தைகள் முன்னேறாமைக்குரிய முக்கியமான தொரு காரணம் சிங்கள வாக்காளர் நடுவே பேரினவாதச் சிந்தனையின் பிடியைப் பேணுவதில் நிலவுடமை-முதலாளி வர்க்க யூஎன்.பி , ஸ்ரீ.ல.சு.க. தலைமைகட்கும் ஜே.வி.பி. உட்பட்ட பேரினவாதச் சிறு மூதலா ளியக் கட்சிகட்கும் கிட்டக் கூடிய நலன்களாகும். போரின் யதார்த்தம் சிங்கள மக்களிடையே அமைதியின் தேவையை உணர்த்தியுள்ளது. எனினும், நிலையான அமைதிக்குத் தேசிய இனங்களின் சமத்துவத்தினதும் ஒவ்வொரு தேசிய இனத்திற் குமான சுயநிர்ணய உரிமையினதும் அடிப்படையில் அமைந்த நியாயமான, நிலைக்கக்கூடிய தீர்வு தேவை என்பது இன்னமும் உணர்த்தப்படவில்லை. பாராளுமன்ற இடதுசாரிகள் உட்படப், பேரினவாத அரசியலால் நன்மை கண்டவர்களிடமிருந்து இவ்விடத்தில் முன்முயற்சியை எதிர்பார்ப்பது பொருளற்றது.

சிங்கள வெகுசனங்களது ஆதரவு இல்லாவிடிலும் புரிந்துணர்வையாவது வென்றெடுப்பதற்கு உகந்த மூலோபாயங்கள் தமிழ் விடுதலைப் போராட்டச் சக்திகளின் அரசியல் அணுகு முறைமையில் ஒரு கணிசமான மாற்றத்தை வேண்டி நிற்கின்றன. விடுதலைப் போராட்டம், பேரினவாதச் சக்திகட்கும் அவற்றுக்கு இரையாகும் சிங்கள வெகுசனங்கட்கும் இடையிலான வேறுபாட்டுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். தமிழ்த் தேசிய அரசியலிற் பாராளுமன்ற அரசியல் நலன்கள் ஆதிக்கஞ் செலுத்தும் வரை, பிற சமூகங்களுடனான பரஸ்பர புரிந்துணர்வுக்கு வாய்ப்புக் குறைவாகவே இருக்கும். எனவே, சிங்கள மக்களிற் கணிசமானோரை வென்றெடுப்பதென்பது, பெருவாரியான மக்களிடமிருந்து ஆளும் பேரினவாத மேட்டுக்குடிகளைத் தனிமைப்படுத்துமாறு வர்க்க ஒடுக்கு முறைப் பிரச்சனைகளின் அடிப்படையில் மக்களை ஒன்றுபடுத்துகின்ற வெகுசன அரசியல் வேலையை வேண்டி நிற்கின்றது. இதைச் சாதிப்பதற்குச், சிங்களவரிடையேயும் வடக்குக் கிழக்குப் பிரதேசத்திலும் உள்ள நேர்மையான இடதுசாரி முற்போக்கு அரசியற் சக்திகளது ஆதரவு இன்றியமையாதது.

## முக்கியமான புற முரண்பாடுகள் எவை?

நாட்டிலும் குறிப்பாக வடக்கு கிழக்கிலும் தமிழருக்கும் முஸ்லிம்கட்குமிடையிலான உறவு கசப்படைந்ததற்குப் பல காரணங்கள் உள்ளன. 1915ல் முஸ்லிம் விரோதக் கலவரத்திற்குப் பங்களித்ததற்காக பிரித்தானியக் கொலனி ஆட்சியாளர்களாற் தண்டிக்கப்பட்ட சிங்களப் பேரினவாதிகள் மீது பரிவுகாட்டுமாறு பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் பொன்னம்பலம் ராமநாதன் மன்றாடியமை, நிலவுடைமை-முதலாளிய வர்க்கத்தினரிடையே தமிழ்-முஸ்லிம் உறவிற்குத் தீங்கு விளைவித்தது. எவ்வாறாயினும், அரசு, தமிழ்த் தேசிய இனத்தின் மீது அடக்குமுறைப் போரைத் தொடுக்கும் வரை, இரண்டு சமூகங்களிடையிலும் பகைமை இருக்கவில்லை.

தமிழ்த் தேசிய இனத்துக்குத் தொடர்புடைய முரண்பாடுகளில் அதற்கு உட்பட்டவை போக மற்றவை புற முரண்பாடுகளாம். புற முரண்பாடுகளில் விடுதலைப் போராட்டந் தொடர்பாக அதிக முக்கியம் வாய்ந்தவை என தமிழ்த் தேசிய இனத்தைச் சார்ந்த மக்களுக்கும் தமிழரின் பாரம்பரியத் தாயகத்திலும் இலங்கையின் பிற பகுதிகளில் வாழும் பிற தேசிய இனத்தோர், பிற நாடுகளில் வாழும் தமிழ் மக்களுள் இலங்கைத் தேசிய இனத்தைச் சாராதவர்கள், சர்வதேச சமூகத்தை சார்ந்த பிற தேசிய இனத்தவர்கள், தேசிய விடுதலை இயக்கங்கள் உட்பட்ட ஏனைய விடுதலை இயக்கங்கள், இலங்கையின் ஆளுவர்க்கமும் அதன் நலன்களின் முகவரான அரசும், பொதுப்பட ஏகாதிபத்தியமும் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியமும், இந்திய மேலாதிக்கம், பிற அயல் அதிகார நலக் கும்பல்கள் என்பவற்றுக்கும் இடையிலான முரண்பாடுகளைக் கூறலாம்.

மேற் குறிப்பிட்ட முரண்பாடுகளில் பல அடிப்படையிற் சினேகமானவையும் அந்த அடிப்படையில் அணுக வேண்டியவையுமாம். அவை தொடர்பான வேறுபாடுகளை வற்புறுத்துவதிலும் பார்க்கப் பொதுவான நலன்களை வற்புறுத்துவதற்கான தேவை வலியது. வேறுபாடுகளைக் கையாளும் போதும் அவற்றை எதிர்த்து நிற்கும் முனைப்பை விட ஒத்துப்போகும் உணர்வுடன் செயறபடுவதாகும்.

அடிப்படையிற் மிகையான முரண்பாடுகளைப் பொறுத்த வரை ஒத்துப் போவது என்பது ஒடுக்கு முறையாளருக்கு ஒடுக்கப்படுகின்றவர் பணிந்து போவது என்ற ஒரே பொருளை மட்டுமே உடையது. இவ்வாறன ஒத்துப் போதல் தேவையினதும் சூழ் நிலைகளினதும் விளைவானது என்பதுடன், ஒடுக்கப்படுவோரது கண்ணோட்டத்தில் ஆக மிஞ்சினால் தந்திரோபாயமான ஒன்றாக மட்டுமே அமைய முடியும்.

இரண்டு வகையான முரண்பாடுகளையும் கையாளுவதற்கான அணுகுமுறைகள் அடிப்படையில் வேறுபட்டவை என்பதால், முரண்பாடுகளைச் சரியாகக் கையாளுவதற்கு முரண்பாடுகளைச் சரியாக அடையாளங்காணுவது அத்தியாவசியமானது. தமிழ் மக்களுக்கும் வேறு எந்தத் தேசிய அல்லது சமூக அடையாளத்தை உடைய மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் சினேகமானவை. ஒடுக்கு முறைச்சக்திகள், சுரண்டல் சக்திகள், ஆதிக்கச்சக்திகள் ஆகியவற்றின் நலன்கள் தமிழ் மக்களது நலன்களுடன் நேரடியாக முரண்படுவதால் அவை தொடர்பான முரண்பாடுகள் சாராம்ச த்திற் பகையானவை. ஒடுக்கு முறைக்கும் சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்கும் ஏதுவான நிலைமைகள் போராட்டத்தின் மூலம் நீக்கவோ தணிக்கவோ பட்டாலொழிய இத்தகைய முரண்பாடுகளை நட்பான முறையிற் தீர்க்க வழியில்லை.

முன் கூறிய வற்றினின்று வரும் முக்கியமான தொரு விடயம் ஏதெனின், ஒடுக்கு முறையாளருக்கும் எந்த மக்களின் பேரில் ஒடுக்கு முறை முன்னெடுக்கப்படுகிறதோ அந்த மக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை அறிந்திருக்க வேண்டும் என்பதாகும். இன்னொரு முக்கியமான விடயம் ஏதெனின், உலகின் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் அனைத்தும், குறிப்பிட அவற்றின் விடுதலை இயக்கங்களும் தமிழ் மக்களின் நேச சக்திகளாக அமையக் கூடியன. ஒடுக்கு முறைச் சக்திகட்கெதிராக ஒடுக்கப்படும் எந்த மக்கள் குழுவினரதும் ஒவ்வொரு வெற்றியும் நேரடியாகப் போராட ஊக்குவிப்பதன் மூலம், ஏனைய ஒடுக்கப்பட்ட மக்கள் குழு ஒவ்வொன்றுக்கும் நன்மை செய்கிறது என்பதாகும்.

-வளரும்-

---

## எழுத்தாளன் தனித்து.....

7ம் பக்க தொடச்சி..

குறிப்பாக, உயர் மட்டத்தினரின் காதல் வாழ்க்கை, இன்பக் கேளிக்கை, உல்லாசப் பொழுதுபோக்கு என்பவற்றை மையமாக் கொண்டு எத்தனையோ சிற்றின்ப நூல்கள் தோன்றின.இவற்றின் மிச்ச சொச்சத்தை நவீன காலத்திலே ஐயத் திக்கிடமின்றி நாம் காணக் கூடுமாயினும், முதலாளித்துவச் சமுதாயத்திலே, வாழ்க்கையை முற்றுமுழுதாகப் புறக்கணிக்கும் இலக்கியங்கள் தோன்றுவது குறைவு என்றே கூற வேண்டும்.

இன்னொரு பிரிவினர், மேலே நாம் விவரித்த சமுதாய முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் ஓரளவுக்கு நோக்கி அவற்றைத் தமது எழுத்தின் பொருளாகக் கொள்பர்கள். சமுதாயத்திலே பரவலாய்க் காணப்படும் துன்ப, துயரங்களை உணர்ச்சியின் அடிப்படையிலே அநுதாபத்துடன் பார்க்கும் இப்பிரிவினர், முந்திய பிரிவினரோடு ஒப்பு நோக்குமிடத்து, தம்மைச் சுற்றியுள்ள யதார்த்தத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதில் ஐயமில்லை. எனினும், சமுதாய நிலமைகளைப் பிரதிபலித்தாலே போதும் என்னும் எண்ணம் இவர்களில் பெரும்பாலானோரைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்பதிலும் ஐயமில்லை.

அதாவது முதற்பிரிவினர் பிரச்சினைகள் இருப்பதையே எழுத்தில் பிரதிபலிக்கவில்லை, அதனால் அப்பிரச்சினை இலக்கியத்துக்கு உகந்த- உரிய- பொருள்கள் அல்ல என்னும் கருத்தைக் கொண்டவராய் உளஎனர். இரண்டாவது பிரிவினரோ இதற்கு மாறாக, சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம் பெறுவதை ஏற்றுக் கொள்கின்றனர். எனினும், தமது கடமை அல்லது பொறுப்பு அவற்றைத் தத்ரூபமாகச் சித்திரித்து விடுவதே என்று கருதுகின்றனர். காலப்போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கை இவர்களுக்குண்டு.

வராலாற்று அடிப்படையில் நோக்கும் பொழுது, நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தையடுத்து வந்துள்ள முதலாளித்துவச் சமுதாய அமைப்பில் சந்தைக்குப் பொருள் தயாரிப்போருள் ஒருவனாக மாற்றப்பட்டுள்ள எழுத்தாளன் வாழ்க்கைப் போராட்டத்தின் அடிப்படையில் வேலைத் தட்டுப்பாடு மோசமான ஏற்றதாழ்வு சுரண்டல் முதலிய கொடுமைகளை அநுபவ ரீதியாகவும் அறிவு- ரீதியாகவும் பிரதிபலிக்கின்றான். ஆயினும் இவற்றையெல்லாம் எழுத்தாளன் என்னும் வகையில் தனிப்பட்ட முறையிலும் தனிப்பட்ட மாந்தரின் அவலங்களாகவுமே கண்டு எழுதுகிறான். இதன் விளைவாகத் துன்ப துயரங்களைக் கண்டு கண்ணீர் வடித்து இரங்கி ஏங்கும் நிலைக்குப் பெரும்பாலும் அவன் தள்ளப்படுகின்றான், சில சமயங்களில் சினங்கொண்டு சீறவும் செய்கின்றான். எனினும் அதற்கு மேல் அவன் நோக்குப் பெரும்பாலும் போவதில்லை.

நவீன உலகிலே பரவலாகப் பொதுமைச் சிந்தனைகளும், சோஷலிசக் கருத்துகளும் நிலவுவதால், அவற்றாலும் இரண்டாம் பிரிவு எழுத்தாளர்கள் சிலர் ஈர்க்கப்படுவதுண்டு எனினும். அவர்களிடத்தும் இலக்கியத்தைப் "பிரச்சாரம்" ஆக்குதல் கூடாது என்னும் சில ஐயங்களும் அமிசங்களும் ஆழமாக வேரூன்றியிருப்பதைக் காணலாம்.

எனினும், சமீப காலத்தில் பல இளைஞர்களிடையே, குறிப்பாகக் கிராமங்களில் வாழும் எழுத்தாளர்களிடையே பிரச்சினைகளை இன்னும் நுணுக்கமாகவும் தூலமாகவும் ஆராய்ந்து அவற்றுக்குப் பரிகாரம் கூறும் இலக்கியப் படைப்புக்கள் பெருக வேண்டும் என்னும் கருத்து வேகம் பெற்று வருதல் கவனிக்கக் கூடியதாய் உள்ளது. இதற்குத் தருக்க ரீதியான காரணங்களும் இல்லாமல் இல்லை.

மனிதாபிமான உணர்வுடன் நடைமுறைப் பிரச்சினைகளைச் சித்தரித்தல் ஏற்றதே என்னும் கோட்பாடு ஓரளவு வழக்காகிய பின் 'அடுத்து என்ன?' என்னும் வினா எழுதல் இயல்பே. அது மட்டுமன்று பிரச்சினைகளை மேலும் மேலும் கூர்ந்து நோக்கி ஒவ்வொன்றினதும் காரண காரியத் தொடர்புகள் விளங்கிக் கொண்டு எழுதும்போது அவற்றை நீக்க வேண்டிய அவசியத் தையும் அதற்கான வழி வகைகளையும் விவரித்தலும் தவிர்க்க இயலாததே. நோயை நுணுக்கமாக விளக்கி விவரித்தால் மட்டும் போதுமா? நோயாளியின் மீது இரக்கப்பட்டால் மட்டும் போதுமா? நோயின் வரலாற்றை ஆதியோடந்தமாய்க் கூறினால் மட்டும் போதுமா? நோய் தீர மருந்தும் மார்க்கமும் வேண்டாமா?

இன்னும் ஒரு காரணமும் உண்டு. ஒரு காலகட்டத்தில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் புதுமையின் பெயரிலும் புரட்சியின் பெயரிலும் இலக்கியத்தில் புகுத்திய பொருள்களும் சித்தரிப்பு முறைகளும் இன்று வர்த்தக வெளியீடுகளிலும் சாதாரணமாக இடம் பெறத்தக்கவையாகி விட்டன. 'நியூ வேவ்' திரைப்படங்களில் பெரும்பாலாவை இன்று இந்நிலைமையைப் பிரதி பலிக்கின்றன.

இந்நிலையில் சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடுகளையும், துன்ப, துயரங்களையும், போராட்டங்களையும் உதிரியான தனி மனிதர்களின் பிரச்சினைகளாக மாத்திரம் கண்டு காட்டாமல் அவற்றை வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டத்தின் வெளிப்பாடுகளாகக் காண்பது இன்றியமையாததாகிறது. இரண்டாவது பிரிவிலே தொடங்கியபோதும், விசேஷமான தனிப்பிறவிகளை இலக்கிய மாந்தராகக் கொண்டமையாலேயே, ஒரு காலத்து "முற்போக்கு" எழுத்தாளர் ஜெயகாந்தன், பின்னர் 'பிரம்மோபதேசம்' செய்பவராக உருமாறியுள்ளார்.

இது ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனது தனிப்பட்ட பலவீனம் மட்டுமன்று: அவன் பற்றிக்கொண்டிருந்த இலக்கியக் கோட்பாட்டிலே உள்ளார்ந்த பலவீனமாய் இருந்த அமிசத்தின் பரிணாமம் என்றும் கூறலாமல்லாவா? ஜெயகாந்தனை விதிவிலக்கான 'வில்லனாக' நாம் விவரிக்க வேண்டியதில்லை. பல எழுத்தாளரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எடுத்துக்காட்டு என்றே கொள்ள வேண்டும். வர்க்க ஆய்வின் அடிப்படையில், தூலமான சந்தர்ப்பங்களில் பாத்திரங்களைச் சித்திரிக்கத் தவறும் எந்த எழுத்தாளனும் ஜெயகாந்தன் ஆவதற்கு அதிக நாள் பிடிக்காது.

சமூகவியலும் இலக்கியமும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும் (15)

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

பேராசிரியர் சி.சிவசேகரம்

## மாணவர்கள் மீது சோதனைமேல் சோதனை

மாணவர்கள் கல்வியை எவ்வளவு சிறப்பாகப் பெற்றுள்ளார்கள் என்பதற்கான அளவுகோலே பரீட்சை. பரீட்சை முறை என்பது முதல் முதலில் சீனாவிலேயே தோன்றியது. மன்டரின் எனப்படும் அரசநிருவாகிகள் பரீட்சை முறைமூலமே தெரிவு செய்யப்பட்டனர். எனினும் பரீட்சைகள் மாணவரின் குறிப்பான ஒரு வகையான ஆற்றலை மட்டுமே அளக்கின்றன. நினைவு ஆற்றல் பரீட்சைகளில் முக்கியமானது. வேகமாக எழுதும் ஆற்றலும் கணக்கிடும் ஆற்றலும் முக்கியமானவை. ஆனால் ஒரு மாணவருக்கு ஒரு விடயம் பற்றிய சிந்தனைத் தெளிவும் அறிவின் ஆழமும் எவ்வளவு என்பதைப் பரீட்சைகள் அளப்பதில்லை.

1950கள் வரையும் 1960களிலுங் கூடப் பாடசாலைக் கல்வியில் மட்டுமன்றிப் பல்கலைக்கழகங்களிலும் நினைவாற்றலும் வேகமாகச் செயற்படலும் முக்கிய பங்கு வகித்தன. ஆய்வுத்திறனை மதிப்பிடும் வாய்ப்பு கணிதம் போன்ற சில பாடங்களில் இருந்தாலும் நடை முறையில் பழக்கப்பட்ட விடயங்களைச் செய்வதற்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. புத்தகங்களைப் பார்த்தே பரீட்சை எழுதும் முறை (திறந்த புத்தக முறை) மேலே நாடுகளில் 1960களில் பரவலாகியது. அதனால் எதையும் மனப் பாடமாக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. ஒரு சூத்திரமோ தகவலோ சரியாக நினைக்கவில்லா விடின் ஒரு கேள்விக்கு விடையெழுத இயலாமற் போகாது. பரீட்சை வினாவின் நோக்கம், கைவசமுள்ள தகவல்களை எவ்வாறு ஒரு மாணவர் பயன்படுத்தி ஒரு பிரச்சனையைத் தீர்க்கிறார் அல்லது ஒரு சூழ்நிலையை விளக்குகிறார் என்பதை மதிப்பிடுவதாகும். இவ்வாறான பரீட்சைப் பெறு பேறுகள் பாடத்திற் தெளிவில்லாத மாணவர்கட்குப் புத்தகங்கள் உதவவில்லை எனவும் பாடமாக்குகிற மாணவர்களை விட விளங்கிப்படிப்போர் சிறப்பாகத் தேறினர் எனவும் காட்டின. இன்று இம்முறை மேற்கில் பல்கலைக்கழகங்களில் பரவலாக கடைமுறையிலுள்ளது.

நல்ல நினைவாற்றலுள்ள மாணவர்கள் மிகவும் தேவையானவற்றை நன்கு நினைவிலிருத்தி மற்றவை பற்றிய ஒரு தெளிவான சித்திரத்தை மனதிற் கொண்டிருப்பதால் புத்தகங்களின் தாள்களை புரட்டாமல் அவர்களால் வேகமாகச் செயற்பட முடிகின்றமை அவர்கட்கு ஒருவாய்ப்பகிறது. எனவே நினைவாற்றல் பயனற்றது என்று கூற இயலாது. ஆயினும் விடயங்களைப் பகுத்து ஆராயவும் புதிய பிரச்சனைகட்கு முகங்கொடுப்பதிலும் நினைவாற்றலை விடச் சிந்தனை ஆற்றலுக்கு 'திறந்த புத்தக முறை' ஊக்கமாளிக்கிறது.

எவ்வாறன முற்போக்கான பரீட்சை முறைகட்கும், கல்விச் செலவு அதிகமாயிருக்கும், அதை விடவும், வருடா வருடம் வேறுபட்ட விதமான கேள்விகளைக் கொண்ட வினாத்தாள்கள் தேவைப்படும். பரீட்சகர்கள் கேள்விகளைத் தயாரிக்கவும் விடைகளைத்திருத்தவும் கடுமையாக உழைக்க வேண்டும். கல்வியின் நோக்கம் சுயாதீனமாகச் சிந்திக்கக் கூடிய மனிதர்களை உருவாக்குவது என்றால் பாடசாலைமட்டத்திலேயே இவ்வறான பரீட்சை முறை சில பாடங்களிலேனும் அறிமுகமாக வேண்டும். இலங்கையில் கல்விமுறையில் சீர்திருத்தங்கள் பற்றியும் பரீட்சைமுறையில் சீர்திருத்தங்கள் பற்றியும் பாரிய முறையின் சிந்தனைகள் ஏற்பட்ட போது கல்விக்கான முதலீட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பாடசாலைகளின் பரவலாக்கம், மாணவர்களதும் அதையொட்டி ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, பாடநூல்களின் தயாரிப்பும் விநியோகமும் போன்றன ஒரு புறம் எண்ணிக்கை அடிப்படையிலும் மறுபுறம் புதிய அணுகுமுறைக்குத் தேவையான முதலீட்டின் அடிப்படையிலும் அதிகமாயிற்று. இரண்டையும் ஒரே நேரத்திற் செய்வது இயலாமற் போனதற்குத் தரமான ஆசிரியர்கள் போதமையும் பயிற்றுவிக்கும் வசதிகள் போதாமையும் முக்கியமான காரணங்களாயின. எனவே மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் சில அரை குறையாக நடைமுறைபடுத்தப்பட்டன. சிலவற்றால் ஏற்பட்ட பிரச்சனைகள் அடையாளங்காணப்பட்ட போதும் அவற்றைத் திருத்த இயலாத சிக்கல்கள் ஏற்பட்டன. 'புதிய கணிதம்' போன்றவை ஏற்படுத்திய பாதிப்புக்களிலிருந்து நாம் இன்னமும் முற்றாக விடுபடவில்லை.

எவ்வாறயினும் க.பொ.த.போன்ற பரீட்சைகளைப் பொறுத்த வரை, பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகமானதன் விளைவாக வினாத்தாள்களின் செய்யப்பட்ட சீர்திருத்தங்க்ள் எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தின, முன்பு ஒவ்வொரு விடைத்தாளிலும் ஒவ்வொன்றாகத் திருத்தப்பட்டது. போதிய எண்ணிக்கையில் தகுதியான பரீட்சகர்களை நியமிக்க இயலாத சூழ்நிலையில், புதிய குறுக்குவழிகள் புகுத்தப்பட்டு அவையே நியதியாகி விட்டன. இன்று வினாத்தாள்களில் ஒவ்வொரு வினானவின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரே ஒரு சரியான விடை மட்டுமே உண்டு. முதலாவது பகுதியில் ஒரு சிறு பிழை நேர்ந்தால் அதன் தொடர் விளைவாக மற்றைய பகுதிகளில் ஏற்படும் பிழைகளைப் பரீட்சகர் பிழையென்று கொள்ள முடியுமே யொழிய, ஒரு சிறு தவறு காரணமாக ஏற்பட்ட அவற்றின் தொடர்ச்சியே அது எனவோ பின்பு சரியான முறையிலேயே பரீட்சார்த்தி தொடந்துள்ளார் எனவோ மதிப்பிட அவருக்கு வாய்ப்பில்லை. எண்களை எழுதும் போது ஏற்படும் ஒரு சிறு கவலையீனப் பிழையும் விடையை முற்றாகவே தவறாகக் காட்டுகிற. அதாவது கவனயீனப் பிழைக்கும் அறியாமையால் நிகழ்ந்த பிழைக்கும் குழப்பமான சிந்தனையால் நடந்த பிழைக்கும் வேறு படாமற் போகிறது.

இன்று மாணவர்கள் கட்டுரைகளைப் பாடமாக்குக்கிறார்கள். அங்கே சுயமான கருத்துக்கட்கு இடமில்லை. சூத்திரங்களைப் பாடமாக்குகிறதோடு வெவ்வேற விதமான கணக்குகளின் தீர்வுகளையும் முழு வதுமாகப் பாடமக்கிப் பரீட்சையில் போய் பாடமாக்கிய எத்தீர்வு பொருந்து மென ஊகித்து விடையெழுதுகிறார்கள். சிந்திப்பதை விட எதை எழுதினால் புள்ளிகள் கிடைக்கும் என்பதிலேயே கவனம் குவிகிறது. இவ்விடயத்தில் பாடசாலைகளை விட ட்யூட்டறிகள் கூடுதலாக வெற்றி பெறுகின்றன.

அடிப்படையான அறிவுத் தெளிவைப் பரீட்சைக்கும் படி ஒரு கேள்விக்கும் பல தெளிவுகளை விடைகளாக முன்வைக்கும் முறையிற் கூட, மாணவர்கள் நூற்றுக்கணக்கான வினாக்களையும் விடைகளையும் பாடமாக்குகிறார்கள். பரீட்சைத் திணைக்களத்தின் கையிருப்பிற் குறிப்பிட்ட அளவு வினாக்களே உள்ள காரணத்தால் இந்த "வினா வங்கி" முழுவதையும் பாடமாக்குகிவது மாணவர் கட்கு வசதியாகி விடுகிறது. இவ்வினாக்களின் நோக்கமே தோல்வியடைகிறது.

க.பொ.த. பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்களது உயர் கல்வியின் திசையை முடிவு செய்கிறதால் உள்ள கடும் போட்டி காரணமாகப் பரீட்சையில் அதிகம் புள்ளிகளைப் பெறும் தந்திரோபாயம் கல்வி அறிவை விட முக்கியமாகி விட்டது. பரீட்சைகளில் குறிப்பிட்ட விதமான கேள்விகளையே சல ஆண்டுகட்கு ஒரு முறை காண நேர்வதால் அடுத்த பரீட்சையில் வரக் கூடிய வினாக்களை ஊகிக்கக் கூடிய ட்யூட்டறிப் போதகர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுத் தருகிறார்கள். அவர்களது வியாபாரம் செழிக்கிறது. மற்றவர்கள் பின்தங்க நேரிடுகிறது. பாடசாலைகள் பயனற்றுப் போகிறன. ரியூட்டறிகளை முறியடிப்ப தென்றால் பரீட்சை முறை மாற வேண்டும். வினாக்களின் அமைப்பில் மாற்றங்கள் புகுத்தப்பட வேண்டும் விடைகளைத் திருத்துகிற முறை மாற்றப்பட வேண்டும் எந்த அரசாங்கமும் அதற்குப் போதியளவு பணத்தை முதலிட இயலாமலுள்ளது. அதற்கான அக்கறை கல்வித்துறையின் உயர் அதிகாரிகளிடமும் இல்லை.

இன்று தமிழ் அல்லது சிங்கள இலக்கணமே தெரியாத நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளனர் பட்டதாரிகளால் இலக்கணப் பிழையின்றி எந்த ஒரு மொழியிலும் எழுத இயலாதுள்ளது. கணிதச் சூத்திரங்களை மந்திரங்கள் போலப் பாடமாக்கி ஒப்பிக்கும் மாணவர்கள் உள்ளனரே ஒழிய ஒவ்வொரு சூத்திரமும் எதைக் குறிக்கிறது எங்கிருந்து வருகிறது என்ற தெளிவு வெறு சிலரிடமே உண்டு. விஞ்ஞானம் என்பது தகவல்களின் கோவையாகவும் சில கணித வித்தைகளாகவுமே அறியப்பட்டுள்ளது. மனிதர் மீற இயலாத விஞ்ஞான விதிகள் உள்ளன எனவும் அவை எவ்வாறு செயற்படுகின்றன எனவும் அன்றாட வாழ்வில் அவை எவ்வாறு இயங்குகிறன எனவும் இன்று அறியும் வாய்ப்பு மாணவர்கட்கு மறுக்கப்பட்டுள்ளது. புவியியல் முதல் சமூகவியல் வரை வெறும் தகவல்களின் குவியல்களாகவே இன்று கல்வி அமைந்துள்ளது. இதை மாற்ற இயலும். ஆனால் முதலில் கல்வியின் நோக்கம் பற்றிய அரசாங்கக் கொள்கை தெளிவு பட வேண்டும். இன்றைய பரீட்சை முறை, கல்வித்துறையின் சீரழிவின் விளைவுகளில் ஒன்று. கல்வித் துறையின் சீரழிவு நம் சமூகச் சீரழிவினின்று பிரிக்க இயலாத ஒன்று. கல்வித் துறையின் சீராக்க முயற்சிகளை முதலில் அத் துறையின் அடிப்படையான பலவீனங்களை நேர்மையாகக் கண்டறிந்ததன் பின்னரே நடைமுறைப்படுத்த இயலும். ஆனால் இன்று மேற் கொள்ளப்படுகின்ற "சீர்திருத்தங்கள்" கல்வித்துறையில் தேவையான முதலீட்டைப் பற்றிய கணிப்பின்றியும் அரசியல் வசதி கருதியும் அந்நியத்தூண்டுதலின் பேரிலுமே நடை பெறுகின்றன. எனவே நமது பாடசாலைக் கல்வி இன்னும் சிலகாலத்துக்கு மேலும் சீரழிவது எதிர் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

> இன்றைய பரீட்சை முறை கல்வித்துறையின் சீரழிவின்று பிரிக்க இயலாத ஒன்று. கல்வித்துறையின் சீரழிவு நம் சமூகச் சீரழிவினின்று பிரிக்க இயலாத ஒன்று.

# எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன்!

பேராசிரியர் க.கைலாசபதி

**பேராசிரியர் கைலாசபதி நினைவு தினம் 06-12-2004**



இலக்கிய உலகிலே காலத்துக்குக் காலம் புதிய பிரச்சனைகள் தோன்றுவதுண்டு. அதே போல, காலங்காலமாக எழுப்பப்படும் சில வினாக்களும் உண்டு. அத்தகைய நித்தியமான வினாக்களில் ஒன்று, இலக்கியம் எதற்காக என்பதாகும். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இவ்வினாவிற்கு வேறுபடும் விடைகள் அளிக்கப்படலாம். ஆயினும், இலக்கியம் சம்பந்தமான அடிப்படைக் கேள்விகளில் மேலே குறிப்பிட்டதும் ஒன்றாகும். இலக்கியத்தின் குறிக்கோள் பற்றிக் கருத்து ரீதியாக விடை கூறுவதிலும் பார்க்க, இலக்கியக் கர்த்தாக்களின் நோக்கையும் போக்கையும் விவரிப்பதனால் விளக்கம் தேடுதல் விரும்பத்தக்கதாகும். தனிப்பட்ட ஓர் எழுத்தாளன் காதல், புகழ், பணம், சமய நம்பிக்கை, அரசியல் ஈடுபாடு முதலிய பல்வேறு காரணங்களில் ஒன்றோ பலவோ உந்துவதால் எழுதுகிறான் எனக் கூறலாம். எனினும், எழுத்தாளரைப் பொதுவாக நோக்குமிடத்து மூன்று நிலைப்பாடுகளைக் கவனிக்கலாம்.

எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி. சமுதாயத்தில் எல்லாக்காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும், இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வர்க்க வேறுபாட்டினால் இவை எழுகின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கின்றான். இந்நிலையில் மூன்று நிலைப்பாடுகள் பொதுவாக எழுத்தாளர்களிடையே காணக்கூடியதாய் உள்ளன.

ஒரு பிரிவினர் பிரச்சனைகளையும், முரண்பாடுகளையும் துன்ப, துயரங்களையும் எதிர் நோக்காதவராய், இவற்றுடன் சம்பந்தப்படாமல், இன்பமூட்டுவதையே எழுத்தின் தலையாய நோக்கமாய்க் கொண்டு அதற்கியையக் கற்பனைச் சம்பவங்களையும், கதைகளையும், உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குபவர். இவர்களில் சிலர் கூறும் வாதம் சுவையானது. "வாழ்க்கை பலருக்குத் துன்ப மயமாயுள்ளது என்பதை நாமும் அறிவோம். எனவே, துன்பமயமாயமைந்த வாழ்க்கைக்கு மேலும் துயர் கூட்டுவது போல, சஞ்சலத்தையும், அவலத்தையும், அருவருப்பையும் இலக்கியத்தில் எதற்காகப் புகுத்த வேண்டும்? ஆகவே, துன்பத்தின் மத்தியில் துளி நேர மாற்றத்தை அளிப்பதாய், கற்பனையிலேனும் களிப்பையும் கவர்ச்சியையும் நாம் கொடுத்து உதவ விரும்புகிறோம், முயல்கிறோம்." இவ்வாறு அவர்கள் தங்களது நிலைப்பாட்டிற்குச் சமாதானமும் விளக்கமும் கூறுவார்கள்.

நடைமுறையில் பெருவணிக நிறுவனங்களின் குரலாகவே இது இருப்பதைக் கண்டுகொள்ள அதிகநேரம் பிடிக்காது. தென்னிந்தியாவில் பெரும் தொழில் துறையாக வளர்ந்துள்ள சினிமா இத்தகைய வாதத்தின் துணையுடனேயே, 'அபினி' யாக மக்களுக்கு ஊட்டப்படுகிறது என்பதனை நாம் அறிவோம். பல இலட்சக்கணக்கில் வெளியிடப்படும் சஞ்சிகைகளும் "துன்பப்படும் மக்களுக்கு மகிழ்வூட்டுவதற்காகவே" வெளிவருகின்றன எனக் கூறப்படுவதுண்டு. "எனது குறிக்கோள் மக்களை மகிழ்விப்பது ஒன்றே" என்றுதான் ஜெமினி அதிபரும், ஆனந்த விகடன் நிறுவன ஆசிரியருமான எஸ்.எஸ். வாசன் எப்பொழுதும் கூறி வந்தார்.

அப்பிரிவினர் அனைவருமே பெருவணிகர் என்றோ, திட்டமிட்டு மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்போர் என்றோ நாம் கூறவேண்டுவதில்லை. இலக்கியம் தூய்மையானது. பேருணர்ச்சிகளுக்கு வாகனமாய் அமைய வேண்டியது. கற்பனை சார்ந்ததாய் இருக்க வேண்டியது என்று உண்மையாகவே நம்பும் எழுத்தாளரும் இருக்கக்கூடும். எவ்வாறாயினும் சமூகப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்காமல் மானசீக உலகில் இருந்து கொண்டு எழுதுவோர் ஒரு பிரிவினர் எல்லாம்.

வரலாற்று அடிப்படையில் நோக்கும் பொழுது, மன்னராட்சிக் காலங்களிலும், நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பிலும் பாராட்டப் பெற்ற' அரசவை' இலக்கியங்கள் இத்தகையன என்று பொதுப்படக் கூறலாம்.

தொடர்ச்சி 6ம் பக்கம


www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

# சேது சமுத்திரக் கால்வாய் யாருக்காக?

-Dr. சி. ஜமுனாநந்தா-

பாக்கு நீரினையில் இந்திய அரசினால் அமைக்கப்பட விருக்கும் சேது சமுத்திரக்கால்வாய் ஆனது இலங்கைக்கு பல பாதக விளைவுகளை ஏற்படுத்த விருக்கின்றது. ஆனால் இதன் பிரதிகூலங்கள் குறித்து அக்கறை எடுப்போர் குறைவாகவே உள்ளனர். இதனால் ஏற்படும் வரலாற்று, கலாச்சார, சூழலியல், பொருளாதார, இராணுவ, அரசியல் பாதிப்புகளை நோக்கும் போது இதனை எதிர்ப்பது அவசியம். ஆனால் அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தான் கேள்விக்குறி. புராண காலங்களில் வரும் நாரதர் போன்று இன்றைய காலத்தின் நாரதர்களாக உலக வல்லரசும் பிராந்திய வல்லரசும் செயற்படுகின்றன. அவற்றின் ஏவலளர்களாகவே எமது அரசும் செயற்படுகின்றது.

வரலாற்று ரீதியில் கடலால் அமிழ்ந்து போன காவிரிப்பூம்பட்டணமும் வட இலங்கையும தரைத்தொடர்பை கொண்டு இருந்தது. இராமர் அணை மூலம் தரைத்தொடர்பு இருந்தது. இது ஒரு அகன்ற தமிழ்தேசம் எழுச்சி பெற இணைக்கக்கூடிய பூகோள அமைப்பு. ஆனால் இதனுள் கால்வாய் அமைத்தால் இந்திய தேசியம் என்ற போர்வையில் தமிழ்த் தேசியம் அடக்கப்படும். ஏனெனில் அங்கு பணிபுரிபவர்களில் மேல் நிலை உத்தியோகம் வட இந்தியருக்கும் கூலி வேலை மூலம் உழைப்புச்சுரண்டல் தமிழருக்கும் கிடைக்கும். வரலாற்றில் கடினமான வேலை தமிழர்கள் செய்வார்கள் என்பதற்கு இலங்கையில் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட புகையிரத பாதை போன்று வட இந்தியரால் சேது கால்வாய் அமைக்க தமிழர்கள் உபயோகிக்கப்படுவார்கள். தமிழ்நாட்டில் உள்ள திராவிட முன்னேற்றக்கழகங்கள்(அண்ணா) தங்கள் தி.மு.க. கழகங்களின் முன்னேற்றதிற்கு இத்திட்டத்தினை முன்னெடுக்கின்றனவே அன்றி திராவிடரின் முன்னேற்றதிற்கு அல்ல என்பது விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும்.




கலாச்சாரச் சூழலை நோக்கும் போது வர்த்தகப்போக்கு அதிகரித்து போதைப்பொருள் கடத்தப்படும் இடைநிலையாக இக்கால்வாய் அமைய வாய்ப்பு அதிகரிக்கும்.

சூழலியலை நோக்கும் போது கடற்சூழலும் தரைச்சூழலும் அவதானிக்கபடல் வேண்டும். கடல் சூழலில் பல அருகிய மீன் இனங்கள் உயிர்வாழ்வது அழிக்கப்படும். கடற்பூக்கள் முற்றாக அழிவடையும். திமிங்கிலங்கள் அழிவடையும். முத்து உருவாதல் குன்றும். பவளப்பாறைகள் அழிவடையும். கடல் சூழல்மாசடையும் கடந்தா வரங்கள் அருகும். தரைச்சூழலை நோக்கும் போது மிக அண்மையில் உள்ள யாழ்ப்பாண தீவகற்பமும் அதனை அண்டிய தீவுகளும் கடல் அரிப்பிற்கு உட்படும். நிலத்தடி நீர் உவர் நீராக மாறும் நிலநடுக்கம் ஏற்படும். வாய்ப்பு உண்டு. சேது கால் வாயின் அச்சும் வடகிழக்கு தென் மேற்கு பருவக் காற்றின் அச்சும் சிறிய கோண இடைவெளியில் அமைவதால் தென்மேல் பருவக்கா ற்றின் தாக்கமும் வடகீழ் பருவ பெயர்ச்சிக்காற்றினால் சேதுசமுத் திரத்தில் ஏற்படும் சுழிப்போட்டமும் யாழ்குடாவில் கடல் அரிப்பு வீதத்தை அதிகரிக்கும். மேலும் நிலத்தடி நீர் உவராகும் வீதத்தையும் அதிகரிக்கும். மேலும் இந்நீரோட்டங்களின் சக்தியின் நிலைக்குத்துக் கூறு புவி நடுக்கத்தை யாழ்குடா நாட்டில் ஏற்படுத்த ஏதுவாகும்.

இராணுவச் சூழலை பார்க்கும் போது வடஇலங்கை கடற்கரையில் இருந்து சில மைல்கள் தூரத்தில் பாரிய கடற்படைக்கப்பல் நடமாட்டம் அதிகரிக்கும். அவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் பாதுகாப்பு ஒப்பத்தினை அமுல் படுத்தினால் யாழ்குடா நாட்டில் 40% நிலமும் 80% நீர்ப்பரப்பும் இலங்கை-இந்திய இராணுவ சூனியப்பிரதேசமாக மாறிவிடும்.

அரசியல் சூழலை கருதும் போது இத்திட்டம் அமுல் படுத்தப்படுவதால் தென்னியத்தமிழருக்கு இலாபம் கிடைக்கும் என்ற மாயையும் பொருளாதார இராணுவ ஒத்துழைப்பு என்ற தென்னிலங்கை அரசியல் வாதிகளின் ஆதங்கமும் குரல் எடுக்க முடியாத தமிழரின் நிலையும் முற் றாகப் பாதிக்கப்படும்

ஒரு நாடு தனது எல்லையுள் அமைக்கும் கட்டமைப்புக்கள் மற் றைய நாட்டைப் பாதிக்கக்கூடாது என சர்வதேசச்சட்டம் உள்ளது. இச்சட்டம் முதன்முதலில் கனடா விற்கும் ஐக்கிய அமெரிக்காவிற்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கினைத்தீ ர்க்க உருவாக்கப்பட்டது. அதாவது கனடாவில் உள்ள இரசாயனத் தொழிற்சாலையால் ஐக்கிய அமெரி க்காவில் சூழல் மாசுபட்டதால் அத னை நிறுத்த அச்சட்டம் பிரயோகிக் கப்பட்டது. அதேசட்டம் சிங்கப்பூர் தனது எல்லையுள் கடலை நிலமாக மாற்ற முற்பட்ட போது மலேசியா தனது கடல் சூழல் பாதிக்கப்படும் எனவாதிட்டு தடுத்தது. அதேபோல் யப்பான் அணுக்கழிவுகளை கடலில் அகற்றும் போது அவுஸ்ரேலியா எதிர்த்தது. அந்த வகையில் இலங்கையும் சர்வதேச நீதிமன்றில் சூழல் பாதிப்புகளை மேற்கோள் காட்டி வாதிடலாம். ஆனால் இலங்கை அரசு இந்திய மேலாதிக்கத்தை விரல் சுட்டி நிற்கத்தயாரில்லை.

பொருளாதார ரீதியிலும் இலங்கையின் துறைமுகங்களின் வருமானம் பெருமளவில் வீழ்ச்சி அடையும். ஓட்டு மொத்தத்தில் சேது கால்வாய்த் திட்டம் எதற்கு என்று கேள்வி எழுப்பினால் அது இந்திய பிராந்திய வல்லரசு நலன்களுக்கும் ஆதிக்கத்திற்கும் என்பதே தெளிவான பதிலாக இருக்க முடியும்.

# இந்திய றோ (RAW) வும் இந்து ராமு (RAM)ம

## (நரஸிம்ஹறன் ராம் ஆற்றிய காமினி திஸ்ஸநாயக்க நினைவுப் பேருரையை முன்னிட்டு)


ஹிந்து நாளேட்டினதும் 'இடதுசாரித்'தோற்றங்காட்டும் அரசியல்-சமூக விமர்சன சஞ்சிகையான /புறொட்லைனினதும் பிரதம ஆசிரியரான ராமுக்கு ஒரு இடதுசாரி முகம் இருக்கிறதாகப் பலர் எண்ணியிருந்தனர். அது இடதுசாரி முகமல்ல, இந்துத்துவ இந்திய மேதிக்க நலன் பேணும் பார்ப்பனிய முகம் என்பது இப்போது ஓரளவு தெளிவாகவே தெரிய வந்துள்ளது. இந்த ராமுக்கு சி.பி.எம் எனப்படும் பாராளுமன்ற 'இடதுசாரிக்' கட்சியில் செல்வாக்கு உண்டு. இச் செல்வாக்கும், சி.பி.எம் முடைய சீரழிவின் ஒரு அடையாளமே.

ராமின் அரசியல் செல்வாக்கின் அடிப்படை, 'இந்து' பத்திரிகை நடத்தும் குடும்பத்தில் அதிகம் தொழில் தெரிந்தவர் அவரே என்பதும் இந்து பத்திரிகைக்கு ஒரு நடுநிலை வேடங்காட்டி இந்திய மேலாதிக்க அரசியலை முன்னகர்த்துவதில் அவர் கைவந்தவர் என்பதுங் காரணமாக, நீண்ட கால குடும்பப் பூசலின் பின்பு அவரிடமே இந்து நிறுவனத்தின் முக்கியமான ஏடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளமையாகும். அவர் கடுமையான உழைப்பாளி என்பதிலோ, திறமையான பத்திரிகை நிர்வாகி என்பதிலோ, அறிவாளியும் எழுத்து வல்லமையுடையவரும் என்பதிலோ, எவரும் ஐயப்பட வேண்டியதில்லை. அவருடைய அரசியல் நேர்மை பற்றி யாருக்கும் ஐயமிருந்தாலும் அது கூட முக்கியமான பிரச்சனையல்ல. இவர் எந்த விதமான பத்திரிகை அரசியலை நடத்துகிறார் என்பதிலேயே நம்முடைய அக்கறை இருக்க வேண்டும். அந்த அரசியலில் எந்த விதமான காய் நகர்த்தல்கள் உள் ளன என்று நாம் கவனிக்க வேண் டும். ஏனெனில், ராம் வெறும் பத்திரி கையாளர் மட்டுமல்ல. அவர் ஒரு அரசியல் தரகருமாவர். அதற்கும் மேலாக, அவர், இந்தியப் பார்ப்பனிய அதிகார நிறுவனத்தின் ஒரு சூட்சு மமான கருவியுமாவார். ராமுடைய இந்திய அரசியலில் 'மதச்சார்பின்மை' என்ற முகத்துடன் இந்திய அதிகார வர்க்கத்தின் நலன்கள் முன்னெடுக்கப்படுகின்றன. மாஓவுக்குப் பிந்திய சீனாவை அவர் விரும்புகிறார். குறிப்பாக முதலாளியப் பாதையில் நடைபோடு கிற சீனாவை அவர் விரும்புகிறார். இந்தியாவுக்குப் பணிந்து போக ஆயத்தமாயுள்ள முஷாரஃபின் சர்வாதிகாரம் அவருடைய கண்ணுக்குத் தெரியாது. பாரதிய ஜனதாவுடனான முரண்பாட்டில் அவருடைய நிலைப்பாடு, பார்ப்பனிய நிறுவனம் தனது வர்க்க நலன்களை முன்னெடுப்பதில், பச்சையான மதத் துவேஷசத்திற்கு எதிரானதேயொழிய, இந்து மேலாதிக்கத்திற்கு எவ்வகையிலும் எதிரானதல்ல. காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்குப் போராடுகிற சக்திகள் பயங்கரவாதிகள் என்பதில், பா.ஜ.க, காங்கிரஸ் போலவே, ராமுக்கும் ஐயமில்லை. இந்தியாவினுள் சூழ்நிலைகளின் நிர்ப்பந்தத்தால் சேர்க்கப்பட்ட கிழக்கு இந்தியாவின் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களும் பயங்கரவாதப் போராட்டங்களே.

அமெரிக்காவைப் பகைக்காமல் எட்ட நிறுத்திச் சீனாவின் புதிய முதலாளிவர்க்க ஆட்சியுடன் சமரசம் செய்து, தென்னாசிய அண்டைநாடுகள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதிக்கம் செலுத்த முனையும் இந்திய மேலாதிக்கவாதத்தின் ஒரு குரலே ராம். அதற்கும் மேலாக, இந்த மேலாதிக்கத்தைக் குறிப்பிட்ட பிரச்சனைகளில் வழிநடந்துவதில் அவர் தனக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைத் தவற விடுவதில்லை

கியூபாவையும் கொரியாவையும் ஆதரித்து எழுதுகிறவர்கட்கு அவர் களம மைப்பார். நோம் சொம்ஸ்கி முதல் அமர்த்யாஸேன் வரையிலானவர் கட்கும் முக்கியத்துவம் வழங்குவார். சுருங்கச் சொன்னால், இந்திய மேலாதிக்க நலன்கட்குத் தீங்கி ல்லாதவாறு எந்த 'முற்போக்கான' விடயத்தையும் அவரால் ஆதரிக்க முடியும். ஆனால் நேபாள ஆயுதப் போராட்டமோ, இலங்கையின் தமிழர் விடுதலைப் போராட்டமோ, அவருக்கு ஏற்புடையவையல்ல.

ராமின் கடந்த நாலைந்து வருடக் காலப் பத்திரிகைக் தலையங்கங்களும் உரைகளும் அவற்றை வாசித்த இலங்கைத் தமிழரில் பெரும்பாலானவர்களைச் சினக்கச்செய்துள்ளன. அவரை இலங்கைத் தமிழரின் நண்பர் என்று நம்பியவர்களுக்கு அவரது நடத்தை அதிர்ச்சியளித்துள்ளது. ஆனால் அவருடைய அரசியலை விளங்கிக் கொண்டால் அதிர்ச்சிக்கு இடமிராது.



ராமுக்கு வட இந்தியாவில் அதிகம் அரசியல் செல்வாக்கு இல்லை. ஆயினும் புதுடில்லிப் பார்ப்பனிய அதிகார வட்டங்களில் அவருக்கு வலுவான தொடர்புகள் உள்ளன. சி.பி.எம். வழியாகச் செல்வாக்கு உண்டு. பத்திரிகைத் துறை மூலம் அடிப்படையில் முற்போக்கான சிலருடன் நெருக்கமான உறவு உண்டு. இவர்கட்கு /புறொண்டலைனில் இடையிடையே அல்லது ஒழுங்காக இடமளிக்கப்படும். ராம் பற்றிய இடதுசாரி மயக்கத்துக்கு இவர்கள் பயன்படுகின்றார்கள். எனினும் தென்னாசியா மீது இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களை நிறைவேற்றுவதில் ராமுவுக்குரிய பங்கு இலங்கை தொடர்பானது. எனவே தான் முக்கியமாக இந்துவும் குறிப்பிடத்தக்களவில் /புறொ ண்ட்லைனும் இலங்கையின் அமைதிப் பேச்சு வார்த்தைகளைக் குழப் புவதில் முக்கிய கவனங் காட்டுகின் றன. குறிப்பாக, ராம் பொறுப்பேற்ற பின்பு, தமிழ்த் தேசிய இன விடுத லைப் போராட்டத்துக்கெதிரான இந்துவின் போக்கு மேலுங் கடுமையானது.

காலஞ்சென்ற காமினி திஸ்ஸாநாயக்கா தொடர்பாக அண்மையில் ராம் எழுதிய ஒரு கட்டுரையும் அதையடுத்து அவர் ஆற்றிய காமினி திஸ்ஸாநாயக்க பேருரையும், சிங்களப் பேரினவாதிகளைக் களிப்பூட்டிய அதே அளவுக்குத் தமிழ் மக்களின் மனதில் வெறுப்பை ஊட்டின. அவருடைய உரை அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது. அதற்கு முந்திய அவரது கட்டுரையில், காமினி திஸ்ஸாநாயக்க நேர்மையான இனவாத உணர்வற்ற ஒரு பெருமனிதராகக் காட்டுகிறார். மாவலி அபிவிருத்தி த்திட்டத்தின் ஊழல் ஒரு புற மிருக்க, அதன் கீழ் அவர் முன்னெடுத்த இனவாத நோக்கிலான சிங்களக் குடியேற்றங்கள் பற்றியோ, யாழ் நூலக எரிப்பில் அவரது பங்கு பற்றியோ, மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரான செயல்கள் பற்றியோ ராம் அறிய மாட்டாரென்று யாரும் நம்ப இயலாது. ராமின் விடுதலைப் புலி எதிர்ப்பு இப்போது தமிழ் மக்களின் விடுதலையின் மீதான வெறுப்பாக விரிவு பெற்றுள்ளது என்பது அவரது உரையினின்று மேலும் தெளிவாகியுள்ளது.

தனது உரையில் ராம் சொன்னவற்றைத் தொகுத்துச் சொன்னால், இந்திய மேலாதிக்கம் இலங்கை மீது அழுத்தஞ் செலுத்தத் தமிழரின் தேசிய இன ஒடுக்கலைப் பயன் படுத்தியது. அதில் ராமுக்கு பங்கிருந்தது. இப்போது நிலைமைகள் தலைகீழாகி விட்டன. இந்திய அரசு நேரடியாகச் சிங்களப் பேரினவாத அரசை ஆதரிக்கிறது. ராமும் ஆதரிக்கிறார்.

விடுதலைப் புலிகள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு அமைதிப் பேச்சில் பங்கு பற்றிய போது அதை நம்ப வேண்டாம் என்று வாதித்த ராமும் அவரது ஏடுகளும், தம்மிடம் கூலிக்கு எழுதுகிற டி.பி.எஸ்.ஜெயராஜைத் தமது விடுதலைப்புலி எதிர்ப்புப் பிரசாரத்திற்குப் பாவிப்பதில் சிங்களப் பேரினவாத ஏடுகட்குப் பின்னிற்கவில்லை. அதே டி.பி.எஸ் ஜெயராஜையே, விடுதலைப் புலிகள் பிரிவினை நோக்கிலேயே தொடர்ந்தும் செயற்படுகின்றனர் என்று நிரூபிக்கச் சாட்சிக்கு அழைக்கிறார்.

இலங்கையின் சனாதிபதியும் எதிர்

**மோகன்**

க்கட்சித் தலைவரும் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிருவாக சபை ஆலோசனையின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு எவ்வகையிலோ இன்று இணக்கம் காட்டுவதை ராம் விரும்பவில்லை. அவர் இவ்விடயத்தில் ஜே.வி.பி.க்கு நெருக்கமாக நிற்கிறார்.

நான்கு ஆண்டுகட்கு முந்திய இலங்கை இந்திய வர்த்தக உடன்படிக்கை முற்றிலும் இந்திய வணிக நலன்கட்கு ஏற்பவே அமைந்தது என்பதை அறிந்தும், அதை நியாயப் படுத்துகிற ராம், இலங்கையுடனான பாதுகாப்பு உடன்படிக்கை பற்றி மகிழ்ச்சி தெரிவிப்பதில் வியப்பில்லை. இன்று இலங்கை பல அம்சங்களில் இந்தியாவின் மேலாக்கத்திற்குட்பட்டு வருவதையே அவர் இலங்கை-இந்திய உறவிலான நெருக்கத்தின் வளர்ச்சியெனப் பாராட்டுகிறார். இலங்கை இந்திய வணிகம், இலங்கையில் இந்திய மூலதனம் என்பன இலங்கைக்குப் பாதகமானவை என்பதைக் குழந்தையும் அறியும். ஆனால் ராம் அந்த விடயத்தை முற்றாகவே புறக்கணிக்கிறார். ஏனெனில், அவரது வர்க்க நலன்கள் இந்திய மூலதனத்தினுடையவை.

விடுதலைப்புலிகள், 'உள்ளக' சுயநிர்ணய அடிப்படையில் நியாயமான தீர்வு கிடையாவிடின், மீண்டும் பிரிவினை நோக்கித்தள்ளப்படுவோம் என்று சொன்னதற்கு, அவர், விடுதலைப்புலிகள் பிரிவினையைக் கைவிடவில்லை என்று வலிந்து பொருள் கொள்ளுகிறார். சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களது சுயாட் சியை மறுத்து, மேலும் அடக்கு முறையைக் குவித்தால், தமிழ் மக்கள் என்ன செய்யலாம் என்பது பற்றிய அக்கறை ராமிடம் இல்லை.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# பாதாள உலகக் குழுக்களும் அதன் பின்னணிச் சக்திகளும்

பாதாள உலகக குழுவினர் என்னும் சொற்றொடர் பச்சைக் குழந்தைகளுக்கும் தெரிந்து கொள்ளக் கூடிய தொன்றாகப் பிரபல்யம் பெற்றுத் திகழ்கின்றது. காலை முதல் இரவு வரை நாளாந்தம் ஊடகங்கள் அனைத்திலும் இப் பாதாள உலகம் பற்றி வாசிக்கப்படுகின்றது. அண்மையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய போதை வஸ்து வியாபாரச் சந்தேக நபரின் வழக்கை விசாரித்து அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தார். அந்த நபர் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒரு பெண் ஆவார். இவ்வாறான ஒரு தீர்ப்பை வழங்கி விட்டு பிற்பகலில் வீடு திரும்பிய வேளையே மேற்படி நீதிபதி அவரது வீட்டில் வைத்து மெய்பாதுகாவலர் சகிதம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பொலிஸார் இக் கொலை பாதாள உலகத்தவரது கை வரிசை என சந்தேகித்து விசாரணைகளை நடாத்தி வருகின்றனர். இது முதலாவது கொலையும் அல்ல முடிவானதாகவும் இருக்கப் போவதும் இல்லை. ஏனெனில் பாதாள உலகக் குழுக்களின் வலிமை சாதாரணமானவை அல்ல. அவை ஒவ்வொன்றும் பணம், ஆயுதம், உயர்மட்ட அரசியல் செல்வாக்கு, பொலீஸ் அதிகாரிகளின் அரவணைப்பு, சிறைச்சாலைச் செல்வாக்கு என்பனவற்றில் ஆழ வேர் ஊன்றி நிற்கின்றன.

பாதாள உலகத்தவரது தோற்றமும் வளர்ச்சியும் இருப்பும் தொழிற்பாடும் சற்று ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியவையாகும். நாட்டில் ஏற்கனவே குறுக்கு வழிகளில் சம்பாதிப்போரும் அடிதடி சண்டியர் கோஷ்டிகளும் இருந்து வந்தன என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் 1977ல் ஜே.ஆரின் ஆட்சியினது வரவோடு தாராளமயம் தனியார் மயம் என்ற நாசகரமான போக்குகள் நாட்டிற்குள் நாலாபுறத்திலிருந்தும் புகுந்து கொள்ள அனுமதிக்கப்பட்டன. அவற்றின் காரணமாக போதைப் பொருள் கடத்தல் மிக வேகமாகிக் கொண்டது. அதனைக் கடத்தும் பெரும் புள்ளிகள் வியாபாரத்திற்கு நாடு முழுவதும் குழுக்களையும் நபர்களையும் ஏற்படுத்தினர். அவற்றின் பாதுகாப்பிற்கு ஆயுதங்களும் அதற்குரிய வளங்களும் உருவாக்கப்பட்டன.

இத்தகையோருக்கு சமகாலத்தில் நடாத்தப்பட்டபேரினவாத யுத்தம் வாய்ப்பாக அமைந்து கொண்டது. ராணுவத்திலிருந்து தப்பியோடி வருவோர் இப் பாதாள உலகக் குழுக்களுக்கு வரப் பிரசாதமாக அமைந்தனர். ராணுவத்தில் பெற்ற ஆயுதப் பயிற்சியும் தாராளமாகப் பெறக் கூடியதாக இருந்த சிறியவகை ஆயுதங்களையும் இத் தப்பியோடி வந்த ராணுவத்தினர் மூலம் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. கொழும்பையும்



அண்மையில் பாதாளஉலகக் குழுவினால் படுகொலை செய்யப்பட்ட கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதியும் ஆவரது மெய்ப்பாதுகாவலரும் இறந்து கிடப்பதை படத்தில் காணலாம்.

ஏனைய சில நகரங்களையும் மையமாக வைத்து தோற்றுவிக்கப்பட்ட பாதாள உலகக் குழுக்கள் பிராதனமாக போதைப் பொருள் கடத்தல் வியாயபாரத்தையும் அதனுடன் இணைந்த சட்ட விரோத மக்கள் விரோதச் செயற்பாடுகளையும் கொண்டுருந்தன. போட்டிக்குழுக்களின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் கொல்வது இக் குழுக்களின் பிரதான செயற்பாடாகியது. அத்துடன் கூலிக்கு கொலைகள் செய்வது, பெரும் கொள்ளைகளில் ஈடுபடுவது, திட்டமிட்டு ஆட்கடத்தல்கள் புரிவது, பாலியல் வல்லுறவுகளுக்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது இவர்களது தொழிற்பாடாக இருந்து வருகின்றன.

இப் பாதாள உலகத்தவர்களது நடவடிக்கை பற்றிப் பேசும் போது இத்தகைய குழுக்களுக்கும் பெரும் பாராளுமன்றக் கட்சிகளின் தலைமைகளுக்கும் ஆட்சியில் இருக்கும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிறையவே தொடர்புகள் இறுக்கமாக இருந்து வருகின்றமை பகிரங்க இரகசியமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட இருண்ட ஆட்சிக்காலத்தில் இப் பாதாள உலகக் குழுக்களின் வளர்ச்சி செழிப்புற்று இருந்தன. ஒரு முறை சொத்தி உபாலி என்ற பாதாள உலகக் குழுவின் தலைவன் பொதுசன முன்னணி ஆட்சியில் கைது செய்யப்பட்ட போது ஐ.தே. கட்சியின் தலைமை சொத்தி உபாலி தமது கட்சியின் செயற்குழு உறுப்பினர் என பகிரங்கமாகவே உரிமை கொண்டாடியமை தற்செயலானதல்ல. இது ஐ.தே.க. மட்டுமன்றி சிறிலாங்கா சுதந்திரக் கட்சிக்குப் பின்னாலும் பாதாள உலகக் குழுக்கள் உண்டு.

காஞ்சி காமகோடி சங்கராச்சாரியாரே கடவுளின் துணையைப் பெறுவதற்குப் பதிலாக பாதாள உலகத்தைச் சேர்ந்த அப்பு என்பவரது தயவை நாடி அவரது அடியாட்கள் மூலம் தனது எதிரியான சங்கர ராமனை கொலை செய்வித்தார் என்ற குற்றச் சாட்டு வெளிவந்துள்ளது. இது இன்றைய சூழலில் பாதாள உலகக் குழுக்களின் ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுகிறதல்லவா? இத்தகையதொன்றே அண்மைய மேல் நீதி மன்ற நீதிபதியின் கொலையுமாகும்.

ஒரு உயர் பொலீஸ் அதிகாரி பகிரங்கமாகக் கூறிய ஒரு விடயம் முன்பு பத்திரிகைகளில் வெளிவந்ததை நினைவூட்டமுடியும். "நாங்கள் கஷ்டப்பட்டு ஒரு பாதாள உலக முக்கிய புள்ளியைக் கைது செய்த கொண்டால் உடனே அரசியல் வாதிகள், அமைச்சர்கள்.முக்கிய பிரமுகர்களிடமிருந்து அழுத்தங்களும் அதிகார வற்புறுத்தல்களும் வந்து விடுவதால் நாம் நமது கடமைகளை செய்ய முடிவதில்லை" என்று கூறியிருந்தார்..

இவற்றுக்கும் அப்பால் இப்பாதாள உலகக் குழுக்களின் பெருக்கம், செயற்பாடு, கட்டுப்படுத்த முடியாமை போன்றவற்றை மேலெழுந்த வாரியாக நோக்க முடியாது. இன்றைய தாராளமயம், தனியர் மயம் உலகமயம் என்பனவற்றின் சீரழிந்து செல்லும் கேடு கெட்ட பொருளதார சமூக அரசியல் பண்பாட்டுச் சீரழிவுகளின்மோசமான உற்பத்திகளில்

**அ.பூபதி**

ஒன்றாகவே பாதாள உலகக் குழுக்களை நோக்க முடியும். ஏகாதிபத்திய சார்பு நவகொலனித்துவ அமைப்பு முறை வலுப்படுத்தப்பட்டு வரும் சூழலில் அதன் உற்பத்தியும் அங்கமுமான பாதாள உலகக் குழுக்களை ஒழிப்பது என்பது வெறும் கண்துடைப்பேயாகும். அடிப்படைத் தவறுகளையும் அதன் அரசியல் பொருளாதார மோசடிகளையும் எதிர்த்து முறியடிக்க முற்படாத வரை பாதாள உலகத்தவரை முறியடிக்க முடியாது.

## நாங்கள் வாழ விரும்புகிறோம்

சமாதானமே!
சமாதான வாதிகளே!
நாங்கள் வாழ விரும்புகிறோம்
இல்லையென்றிடாதீர்கள்...
இப்போது நாங்களும்
இல்லாதவர்கள்தான்.........

உறவினர்களின் கல்லறைகள்
இன்னும் காலியாகவில்லை
மேடுகளில் இப்போதுதான்
கோரைப்புறக்கள் துளிர்விடுகின்றன.
மயானங்களைப் புதுப்பிக்க
இனிமேலும் விரும்பவில்லை.........

எங்கள் நம்பிக்கைகளை
இன்னும் இழக்கவில்லை...
சமாதனத் தேரை
இழுத்து இழுத்தே எம்
எதிர்பார்ப்புக் கயிறுகள்
இத்துப்போய் விட்டன......

ஆயுதங்கள்...
போர்க்கொடி தூக்கிய நாளில்
எத்தனை ஆராதனைகள்
அடிவாங்கி நடத்தியிருப்போம்.
அத்தனையும் அடங்கிப்போனதுதான்......
ஆராதனைகள் இன்னும் நடக்கின்றன.....

உயிருக்காகப் போராடி
உணவின்றியும் உறவுகளின்றியும்
தவித்துத் துடித்தபோதும்.....
பார்க்க நேர்ந்ததும் கேட்க நேர்ந்ததும்
வெடிச்சத்தமும் இரத்த நதிகளும்தான்.
இப்போது சுத்தமான காற்றை சுவாசிக்கிறோம்.

சில காலங்கள்........
புற்தரைகள்தான்
எங்களின் சாய்மான மெத்தைகள்
பார்வையிலே பதிந்தது
கேட்கையிலே காதுகளை கிழித்தது
வாங்கையிலே வதைத்தது...
உதைக்கையிலே வலித்தது
இவைகள் இது வரை குத்திய முத்திரைகள்.

எங்கள்...
வேதனையின் விழுதுகள்
ஆலமரங்களுக்குத் தெரிந்திருந்தால்
ஆலமரத்தின் விழுதுகள்
எப்போதோ தற்கொலை புரிந்திருக்கும்
எம்சோதனைகள் அவ்வளவு நீளமானது.

எம் உறவினர்களின் கல்லறைகள்
இன்னும் காலியாகவில்லை.
மேடுகளில் இப்போதுதான்
கோரைப் புறகள் துளிர்விடுகின்றன.
மயானங்களைப் புதுப்பிக்க
இனிமேலும் விரும்பவில்லை.....
.............

எஸ்.எம்.ஹசீர்
வவுனியா கல்விக் கல்லூரி...

## தோழர் நவத்திற்கு முதல் மாத நினைவஞ்சலியும் நினைவு நூல் வெளியீடும்

புதிய - ஜனநாயக கட்சியின் மறைந்த அரசியல் குழு உறுப்பினர் தோழர் சி. நவரத்தினத்தின் முதல் மாத நினைவஞ்சலி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆத்திசூடி வீதி கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் 07-11-2004 அன்று இடம் பெற்றது. கட்சியின் பொதுச் செயலளார் சி.கா.செந்திவேல் தலைமைதாங்கினார். கட்சியின் மூத்த தோழர் இ.கா.சூடாமணியும் கலைமகள் சனசமூக நிலைய மூத்த நிர்வாகி ச.பரமானந்தம் ஆகியோர் குத்துவிளக்கேற்றினர். தோழர் நவத்தின் படத்திற்கு அவரது துணைவியார் சந்திரா நவரட்ணம் மலர் மாலை அணிவித்தார். மகன்மார் நவாஸ்,மதன், நீதன் மகள் மற்றும் உறவினர் மலர் அஞ்சலி செய்தனர். தலைமை தாங்கிய தோழர் சி.கா.செ. தோழர் நவம் பின்பற்றி வந்த மாக்சிச லெனினிச கோட்டுபாடு நடைமுறைச் செயற்பாடு பற்றியும் அவரது இறுதி வரையான உறுதிமிக்க இலட்சிய நிலைப்பாடு பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார். ஒரு அர்த்தமுள்ள வாழ்வு வாழ்ந்து ஏனைய தோழர்களுக்கும் மக்களுக்கும் முன்னுதாரணம் காட்டி நின்றவர் தோழர் நவம் எனக் குறிப்பிட்ட சி.கா.செ. சமகால அரசியல் போக்குகள் பற்றியும் அதன் எதிர்விளைவுகள் சம்மந்தமாகவும் எடுத்துரைத்தார்.




நிலாவரையாய் நின்றாய்
நிலம் குளிர நீர்
இறைக்கத்
துலாவாய் கயிறாய்
துலாச் சுமந்த ஆடுகால்
பூவரசாய் பூத்தாய்
நவமே
நவமான செம்பூவாய்
பூத்தாய்
மணந்தாய்
பொதுவுடமைப்
பண்பாட்டிசையாய்
பரந்தாய், தலை
சாய்த்தோம்.
7-11-2004 கல்வயல்

மேலும் சிவ.இராஜேந்திரன் எஸ். பரமானந்தம், ஜே. சற்குருநாதன், ந.இரவீந்திரன், வி.மகாலிங்கம், ஆசிரியர் என்.செல்லத்துரை, அ.ஜீவரட்ணம், ஆகியோர் நினைவஞ்சலி உரைகள் நிகழ்த்தினர். அடுத்து "தோழர் நவம் பொதுவுடமைப் போராளியின் நினைவுகள்" நினைவு நூல் வெளியீடு இடம் பெற்றது. முதல் பிரதியை மூத்த தோழர் ஞா. சிறிமனோகரன் நவத்தின் துணைவியாரிடமிருந்து பெற்றுக் கொண்டார். மேற்படி நூல் 144 பக்கங்களைக் கொண்டதாகும். தோழர் நவம் பற்றிய நினைவுக் கட்டுரைகள் கவிதைகள் அஞ்சலிச் செய்திகள், படங்கள் என்பன உள்ளடங்கியிருந்தன.

இவ் அஞ்சலி நிகழ்வில் தோழர் க.தணிகாசலம் தலைமையில் "மனிதம் மண்ணில் உயரும் வரை" என்னும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. இதில் தோழர்கள் சோ.தேவராஜா ச.பன்னீர்செல்வம் அழ.பகீரதன் சிவ.இராஜேந்திரன். ஆகியோர் கலந்து கொண்டு கவி உரைத்தனர். நன்றியுரையுடன் இந்நினைவஞ்சலி நிகழ்வுகள் முடிவுற்றது. முன்னூறுக்கு மேற்பட்டோர் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு தோழர் நவத்தற்கு தமது உணர்வுபூர்வ முதல் மாத அஞ்சலியைச் செலுத்தினர். மதியபோசனத்திலும் கலந்து கொண்டனர்

# யாசீர் அரபாத்தும் பாலஸ்தீன மக்களின் விடுதலை போராட்டப் படிப்பினைகளும்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரும் பதா அமைப்பின் தலைவரும் பாலஸ்தீன அதிகாரசபையின் தலைவருமான யசீர் அரபாத் கடந்தமாதம் காலமானார். அவரது இறப்பை அடுத்து அவர் மீது பாராட்டுகளும் அதேவேளை பல விதமான விமர்சனங்களும் தெரிவிக்கப்படுகின்றன. இரண்டாம் உலக யுத்த காலத்தின் போது பாலஸ்தீனம் பிரிட்டிஷ் காலனியாக இருந்தது 1948–மே–14 ஆம் திகதி பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் நேரடி ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. அன்றே இஸ்ரேல் என்ற அரசும் தோற்றுவிக்கப்பட்டது. பாலஸ்தீனத்தை பாலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கும் போது பாலஸ்தீனத்திற்குட்பட்ட 20770 கிலோமீற்றர் பரப்பளவுள்ள பிரதேசத்தை பிரிட்டிஷார் யூதர்களிடம் ஒப்படைத்தனர். அப்பிரதேசமே இஸ்ரேல் என்ற அரசானது.

இஸ்பானியாவிலிருந்து இஸ்பெலாராணியினால் வெளியேற்றப்பட்ட யூதர்களும் ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களும், ஜேர்மனியிலிருந்து வெளியேறியவர்களும் மத்திய கிழக்கிற்கு வந்து குடியேறினர். நாடில்லாத அவர்கள் தொடர்ந்து பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியில் இருப்பதற்கு பிரித்தானியா வழிசெய்தது. பைபிளில் கூறப்பட்டுள்ளதாக யூதர்கள் நம்புகின்ற இஸ்ரேல் என்ற யூதர்களின் ராஜ்யத்தை உருவாக்குவதில் யூதர்களின் ஸியோனிஸ்ட்டுகள் தொடர்ந்து பல நடவடிக்கைகளை எடுத்து வந்தனர்.

மூன்று மத நாகரீகங்களாகக் கொள்ளப்படுகின்ற யூதம் கிறிஸ்தவம், இஸ்லாம், என்பன பாலஸ்தீன (ஜெருஸலேம்) மண்ணிலேயே தோன்றின. அத்துடன் உலகின் எல்லாப் பகுதிகளையும் இணைக்கின்ற மத்தியப் பகுதியான மத்திய தரைக்கடல் பகுதி பல்வேறு விதமான ஆக்கிரமிப்புகளுக்கு உட்பட்டிருந்தது. பிரித்தானியா வும் பின்னர் அமெரிக்க ஏகாதிபத் தியமும் கிழக்கை அவற்றின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான பலவி தமான நடவடிக்கைகளை எடுத்து வந்தன. எண்ணெய் வளமிக்க மத்தி யதரைக்கடல் பகுதிகளையும் அரபு நாடுகளையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பிரித்தானியா, அமெரி க்கா என்பவற்றின் ஏகாதிபத்திய அக்கறைகளுக்கு மிகவும் அவசிய மாக இருந்தது.

கிறிஸ்தவ – இஸ்லாம்– யூத மத முரண்பாடுகளையும் குறிப்பாக இஸ்ரேல் என்ற தேசத்தை உருவாக்குவதற்கு உதவுவதன் மூலம் ஏகாதிபத்திய அக்கறைகளை நிறைவேற்றிக் கொள்ள அவை முயன்றன. யூத விரோத நிலைப்பாடு கொண்ட 22 முஸ்லீம் நாடுகள் இஸ்ரேல் உருவாகுவதை எதிர்த்தன. அவற்றில் சில நாடுகள் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் தொடுத்தன. 1948 இல் யூத தேசமான இஸ்ரேலுக்கு எதிராக தோற்றுவிக்கப்பட்ட பதா என்ற அமைப்பு 1956 இல் அதன் இராணுவ பிரிவை கட்டியது. அதனாலும் இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது.

இஸ்ரேல் யூதர்களின் தேசமாக வேண்டும் என்பது பரிசுத்தமான தேசம், பாரம்பரியம் யூத ராஜ்யம், பைபிளிலில் குறிப்பிடப்பட்டுள்ள தேசம், பாரம்பரிய உரிமையும் வாக்குறுதி அளிக்கப்பட்டதன் அடிப்படையிலான தேசம் போன்ற அடிப்படையில் 'ஸியோனிசமாக' வளர்த்தெடுக்கப்பட்டது. 1967 யூன் மாதம் ஜோர்தான், லெபனான், எகிப்து, சிரியா, ஈராக் என்பவை மீது இஸ்ரேலியர்கள் தாக்குதல்களை நடத்தினர். அதன் விளைவாக ஜெருஸலேம் இஸ்ரேலியர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இத்துடன் அரபாத் முக்கியமானவராகிறார். இஸ்ரேலியர் மீதான எதிர்த்தாக்குதல் வெற்றி



இஸ்ரேலிய சியோனிசத்தை நிலைநிறுத்திய தியோடர் ஹேர்சியின் படத்தின் கீழ் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் சிரோன் இருப்பதைக் காணலாம்.

பெறாதபோதும் அரபு நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அரபாத்தின் தலைமையிலான பதா இயக்கத்தில் சேரத்தொடங்கினர். பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக போராடி வரும் அனைத்து அமைப்புக்களையும் ஐக்கியப்படுத்தும் வகையில் 1969 பாலஸ்தீன விடுதலை இயக்கம் யசீர் அரபாத் தலைமையில் அமைக்கப்பட்டது1973 இல் அரபு நாடுகள் இஸ்ரேலியர்களை திருப்பித்தாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. எகிப்து, சிரியா போன்ற ஆரம்பித்த நடவடிக்கைகளுக்கு ஈராக்கின் ஆதரவும் கிடைத்தது. இஸ்ரேல் படைகள் எகிப்து இராணுவத்தை சுற்றிவளைத்து தாக்கத் தொடங்கவே ஐ.நா சபை தலையிட்டு அங்கு அமைதியை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்தில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் தகவல் பிரிவு, பிரசார பிரிவு, கொரில்லா பிரிவு தாக்கி அழிக்கும் பிரிவு போன்ற பல பிரிவுகளாக விரிவாக்கப்பட்டது.

1974 இல் ஐ.நா. சபைக்கு சென்று 'ஒரு கையில் சமாதான சின்னமாக ஒலிவ் மரக் கிளையுடனும் இன்னொரு கையில் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஆயுதத்துடனும் வந்துள்ளேன். ஒலிவ்வை வைத்திருக்கும் எனது ஒருகை அதனைக்கைவிட்டு மற்றக் கையை இறுகப்பிடித்துக் கொள்ள இடமளிக்காதீர்கள்' என்று அரபாத் பேசினார். ஐ.நா. சபை ஸியோனிஸத்திற்கு எதிராக உறுதியாக எதனையும் செய்ய

~இ.தம்பையா~

வில்லை.

அதன் பிறகு பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் ஆயுத நடவடிக்கைகள் மேலும் அதிகரித்தன. விஷேட தாக்குதல் நடத்தும் பிரிவுகள் பணயக்கைதிகள் வைத்திருக்கும் பிரிவுகள் தற்கொலைப்படை என்பனவும் ஏற்படுத்தப்பட்டன. பல அரபுநாடுகள் பிரித்தானிய அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இணங்கிப் போகத் தொடங்கின. பிரதானமாக எகிப்து முதலில் அந்நிலைப்பாட்டை எடுத்தது. 1970 இல் ஜோர்தானிலிருந்து அரபாத் வெளியேற்றப்பட்டார். 1970 களில் இஸ்ரேலியர்களின் தலைநகர் வரையும் விடுதலைப் படைகளை நடத்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது. அதன்பிறகு அவர் தீயுனிசியாவிற்கு சென்று அங்கிருந்து இயங்கினார்.

1989 இல் சோவியத்யூனியனில் பாரிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டு சோவியத் யூனியன் உடைவிற்குள்ளானது. அதனால் சோவியத்தின் உதவியுடன் இருந்த பல அரபு நாடுகளில் பிரச்சினைகள் தோன்றின. பாலஸ்தீன இயக்கத்திற்கும் சோவியத்தின் உதவியின்றிப் போனது. இதனால் மீண்டும் எழுந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்தியதரை கடலில் அதனது ஆதிக்கத்தை நிலைநாட்ட வேகமாக செயற்பட்டது. 1990 இல் இடம் பெற்ற முதலாவது வளைகுடா யுத்தத்தில் அரபாத் ஈராக்கை ஆதரித்ததால் சில அரபு நாடுகளுடன் அவருக்கு பகைமை ஏற்பட்டது. இந்த பின்புலத்தில் பலவிதமான நெருக்குதல்களுக்கும் வற்புறுத்தல்களுக்கும் உட்பட்ட அரபாத் 1992 இல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீட்டுடனான சமாதான உடன் படிக்கையை இஸ்ரேலுடன் செய்து கொள்ள வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டார். அத்துடன் பாலஸ்தீன அதிகாரசபையின தலைவரானார். பாலஸ்தீனத்தின் சார்பில் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்ட யசீர் அரபாத்திற்கும் இஸ்ரேலின் சார்பில் கையெழுத்திட்ட அதன் பிரதமர் சிட்செக் ராபினுக்கும் 1994ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஒப்பந்தத்தின் விளைவாக 27 வருடங்களுக்குப்பின் 1994 யூலை 1ஆம் திகதி அரபாத் காசா பகுதிக்கு செல்ல முடிந்தது. இஸ்ரேலிய தேசத்துரோகி என்று குற்றஞ்சாட்டப்பட்டு ராபின் யூதர் ஒருவரால் கொலை செய்யப்பட்டார். பிறகு பதவிக்கு வந்த இஸ்ரேலிய தலைமைகளால் சமாதான நடவடிக்கைகள் சரியாக முன்னெடுக்கப்படவில்லை. 2001 ஆம் ஆண்டிலிருந்து மேற்கு கரையிலுள்ள பலஸ்தீன தலைமையகத்திலிருந்து அவர் வெளியேற முடியாதவாறு இஸ்ரேலிய படைகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தார்.

2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29ஆம் திகதி வயிற்றிலே ஏற்பட்ட பாராதூரமான நோவினால் பாரிசிலுள்ள இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இவர் நவம்பர் 3 ஆம் திகதி உணர்வற்ற நிலைக்குள்ளானார். 11ஆம் திகதி அவர் உயிரிழந்தார். அவருடைய இரத்தத்தில் ஏற்பட்ட குறைபாட்டினால் அவரது எல்லா அவைய வங்களும் செயலிழந்தன. அவரை மிகவும் ஒழுங்காக கவனித்துவந்த ஜோர்டானிய வைத்தியர் அஷ்ரப் - அல்- குப்தீ இரத்தக் குறைபாடுக்கு நஞ்சூட்டப்படுவதனால் ஏற்படலாம் என்பதால் அரபாத்திற்கு நஞ்சூட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளார்.

அவருடைய உடல் ஜெருசலேமில் புதைக்கப்பட வேண்டும் என்று விரும்பியிருந்த போதும் இஸ்ரேலியர்கள் மறுப்பு தெரிவித்ததால் மேற்குகரையி லுள்ள ரமல்லாநகரில் அவரது உடல் புதைக்கப்பட்டது.

ஆனால் ஜெருசலேமிலுள்ள அல்-அக்ஸா பள்ளிவாசலிலிருந்து மண் கொண்டுவரப்பட்டு அவரது புதைக் குழி மூடப்பட்டது.

பாலஸ்தீன தலைவர்கள் யசீர் அரபாத் நஞ்சூட்டப்பட்டு கொல்லப்படவில்லை என்று கூறினாலும் அதற்கு சாத்தியங்கள் இல்லாதிருந்தன என்று கூறமுடியாது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அரபாத் கடுமையான போக்கை கடைப் பிடிக்கிறார் என்றும் அவரை ஒரு பயங்கரவாதி என்றும் அமெரிக்க ஏகாதிபத்தியம் கூறி வந்தது. அவர் இருக்கும் போதே பாலஸ்தீன அதிகாரசபைக்கு பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண் டும் என்றும் அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வந்தது. அதன்படியே மொகமட் அப்பாஸ் பிரதமராக நியமி க்கப்பட்டார். அந்த அடிப்படையிலேயே 2000 ஆண்டிலிருந்து இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மீது தொடுத்து வந்த தாக்குதல்களை அமெரிக்கா கண்டும் காணாமல் இருந்தது.

அவரது இறப்பிற்குப் பிறகு மொகமட் அப்பாஸ் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரானார். பாலஸதீன அதிகாரசபையின் தலைவ



யஸீர் அரபாத் தனது கைத்துப் பாக்கியுடன் இலங்கை விஜயத்தின் போது காணப்படுகிறார்

ராக அகமட் கிவூரெய் நியமிக்கப் பட்டுள்ளார். பதா இயக்கத்தின் தலைவராக பாரூக்கட்டோம்பி நியமிக்கப்பட்டுள்ளார்.

சமாதான உடன்படிக்கையின் மூலம் பாலஸ்தீன தேசத்தை முழுமையாக கட்டியமைத்து விட முடியுமென்று அவர் நம்பிவிட்டார் என்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் மேற்கு நாடுகளையும் நம்பிவிட்டார் என்றும் பாலஸ்தீன அதிகார சபை நிர்வா கத்தின் கீழ் தேசத்தை கட்டிவள ர்க்க முற்போக்கான நடவடிக்கை களை எடுக்கவில்லை என்றும் அவரது திருமணத்திற்கு பின்பு மித வாதப் போக்கை கடைப்பிடித்தார் என்றும் அவர் மீது விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன.

விடுதலைப் போராட்டத்தில் அவரது தலைமைத்துவத்தால் எய்தப்பட்ட விடயங்களையும் சமாதான நடவடிக்கைகளினால் கிடைத்த பலாபலன்களையும் இலங்கைக்கும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்குமிடையிலான தொடர்புகளையும் இச்சந்தர்ப்பத்தில் அவதானிப்பது பொருத்தமானதாக இருக்கும். அடுத்து அவையற்றிப் பார்ப்போம்.

# அமெரிக்க ஜனநாயகம்

முதலாளித்துவ ஜனநாயகத்தைப் பற்றி பெரிதாக புகழ்வோர்கள் நீதித்துறை வேறு, நிர்வாகத்துறை வேறு என்றும் நீதித்துறையில் அரசு தலையிடாது என்றும் கூறுவர். முதலாளித்துவ அமைப்பில் அரச இயந்திரம் என்பது முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கே உண்டு.

அமெரிக்காவில் ஒரு புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்ததும். முதல் வேலையாக சட்டமா அதிபர் மாற்றப்படுவார். அதன் பின்பே ஏனைய மாற்றங்கள் இடம் பெறும். நீதித்துறையில் அரசு தலையிடாது என்பது உண்மையென்றால் சட்டமா அதிபரை மாற்ற வேண்டிய அவசியமில்லை. அவரைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அரசுக்கு சார்பாகவே அதாவது இருக்கிற அமைப்புக்கும் ஆட்சிக்கும் பங்கம் ஏற்படாத வகையிலேயே அவர் செயற்பட வேண்டும்.

அமெரிக்க நிர்வாகத்தில் இரணுவம் பெரிய பங்கை வகிக்கிறது. அமெரிக்காவின் பாதுகாப்பு ஆலோசகர் நிச்சயமாக இளைப்பாறிய ஒரு பெரிய இராணுவ அதிகாரியாகவே இருப்பார்.

அண்மையில் இராஜாங்க செயலாளராக விருந்த கொலன் பவல் நான்கு நட்சத்திர ஜெனரல். அவர் கூட்டுப்படைத் தளபதியாகவும் விளங்கியவர். 1991ம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்க இராணுவ நடவடிக்கையின் பிரதான சூத்திரதாரி.

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சை அலங்கரிப்பவர்கள் இராணுவத்தில் இருந்து இளைப்பாறிய பிரமுகர்களாகவே இருக்கிறார்கள். அண்மையில் இராஜினாமாச் செய்த ஆமிரேஜ் வியட் நாம் யுத்தகளத்தில் நின்றவர்.

அமெரிக்கா வெளிநாடுகளுக்கு அனுப்பும் பிரதி நிதிகள் குழுவில் ஒருவராவது இராணுவ அதிகாரியாய் இருப்பார். சிவிலியன் போர்வையில் அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள், ஒற்றர்கள் திரிகின்றார்கள் என்பதை நமது ஊடகங்கள் அடக்கியே வாசிக்கின்றன. அமெரிக்க வெளிவிவகார அமைச்சே இராணுவ மயப்படுத்தப்பட்ட தொன்று என்பதை மக்கள் விளங்கிக் கொள்வது அவசியம்.

# கியூபாகொடுத்த அடி

கடந்த மாதம் கியூபா அமெரிக்க நாணயமான டொலரை உள்நாட்டுப் புளக்கத்திற்குத் தடை விதித்து ள்ளது. ஏற்கனவே கை வசமிருந்த அ.டொலர்களை கியூபா நாணயமான பெசோவுக்கு மாற்றுவதற்கு ஆறு நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டது இந்தக் கால எல்லைக்குப்பின் அ.டொலர்களை வைத்திரு ப்பவர்கள் பத்துவீத தீர்வை செலுத்த வேண்டி யேற்படும் என அறிவிக்கப்பட்டது. கியூபாவின் மத்திய வங்கியின் தலைவர் தொலைக் காட்சி ஒளிபரப்பில் கியூபாவில் புளக்கத்திலிருந்து அமெரிக்க டொலர் இறந்து விட்டது என்று அறிவித்திருந்தார்

1993ல் இருந்து அ.டொலர் கியூபாவில் புளக்கத் திலிருந்தது அண்மை காலங்களில் புஷ் நிர்வாகம் கியூபாவை நிதிமூலம் திருகுவதற்கு நடவடிக்கை எடுத்துவந்துள்ளது.

அமெரிக்கா கியூபாவுக்குள் செல்லும் நிதியை முடக்கிய தற்குப் பதில் அடியாகவே கியூபா அரசின் நடவடிக்கை அமைந்துள்ளது.

கியூபாவில் புதிதாக புளக்கத்திற்கு விடப் பட்டிருக்கும் நாணயத்தில் ஐந்து பெசோ நாணயம் சே குவேராவின் முகம் தாங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும் ஃ பிடல் காஸ்ரோ வின் தலைமையிலான கியூபாவின் துணிகரமான இந்நடவடிக்கை அமெரிக்காவின் முகத்தில் வீழ்ந்த பலமான அடியாகும்.

# கே.டானியல் கடிதங்கள் விமர்சனம்


## "தோழர் ஒருவரின் மனக்குமுறல்"

தோழர் டானியல் இறந்து 15 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. 'கே. டானியல் கடிதங்கள்' என்ற நூல் விமர்சனம் இப்போது புதிய பூமியில் வெளிவந்துள்ளது. வெளியிட்ட திகதி வெளியிடுவதற்குரிய காரணம் தெரியவில்லை. புத்தக வடிவில் வெளியிட்டார்களா? அதன் பதிப்பு யாரால் வெளியிடப்பட்டது? போன்ற விபரங்கள் தெரியவில்லை. புதிய பூமியில் எவ்வாறு பிரசுரமாகியது. கடிதங்களில் இடைச் செருகல் ஏற்பட வாய்ப்புண்டு. விமர்சனம் செய்தவர் யார் என்பதையும் அறிய ஆவலாயுள்ளேன்.

இவ்விமர்சனம் கே. டானியல் அவர்களுடன் பழகிய ஒருவரால் நிச்சயமாக எழுதப்பட்டு இராது. புத்தகங்கள் கட்டுரைகள் விமர்சனம் செய்யப்படவில்லை. ஏனென்றால் அவரது நீண்ட முன்னுரையில் சந்தேகங்கள் ஏற்படாதவாறு அவரின் விளக்கம் தெளிவாக எழுதப்பட்டு இருக்கும். அவர் உயிருடன் இருக்கும் போது 2 அல்லது 3 முறை வாசிக்க வேண்டும் என்று எமக்கு அன்புக்கட்டளை இடுவார். குறிப்பாக நாட்டுப்புற ஏழை மக்களின் பாஷையில் அவர் எழுதியுள்ளதால் அவரை மார்க்ஸிய வாதியின் தோற்றத்தில் இருந்து மறைக்க சிலர் முயற்சித்து இருக்கலாம்.

தன்னை உயர்த்திக் கொள்வதற்காக இலக்கிய இலக்கணத்துடன் அவர் எழுதவில்லை. உண்மைகளை எழுதினார். தன்னால் அவைகளை மறைத்து எழுத முடியவில்லை என்று பிரகடனம் செய்து கொண்டவர் டானியல். உண்மைகளை எழுதாவிட்டால் உயர் சாதியின் அட்டூழியங்கள் வெளியில் தெரியாது என்பார். சாதியமைப்பில் தான் யாரென்று "என் கதை"யில் எழுதியுள்ளார். நேரடியாக உண்மைகளை எழுதியுள்ளார். அநேகமாக தமது சாதியைப்பற்றி எழுதத்தாளர்களோ கவிஞர்களோ இலக்கிய வாதிகளோ எழுதுவதில்லை. சிலர் நாகரிகமாக சலவைக்கலைஞர், முடி திருத்தும் வினைஞர் என்று எழுதியிருப்பார்கள். கடிதங்களில் செய்யப்பட்ட விமர்சனம் போல ஏற்படமாட்டாது. அவரைப் பற்றி கீழ்த்தரமாக எழுதினபடியால் என்னால் இவைகளை எழுத வேண்டும் என்று எனது உள்ளம் தூண்டிக் கொண்டு இருக்கிறது. இன்னும் எழுதலாம். ஆனால் கடிதங்களின் விமர்சனம் என்ற போர்வையில் எழுதியிருந்தபடியால் நீண்ட விமர்சனம் எழுதவில்லை. ஆனால் கடிதங்களினை மேற்கோள்காட்டி அவரைப்பற்றி கீழ்த்தரமாக சாதி வெறியனாக விமர்சகர் குறிப்பிட்டு இருக்கிறார்.

அந்தக் காலத்தில் துணிந்து உண்மைகளை எழுதினார். உயர்சாதியினர் அடிமைகளான ஒடுக்கப்பட்ட தமிழ்ப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட செக்ஸ் கொடுமைகளை எழுதினார். அன்று சிலர் டானியல் செக்ஸை எழுதுபவர் என்றும் விமர்சனம் செய்தார்கள். மாக்ஸ்



கே.டானியல் கடிதங்கள்
தொகுப்பு அ.மார்க்ஸ்
அடையாளம் வெளியீடு
(தமிழ் நாடு) டிசம்பர் 2003
விலை ரூபா80/=

வாதி என்பவர் கொடுமைகளை வெளிக்காட்டாமல் மாக்ஸின் கட்டுரைகளை மனப்பாடம் செய்து ஒப்புவித்தால் ஒருவர் மாக்ஸ் வாதியாகிவிடமுடி யுமா? சாதி வெறியர்களின் கொடு மைகளை எழுதினால் கிளிப்பிள்ளை போல் சாதிவெறியன் எனப்பட்டம் சூட்டுவதா? அப்படியானால் போராளிகளை பயங்கரவாதிகள் என்று குறிப்பிடலாமா?.

எமது தோழர்கள் டானியலைப் பற்றி தெளிவாக இருக்க வேண்டும். விலாசமற்றவர்களின் விமர்சனங்களை வெளியிடும் போது புதிய பூமி ஆசிரியர் குழு கவனமாக இருக்க வேண்டும். முடியுமானால் இந்த தவறை வெளிப்படுத்தி எனது அபிப்பிராயத்தை புதிய பூமியில் தெரிவிக்கவும். அப்போதுதான் நான் ஆறுதல் அடைவேன்.

உங்கள் தோழமையுள்ள
இ. நாகலிங்கம்

**ஆசிரியர் குறிப்பு**

புதிய பூமி செப்டம்பர் இதழில் 'டானியல் கடிதங்கள்' நூல் பற்றிய விமர்சனம் திருமுகனால் எழுதத்பட்டிருந்தது. அதற்கு எதிர் வினையாக இ.நாகலிங்கம் மேற்படி கடிதத்தை எழுதியுள்ளார். அவரது குறிப்பில் "டானியல் கடிதங்கள்" பற்றிய நூலின் விபரம் இல்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளமை ஏற்கக் கூடியதாகும். அதன் விபரத்தை இங்கு தருகின்றோம். மேலும் மேற்படி கடிதத்தின் மூலம் டானியல் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர் என்பது போலவும் அவர் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எழுதியவை யாவும் குறைபாடுகளோ தவறுகளோ அற்றவை என்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நாம் உடன்பட முடியாது ள்ளது. அத்துடன் டானியல் கடிதங்கள் என்ற நூலில் டானியல் அ.மார்க்சுக்கு எழுதிய கருத்துக்களில் காணப்பட்ட அரசியல் தவறுகளும் போதாமைகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக தேசிய இனப் பிரச்சினை பற்றி டானியல் வைத்திருந்த வரட்டு மார்க்சியப் பார்வையை அவரது கடிதங்களில் இருந்தே எடுத்துக்காட்டப்பட்டது. டானியலாகட்டும் வேறு எவராகட்டும் அவர்களது எழுத்து, பேச்சு, செயற்பாடு என்பனவற்றில் இடம் பெறும் மாக்சிசத்தின் பெயரிலான முறையற்ற கருத்துக்களை சரியான நிலைநின்று விமர்சனம் செய்வது புதிய பூமியின் நிலையாகும். இறந்து போனார் என்பதாலோ தனிப்பட விருப்பத்திற்குரியவர் என்பதாலோ படித்த கல்வியாளன் என்றகாரணத்தாலோ எவ்விதமான தாராளப் போக்கையோ சமரசப்போக்கையோ கைக்கொண்டு கருத்துச் சோரம் போவது புதிய பூமியின் நிலையல்ல. எனவே டானியல் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டோ அல்லது அவரது விமர்ச்சித்து குறை காணவேண்டும் என்ற நோக்கிலோ அவ் விமர்சனம் முன்வைக்கப்படவில்லை என்பதை கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

---

**இந்திய றோ........**

8ம் பக்க தொடர்ச்சி...

அப்படியான ஒரு சூழ் நிலையை இந்திய மேலாதிக்கக் குறிக்கீட்டுக்கு வசதியாகப் பாவிக்கிற கபட நோக்கம் இருந்தாலும் அதைக் கூறிச் சிங்களப் பேரினவாதிகளைச் சஞ்சலப்படுத்த அவர் விருப்பவில்லை. ராமைப் பொறுத்தவரை, இலங்கைத் தமிழர்கள், இன்று அவருக்குப் பெறுமதியற்ற பண்டம்.

அனைத்திற்கும் மேலாகத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்குத் தமிழகத்திலுள்ள சில சில்லறைக்கட்சிகள் போக எந்த விதமான அரசியல் ஆதரவுமில்லை பொது சன ஆதரவுமில்லை என்றும் சொல் லிச் சிங்களப் பேரினவாதிகளை மகிழ்வூட்டவும் முயன்றுள்ளார். ஜெயலலிதாவின் பரம அரசியல் விரோதியான ராம் அவருடன் முற்றாக உடன்படுகிற விடயம் ஏதேன் இருந்தால் அது இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலை மீதான வெறுப்பு ஒன்று தான். உண்மையில் ராம் ஜெயலலிதாவை விட ஒரு படி அப்பால் போகிறார் என்று கூடச் சொல்லலாம்.

ராம் சொன்னவை பற்றிச் சினப்பதில் பயனில்லை. இந்திய நிறுவனம் போகிற திசையையும் ராம் சார்ந்த பார்ப்பனிய மேலாதிக்க நலன்கள் அது போகுமாறு விரும்புகிற திசையையும் அவை சார்ந்து இலங்கை, தமிழக நிலவரங்கள் பற்றிய தனது அகச்சார்பான மதிப்பீட்டையுமே அவர் முன்வைத்துள்ளார். ராமைச் சினப்பதை விட, இந்திய மேலாதிக்கம் போகிற திசையை அறிவுறுத்தியதற்காகத் தமிழர்கள் அவருக்கு நன்றி கூற வேண்டும்.

தமிழ்த் தேசியவாதத்தலைவர்கள் எனப்படுவோர் இந்த ராமைக் கூப்பிட்டு இரண்டு ஆண்டுகள் முன்பு இலண்டனில் அமிர்தலிங்கம் நினைவுப் பேருரையை நடத்திய போதே, ராம் போட்டுடைத்த உண்மை ஏதெனில், இந்தியா இலங்கையின் குறுக்கிடுமாயின் அது தமிழர்கட்குச் சாதகமான முறையிலல்ல என்பதாகும். அண்மைய உரை, அதனை மேலும் விரிவுபடுத்தியுள்ளது என்பது தான் உண்மை. இந்தியாவின் உளவு நிறுவனமான றோவும் (RAW) இந்து நிறுவன ராமும் (RAM) ஒரே விதமான சிந்தனையில் இருப்பது புதிர் அல்ல. இந்திய ஆளும் வர்க்கப் பிராந்திய மேலாதிக்கத்திற்கு சேவை செய்வதில் ராம் றோவிற்கு குறைதவரலில். ராமை விமர்சிப்பதை விட இந்திய மேலாதிக்கம் பற்றித் தமிழ் மக்களுக்குத் தெளிவாக விளக்கி எச்சரிப்பது ஒவ்வொரு தமிழ்த் தலைவரதும் கடமை. அது போக, இந்தியாவின் நோக்கங்கள் சிங்களவருக்குச் சாதகமானது என்று சிங்களவரெவரேனும் நினைப்பது பெரும் முட்டாள்தனம். இன்று ஐலண்ட், சண்டேறைம்ஸ் பேரினவாத ஏடுகளே இந்திய ஊடுருவல் பற்றி எச்சரிக்கை மணியை ஒலிக்கத் தொடங்கியுள்ளன. ஆனால் யூஎன்.பி. ஸ்ரீ.ல.சு.க, ஜே.வி.பி, ஹெல உறுமைய என்பன கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. பழைய, பாராளுமன்ற இடதுசாரிகளும் ஊமைகளாய்க் கிடைக்கிறார்கள்.

இந்திய மேலாதிக்க எதிர்ப்பு, சிங்களவரையும் தமிழரையும் முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் இணைக்கக் கூடிய ஒரு விடயமாக அமையும் வாய்ப்பு உண்டு. அதை வெள்ளம் வருமுன் கட்டுகிற ஒரு அணையாக அமைப்பதாயின், நேர்மையான இடதுசாரி-முற்போக்கு - தேசபக்த சக்திகள் இன வேறுபாடின்றி ஒன்றுபட வேண்டும்.

---

# ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது

ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது
ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது
சொல்லிக்கொள்ளவும் மனசில்லை
சொல்லாமல் இருக்கவும் முடியலை
ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது
ஐயையோ யாழ்ப்பாணம் அழியுது
கல்விக் கொலை இங்கு நடக்குது
நித்தம் கல்விக் கொலை நடக்குது
ஆற்றல் உள்ள இளைஞனின் கல்வியை
ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்தார்கள்
அன்பாக அணையும் யுவதிக்கோ
அள்ளியே போட்டுக் கொடுத்தார்கள்
ஐயையோ ..................

கல்விக்காகத் தம்மை தானிழக்கும்
கலியுகப் பெண் தெய்வம் இங்குண்டு
பல்கலைப்பட்டம் பெற்றிடவே
படிதாண்டிப் போகவும் துணிந்தார்கள்
பல்கலை என்ற பெயரினையே
பல்கொலை என்றே மாற்றி விட்டார்
என்செய்வேன் என்செய்வேன்
என்செய்வேன்
என்இனமே என்செய்வேன்.
ஐயையோ ....................

கல்விகற்க வந்த கன்னியரை
கன்னிதானம் கேட்கும் கல்விமானே
உணவுப்பசியினை தீர்த்திட
இது உகந்த இடமல்ல
கல்விக்கூடம் ஒரு"ஆலயம்"
அங்கு கற்பிப்பவன் ஒரு "ஆண்டவன்"
உன்னை மதிக்கவில்லை என்பதற்கு
உனக்கென்ன உரிமை
அவனை (ளை) அறுக்க
ஐயையோ ..................

மதிப்பு மரியாதை என்பது
மளிகைக் கடையின் பொருளல்ல
அதுதானாக வரவேண்டும் புரிந்து கொள்
நடத்தை அதுவே நன்றானால்
நாலும் வருமே தன்னாலே
ஐயையோ ....................

அற(ரி)வாளி விரிவுரையாளருக்கு
அடிவருடும் சில ஆணுமுண்டு
படிக்காமல் பட்டம் (class) பெற்றிடவே
பண்பான வழியைக் கண்டாயோ
படித்துத்தான் pass (பாஸ்) பண்ணேண்டா
பல்கலை சென்ற பண்டிதனே
ஐயையோ ............

தன்னை மிஞ்சிப்போகும் மாணவனை
தட்டிக் கொடுப்பதை விட்டு விட்டு
தலைகால் புரியாமல் அறுத்தார்கள்
அறிவுசார் கூட்டத்தின் அரிவாளால்
அறிவாளி தெருவில் அலைகின்றான்
சேவகம் புரிந்த சேவகரை
சேர்த்தார்கள் விரிவுரை ஆற்றிடவே
இவர்கள் விரிவுரை ஆற்றினால்
என்னாகும் எம் தேசக் கல்விநிலை?
சங்கிலித் தொடரான இச் சாபத்திற்கு
சாவுமணி கட்ட யார் வருவார்
ஐயையோ ............

பல்கலைக் கழகப் பதவி பெற்ற
பாடம்வெட்டும் பச்சோந்திகளை
பகிரங்கமாகவே நான் கேட்கின்றேன்
உன் சொந்தப்பிள்ளைக்கு
இது செய்வியா?
அப்படி ஒன்று உனக்கிருந்தால் அது
நித்தம் நித்தம் உனைக் கொல்லுமடா
பாவ விமோசனம் பெற்றிடவே
நீ"காசிக்குப்" போனாலும் முடியாதடா
ஐயையோ ............

முடிவாய் ஒன்று உரைக்கின்றேன் கேளடா
இதற்கு ஒரு முடிவு கட்டுவேன் பாரடா!

கலியுகவரதன்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று11 டிசம்பர் 2004 பக்கம்12 விலை 12/- சுழற்சி 75

## புதிய- ஜனநாயக கட்சியின்
## மலையக பிரதேச மாநாடும் பொதுக் கூட்டமும்
**டிசம்பர் 18ம் 19ம் திகதிகளில் அட்டன் நகரில் நடைபெறும்**

# பாராளுமன்றத்தில் பேரினவாதத்தைக் கக்கி வரும் ஜே.வி.பி- ஹெல உறுமய தலைவர்கள

அண்மைய வாரங்களில் ஐ.ம.சு. முன்னணியின் முதலாவது வரவு செலவுத்திட்ட விவாதம் பாராளுமன்றத்தில் இடம் பெற்று வருகின்றது. ஆனால் அவ்விவாதங்களில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் பயனுள்ளவைகளாகத் தெரியவில்லை. மக்களை ஏமாற்றி வைத்திருக்கும் விடயங்களையே தமது வரவு செலவுத்திட்ட சாதனை என அரசாங்கத் தரப்பினர் கூறுகின்றனர். அதே வேளை ஏதோ மக்களுக்காகப் பேசுவது போன்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முதலைக்கண்ணீர் வடித்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு உரிய பிரசாரத்தை வரவு செலவுத்திட்ட விவாதத்திலிருந்தே ஆரம்பித்து நிற்கிறது.

ஆனால் இன்றைய பொருளாதார நெருக்கடியின் அடிப்படை உண்மைகள் பற்றி எவரும் பேசுவதாக இல்லை. நேர்மையும் மக்கள் சார்பும் பிரச்சினைகளின் தன்மைகளையும் அறிந்த இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பாராளுமன்றத்தில் இல்லை என்பது நோக்கப்பட வேண்டியதாகும். ஒரு சில சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தோர் அங்கே அமைச்சர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தத்தமது சுயத்தையும் நிறத்தையும் இழந்து பதவி பெற்ற ஊமையர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களிடம் பேச எதுவும் இல்லை. பேசுவதாக இருந்தாலும் சந்திரிகா அம்மையார் புகழ்பாடி அமைதிகாத்து வருகின்றனர்.

அதேவேளை போலி இடதுசாரி வேஷம் காட்டிநிற்கும் ஜே.வி.பி. யினர் இரட்டைத்தனமாகப் பேசி வருகின்றனர். தாமே வரவு செலவுத்திட்டத்தை இவ்வாறு உருவாக்க முன்னின்றவர்கள் எனக் கூறி அதற்கு உரிமை கொண்டாடுகின்றனர். அதே வேளை தொழிலாளர்களின் மக்களின் உரிமைகளுக்காகப் போராடப்போவதாகவும் சூளுரைக்கின்றனர். ஒருபுறம் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொண்டு நிற்கிறார்கள். மறுபுறம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு மறுமொழி கூற முடியாது திண்டாடுகின்றனர்.

இவ்வாறான இரட்டைவேடம் போட்டு நிற்கும் ஜே.வி.பி மக்களின் கவனத்தை திசை திருப்பவே பாராளுமன்றத்தில் பேரினவாதக் கூச்சல் கிளப்பி பௌத்த சிங்கள மக்களின் பாதுகாவலர்களாகக் காட்டிக் கொள்கின்றனர். புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வழங்கப்படுமானால் தெற்கில் இளைஞர்களை அணிதிரட்டி ஆயுதம் தூக்கிப் போராடப் போவதாக ஜே.வி.பி யின் நந்தன குணத்திலக்கா பெரும் குரல் வைத்துப் பேசியுள்ளார்.

மற்றொரு ஜே.வி.பி. தலைவரான விமல் வீரவன்சா பாராளுமன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பேச்சுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் அரசியலமைப்பின் எல்லைகளை அவர்கள் மீறி வருவதாகவும் குற்றம் சாட்டி பேரினவாதக் கருத்துக்களைக் கக்கிக் கொண்டார். பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை திருத்தி தமிழர் கூட்டமைப்பினருக்கு கடிவாளம் போட வேண்டும் என்றும் கூறினார். அத்துடன் விமல் வீரவன்சா புலிகள் இயக்கத்தைத் திட்டித் தீர்ப்பதிலும் பின் நிற்கவில்லை. பேரினவாத நிலைநின்று அவர் பேசிய பேச்சிற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பக்கப்பாட்டு பாடி நின்றனர்.

அதேவேளை பாராளுமன்றத்தில் துறவிகளின் கட்சியான ஹெல உறுமயவின் தலைவர்கள் பேரினவாதவெறிப் பேச்சில் ஜே.வி.பி .யினரையும் தூக்கி எறிந்தவர்களாக நின்று கர்ச்சிக்கின்றனர். தமிழர் தாயகம் என்ற ஒன்றும் இல்லை என்றும் அது எங்கே இருக்கின்றது எனச்சவாலும் விடுக்கின்றனர். ஒட்டு மொத்தத்தில் தமிழர் தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்று இல்லை என வாதிடுகின்றனர். அன்பு அகிம்சை போதிக்கும் காவி உடைதரித்த இந்த பௌத்த துறவிகள் இந்நாட்டின் ஒரு பகுதி மக்களான தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத விஷம் கக்குவதிலேயே தமது பாராளுமன்றக் காலத்தைக் கழித்து வருகின்றனர். இவர்களுக்கு சாதாரண சிங்கள பௌத்த மக்கள் அனுபவித்துவரும் துன்ப துயரங்கள் கண்களில் தெரிவதும் இல்லை, காதுகளில் கேட்பதும் இல்லை. இலங்கையில் 47 வீதமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களாக உள்ளனர் என்றால் அதில் பெரும் பகுதியினர் சிங்கள மக்களாவர் என்பது பற்றி இந்த பௌத்த சிங்களத்துறவிகளுக்கு அக்கறை கிடையாது. சுக போக வாழ்வும் ஆடம்பர நுகர்வும் கொண்ட இவர்கள் காவி உடைக்குள் இருந்து கொண்டு பேரினவாதம் பேசுவதில் வல்லவர்கள். இதுவரை காலமும் வெளியே இருந்து பேரினவாதம் கக்கிய இவர்கள் இப்போது பாராளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்களைப் பெற்று அதனையே பேரினவாத வெறிக்கக்கும் மன்றமாக மாற்றி வருகின்றனர். இவர்களது கண்ணும் கருத்தும் புலிகள் மீதும், தமிழர், முஸ்லீம், மலையகத் தமிழர் மீதுமாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் எடுத்ததிற் கெல்லாம் இனவாதக் கூச்சல் கிளப்பிப் பேசுவது ஒன்றும் புதுமையில்லை. முதலாளித்துவப் பாராளுமன்றம் ஆரம்பித்த காலம் முதல் அவ்வக் காலத்திற்குரிய இனவாதிகள் பாராளுமன்றத்தில் கூச்சலிட்டு வந்தமை வரலாறாகும். ஆனால் அவற்றின் எதிர் விளைவு தான் தமிழர்களை ஆயுதம் தூக்கவும் போராடவும் வைத்தது என்ற உண்மையை இவ் இனவாதிகள் உணரப் போவதில்லை. ஜே.வி.பி யும் ஹெல உறுமயவும் இவ்வாறு வக்கிர நிலை நின்று பேரினவாதம் பேசுவது தமது அரசியல் இயலாமையை மறைத்து சிங்கள மக்களைத் திசை திருப்பிக் கொள்ளவேயாகும்.

அதேவேளை இத்தகையோரின் இனவெறி வாய்க்கு அவல் கொடுப்பது போல் சில கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்பற்ற விதத்தில் பேச்சுக்களை நிகழ்த்தி வருவதையும் காண முடிகின்றது. பாராளுமன்றத்தைப் பயன்படுத்தி சிங்கள மக்களுக்கு மிக நிதானமானதும் பொறுப்பானதுமான பேச்சுக்கள் மூலம் உருப்படியான செய்திகளை வழங்குமுடியும். அதனை விடுத்து ஜே.வி.பி. ஹெல உறுமயவைச் சீண்டி விடும் செயல்களிலோ பேச்சுக்களிலோ ஈடுபடுவது பாராளுமன்றத்தை விளையாட்டின் மூலம் தமிழ் மக்களை திருப்திப்படுத்த முற்படும் இலகுவான வழி என்றே கொள்ள முடியும். இது முன்னையோரைப் பின்பற்றிச் செல்வதாக மட்டுமே இருக்க முடியும். எனவே வெறிகாரனுக்கு வீண் கதை கொடுத்து அர்த்தமற்ற உளறல்களுக்கு இடமளிப்பது போன்று தமிழ்த் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளாது தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களையும் சிந்திக்க வைக்குமாறான உருப்படி மிக்கப் பேச்சுக்களைத் தயாரித்து பாராளுமன்றத்தின் மூலம் பயன்படுத்த வேண்டும்.

ஜே.வி.பி. யும் ஹெல உறுமயவும் இந்நாட்டிற்கு கிடைத்த புதிய வகைச் 'சாபக்கேடுகள்' என்றே கூறுதல் வேண்டும். இதனை சிங்கள மக்களும் உணரவேண்டிய ஒரு காலம் வந்தே தீரும்.

### இ.தொ.கா.வின் இழுபறி....

1ம் பக்க தொடர்ச்சி

திருப்தியடையாத படியால் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்ளாத படியால் இ. தொ. கா பூரணமாக ஐ.ம.சு.மு. அரசாங்கத் திற்கு ஆதரவில்லாததை போன்ற நிலையே தொடர்கிறது. அதனால் மேல் கொத்மலை திட்டத்தில் அரசா ங்கத்தின் நிலைப்பாட்டை பூரணமாக இ. தொ. கா ஏற்றுக் கொள்ள வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது முழுநாட்டிற்கும் குறிப்பாக மலையக மக்களுக்கும் நாசத்தை விளைவிக்கப்போகிற மேல் கொத்மலை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சுப் பதவிகளை பதிலீடாக பெறுவதிலேயே இ. தொ. கா தலைமை கவனஞ் செலுத்துகிறது என்பது இரகசியமான விடயமல்ல.

மேல் கொத்மலைத் திட்டத்தின் விளைவுகளை தெரிந்து கொண்ட எவரும் அதற்கு ஆதரவளிக்க முடியாது. அரசாங்கத்துடன் இணைவதற்கும் பட்டம் பதவிகளை பெறுவதற்கும் ஒப்பந்த வேலைகளைப் பெற்று கமிஷன் பெறுவதற்கும் எதிர்ப்பை விட்டுக் கொடுக்கின்ற அல்லது அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு கொடுக்கின்ற நிலைப்பாட்டை எடுப்போர் நிச்சயமாக மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள ல்லர்.

ம. ம.மு மேல்கொத்மலை திட்டத்தை ஆதரித்தது. அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்குவதாக ஐ. தே. கட்சி அரசாங்கம் வக்குறுதிதந்ததன் காரணமாகவே அதனை ஆதரித்ததாக கூறுகின்றது. பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதை கருத்திற் கொள்ளாமலேயே இ. தொ. கா மேல்கொத்மலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஐ. ம. சு. முன்னணி அரசாங்கத்திற்கு சம்மதம் தெரிவித்து விட்டதாக ம. ம. முன்னணி இ. தொ. கா மீது குற்றஞ்சாட்டுகிறது.

நட்ட ஈடுகளை வழங்குவதன் மூலம் மேல் கொத்மலைத் திட்டத்தினால் ஏற்படப்போகிற பாதிப்புகளை போக்க முடியாது. ஐ. தே. கட்சி நடைமுறைப்படுத்தினாலும் ஐ. ம. சு. மு நடைமுறைப்படுத்தினாலும் பாதிப்பு பாதிப்பு தான்.

எனவே மேல் கொத்மலை ஆதரிப்பவர்களை மக்களும் வரலாறும் மன்னிக்கப்போவதில்லை. நேரத்திற்கு ஒரு முடிவெடுப்பது என்பது பேரம்பேசும் முதலாளித்துவ அரசியலின் லட்சணமாகும். இ. தொ. காவின் வித்தியாசமான நிலைப்பாடுகள் அதனது முதலாளித்துவ அரசியலையும் மக்கள் விரோத அரசியலையும் மேலும் அம்பலப்படுத்துகிறது.

### திருமலையில் இனவெறி ....

1ம் பக்க தொடர்ச்சி

திருமலைச் சம்பவங்கள் திட்டமிட்ட பேரினவாத செயற்பாடுகளேயாகும். திருமலைத் துறைமுகத்தைச் சுற்றி புலிகள் தமது நிலைகளை வைத்திருக்கிறார்கள் என்று தொடர்ச்சியாகப் பிரசாரப்படுத்தப்பட்டது.

ஆனால் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அவ்வாறு இல்லை என அறிக்கை செய்தது. அப்படி இருந்தும் சிங்கள மக்களிடையே புலிப்பீதி பரப்பப்பட்டே வந்தது. திருமலையில் மூவின மக்களின் அமைதியான இயல்பு வாழ்வைப் பாழ்படுத்துவதற்கு பேரினவாதிகள் எப்போதும் முயன்று வந்துள்ளனர். திருமலையில் மட்டுமன்றி கிழக்கு மாகாணம் முழுவதையும் பேரினவாதப் பிடிக்குள் கொண்டு வர தமிழ்-முஸ்லீம் முரண்பாட்டைப் பயன்படுத்துவது, அவ்வாறே தமிழ்-சிங்கள பகையுணர்வை முன்தள்ளுவது போன்றவற்றை நிகழ்ச்சி நிரலாக்குவதில் ஜே.வி.பி. திட்டமிட்டு செயலாக்கி வந்துள்ளது. அவர்கள் உருவாக்கிய 'கிழக்கின் உதயம்' என்னும் அமைப்பு இக் கைங்கரியத்தையே செய்து வருகின்றது.

திருகோணமலை பேரினவாதிகளின் கண்களுக்கு மிகவேண்டிய பிரதேசமாக இருப்பது போன்று அமெரிக்க இந்திய ஆதிக்க சக்திகளுக்கும் அவசியப்படும் ஒரு பிரதேசமாகும். குறிப்பாக இந்தியா இங்குள்ள நிலத்தடி எண்ணெய்க் குதங்களை ஏற்கனவே இலங்கையிடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ளது. மேலும் பதினைந்து குதங்களைப் பெற இருக்கின்றது. எனவே இந்திய நலன்களுக்கு திருகோணமலை அவசியப்படுவதால் பேரினவாதப் பக்கம் நிற்கும் இந்தியாவிடம் ஆலோசனை பெறப்படுவது நிச்சயமானதாகும். ஜே.வி.பி- இந்திய உறவும் வலுவானதாக இருக்கும் போது திருகோணமலைச் சம்பவங்களை அதனுடன் தொடர்பு படுத்தியே நோக்க வேண்டியும் உள்ளது.

எவ்வாறாயினும் திருமலையில் இனவெறியைத் தூண்டி அரசியல் லாபங்கள் பெறும் முயற்சிகளின் பின்னணியிலேயே யாவும் நடைபெற்று வருகின்றன 'என்பதே உண்மையாகும்.

### புலிகள் அவசர அழைப்பு......

1ம் பக்க தொடர்ச்சி

கூறிவந்த ஐ. தே. கட்சியின் தலைமை இனிமேல் ஆதரவளிக்கப் போவதில்லை என்று கூறியுள்ளது. இது பற்றி நோர்வே நாட்டிற்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் போகல்கம ஐ. ம. சு. முன்னணியில் சேர்ந்து விட்டார். அது போல் இன்னும் சிலர் சேரவுள்ளதாக அறிய முடிகிறது. முன்னணியின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஐ. தே கட்சியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இது மிகவும் வசதியான காரணமாகும். அவர் சமாதான பேசுவார்த்தைகளை முன்பு இழுத்தடித்து வந்தமை பற்றிய தெளிவும், அறிவும் உள்ளவர்களுக்கு அது புரியும். ஆயுதப்போராட்டத்தின் இடைநிறுத்தலுடன் நடைபெறும் பேச்சுவார்த்தையும் போராட்டத்தின் தொடர்ச்சியே ஆகும். இதில் சமரசங்கள் விட்டுக் கொடுப்புகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சுயாட்சி சமத்துவம் என்பன விட்டுக்கொடுப்புகளுக்கும் சமரசத்திற்கும் உரியனவல்ல.

'சர்வதேச சமூகத்தின்' பங்களிப்பு என்பன மிகவும் வரையறுக்கப்பட்டதாகும். மீண்டும் ஆயுதப்போராட்டமும் அரசயுத்தமும் தொடங்கப்பட்டால் அச் சமூகம் பார்வையாளராக இருந்து கொண்டு அரசயுத்தத்திற்கு உரமூட்டி வளர்த்துச் செல்லுமேயன்றி போராட்டத்திற்கு பக்கபலமாக இருக்கமாட்டாது.

மீண்டும் ஆயுதப்போராட்டம் தொடங்கப்படக் கூடாதென்றால் அரசயுத்தம் தொடரப்படக்கூடா தென்றால் பேச்சுவார்த்தை உடனடியாக தொடங்கப்பட வேண்டும். அப்பொறுப்பு ஐ.ம.சு.மு. அரசாங்கத் திடமும் ஜனாதிபதியிடமுமே இருக்கிறது. அத்துடன் ஐ.தே.கட்சி நொண்டிச்சாட்டுக்களை சொல்லிக் கொண்டு ஒதுங்கி நிற்க முடியாது. ஜனாதிபதி தேர்தலில் காட்டும் அக்கறையின் ஒரு பகுதியை யாவது சமாதானப் பேச்சுவார்த்தையைக் தொடங்குவதற்கு ஆதரவழித்துக் காட்டவேண்டும். மாவீரர் தின உரையினூடாக புலிகள் இயக்கத்தால் விடுக்கப்பட்டுள்ள அவசரமானதும் அவசியமான தெனுமான அழைப்பை உடனடியாக ஐ.ம.சு.மு. அரசாங்கமும் ஜனாதிபதியும் ஏற்க வேண்டும். அதன் அடிப்படையில் ஆக்கபூர்வ மான வழிகளில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். ஜே.வி.பி.யின் தீய உள்நோக்கங்களை நிராகரிக்க வேண்டும் . இந்தியாவின் ஆலோசனைகளில் தங்கியிருப்பதை விட சொந்தக் கால்களில் நின்று தூரநோக்குடன் செயல் பட வேண்டும். இன்றேல் அழிவுகளை மீண்டும் ஏற்படுத்தவே முடியும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3 மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.